In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாகித்திய அகாதெமி

இந்திய இலக்கியச் சிற்பிகள்

அருணகிரிநாதர்

வேல். கார்த்திகேயன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

அருணகிரிநாதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.நாகார்ஜுன மலைச் சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

(பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திய இலக்கியச் சிற்பிகள்

அருணகிரிநாதர்

வேல். கார்த்திகேயன்

சாகித்திய அகாதெமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Arunagirinathar: Tamil Monograph by Vel. Karthigeyan, Sahitya Akademi, New Delhi, 2010. Rs. 40.

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு: 2010

சாகித்திய அகாதெமி

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டடம், டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூர் 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018.

எண் 4, டி. எல். கான் ரோடு, கொல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

ISBN-81-260-2695-1

விலை: ரூ. 40

அச்சகம்: ஸ்ரீ ராம் பிரண்டிங் பிரஸ், சென்னை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகவுரை

மயிலம் முருகப்பெருமானுக்கு உகந்த திருத்தலம். துள்ளித் திரிந்த பள்ளிப் பருவத்திலேயே எம் முன்னோர் திருமுருகன் கோயிலுக்கு அழைத்துச் சென்று முருக பக்தியை ஊட்டிய காலத்து, அழகான இசைத்தமிழாய் முருகனைத் துதித்துப் பாடிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தேன். அவ்விசைப் பாடல்கள் சந்தப் பாவலப் பெருமான் அருணகிரிநாதரின் திருப்புகழ் எனும் அமுதப் பாடல்கள் என அறிந்தேன். கந்தரலங்காரம், கந்தரநுபூதி பாடல்கள் காலப்போக்கில் உள்ளத்தை ஈர்த்தன.

ஆனால் காலம் எதையும் மறப்பதுமில்லை; மறைப்பது மில்லை. கனிந்தது. எனவே, இத்தகைய சிறப்பு வாய்ந்த அருணகிரிநாதரின் வாழ்வையும் – வாக்கையும் பற்றிய செய்திகளை அறிய முற்பட்டேன். அதனை வடிவமைக்க முனைந்தேன். அருணகிரிநாதரின் சந்தநலமும் கற்பனை வளமும் சொல்லாட்சித் திறனும் பொருந்திய செய்திகளை இச்சிறுநூலில் அடக்கிவிடுவது என்பது அரிய செயல்தான்; இருப்பினும், நான் கண்டுணர்ந்ததை விண்டு விளம்பிட எண்ணமிட்டேன். உலகின் மிகப் பெரிய வெளியீட்டகமான சாகித்திய அகாதெமி அரிய வாய்ப்பினை எனக்கு நல்கியது. 'வாக்கிற்கு அருணகிரி' என்ற பெருமைக்குரிய அருணகிரி நாதரின் தேனார்ந்த திருப்புகழ் பாடல்களின் பெருமை மட்டு மல்லாமல், அவருடைய படைப்பிலக்கியங்கள் பலவற்றின் சிறப்பும் பாரத தேசம் முழுமையும் பரவிட வாய்ப்புக் கிட்டியது என மகிழ்ந்தேன்.

தமிழும் இசைநலமும் சந்தமும் சிறந்திடும் வண்ணம் தமிழ்க் கடவுள், முருகன் அருள் பெற்று, அருணகிரிநாதர் பாடியுள்ளார். இசைத்தமிழில் அவர் பாடிய திருப்புகழ் பலவாயினும் இப்போது கிடைப்பவை 1307 பாடல்களே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவற்றைப் படித்து, உணர்ந்து, நூலாக்கம் செய்திட முனைந்த காலத்து, முன்னின்று உதவியவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வ. ஜெயதேவன் அவர்களை நன்றியுடன் வணங்கி மகிழ்கிறேன்.

முருகப் பெருமானின் திருஅவதாரம் திருஞானசம்பந்தர் என்று தெரிவித்தவரும், சம்பந்தரைப் போல அடியேனும் பதினாறாயிரம் பாடல்கள் பாடவேண்டும் என்று ஆசை கொண்டவரும் அருணகிரிநாதர். நான் மேற்கொண்ட இந் நூலாக்கத்திற்குப் பெரிதும் உதவியவரும், திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களில் ஆய்வு மேற்கொண்டவரும் என் அருமை நண்பருமான முனைவர் சீதா. ராமதாஸ் அவர் களுக்கும் மெய்ப்புத் தாள் திருத்தம் கண்டுதவிய பேராசிரியர் முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம் மற்றும் செல்வி முனைவர் வேல். மகேஸ்வரி அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

இந்நூல் எழுதுங்காலத்தே நூல்கள் பலவும் கொடுத்துதவிய திருப்புகழ்த் திலகம் வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் அவர்களுக்கும், 'பாம்பன் சுவாமிகள்' மாத இதழின் ஆசிரியரும் பாம்பனார் பணிமன்ற நிறுவனருமான திரு. வி. கலைச்செல்வன் அவர்களுக்கும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கேட்ட அளவிலேயே நூல்களை வழங்கி உதவிய இசைப் பேராசிரியை முனைவர் திருமதி அங்கயற் கண்ணி அவர்களுக்கும் முனைவர் அரிமளம் பத்மநாபன், கவிஞர் ஆரூர். க. தங்கதாசன் தண்ிகை நாயகன் ஆகியோருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரிதாக்கி மகிழ்கிறேன்.

தமிழறிவோடு சமயச் சிந்தனை மேலோங்கிடவும் பன்னிரு திருமுறைகளின் பயன்பாடு அகில முழுவதும் பரவிட வேண்டும் என்னும் நோக்கில் திருமுறைகளை மாநாடுகள் பலவும் கண்டிடவும் முனைந்த காலத்தே முன்னின்று ஊக்கப் படுத்திய தாய்தந்தையர் திருநிறை பரிமளா வேல் முருகானந்தம் அவர்களுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வெழுத்துப் பணி சிறக்கவும் நிறைவு கொள்ளவும் ஊக்கமளித்து உற்றுழி உறுதுணையாக இருந்தவர்கள் என்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகவுரை

வாழ்க்கைத் துணைவியார் சிவ. இராஜேஸ்வரி, செல்வன் வேல். சிவக்குமார், வேல். கணேசன் ஆகியோர்க்கு உளங்கனிந்த நன்றி என்றும் உரியது.

நான் மேற்கொள்ளும் சமயப்பணி, தமிழ்ப்பணி ஆகியவை வெற்றிகரமாக நிலைபெற்று நிறைவு கொள்ளும் வகையில் 'இறையருளால் மங்களமாகட்டும்' என்று வாயார வாழ்த்தி நல்வாழ்த்து நல்கிடும் அன்புகெழுமிய பெண்ணின் நல்லாள் விசாலாட்சி சிவப்பிரகாசம் அவர்களுக்கு என் அகங்கனிந்த நன்றி என்றும் உரியது.

'முத்தைத்தரு' என்று முருகன் அடியெடுத்துக் கொடுத்திட, முத்தமிழ் நலமும் பொருந்திய முந்துதமிழ்ப் பாடல்களை அறிமுகம் செய்திட விழைந்த காலத்தே இந்த அரிய வாய்ப்பினை எனக்கு நல்கிய சாகித்திய அகாதெமிக்கும், அதன் உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் வேல். கார்த்திகேயன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

முன்னுரை	9
1. வாழ்வும் பணியும்	11
2. படைப்புகள்	27
3. சந்த இசை	66
4. முருக பக்தியும் தமிழும்	74
5. சமயம்	84
6. தத்துவம்	97
7. சமுதாயம்	106
8. இலக்கியத்திறன்	119
9. சிறப்புச் செய்திகள்	137
நிறைவுரை	140

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

முத்தமிழ் என்று போற்றப்படும் தமிழில் இசைத்தமிழ் என்பது ஒன்று. அந்த இசைத்தமிழ் வளர்ச்சியில் 14, 15 ஆம் நூற்றாண்டுகள் குறிப்பிடத்தக்கவை. 'சந்தப் பாவல பெருமான்' என்று போற்றப்படுபவர் அருணகிரிநாதர். இவர் மேற்கூறிய காலகட்டத்தில், திருவண்ணாமலையில் தோன்றியவர்; முருகப்பெருமானின் திருவருளால் பல்லாயிரக்கணக்கில் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார்.

'திருப்புகழ்' என்னும் சொல் 'இறைவன் புகழைப் பாடுதல்' என்னும் பொருளில் அமைகின்றது. திருப்புகழ் அனைத்தும் இசை சம்பந்தப்பட்ட சந்தப் பாடல்கள் ஆகும். 16,000 திருப்புகழ் பாடல்கள் அவர் பாடியுள்ளார் என்பர். தற்போது 1324 பாடல்கள் கிடைத்துள்ளன.

திருப்புகழுக்கு இசை அமைத்து, அவற்றைக் கச்சேரிகளிலும் பஜனைகளிலும், மேலும் பல வழிகளிலும் சான்றோர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். திருப்புகழ் பஜனை மரபை வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் பாடியருளினார்கள்.

திருப்புகழைத் தவிர அருணகிரிநாதர் திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

மேலும் சந்தப் பாடல்களைப் போற்றிப் பாதுகாக்கும் தன்மையில், ''தமிழ்க் கவிதைகளில் சந்தம்'' என்னும் கருத்தில் சங்ககாலம் முதற்கொண்டு அருணகிரிநாதரின் காலம் வரை உள்ள வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழில் சந்தப் பாக்களுக்கு அருணகிரிநாதரே முதல்வராகக் காணப்படுகிறார். முருகப்பெருமானின் பேரருளை நிரம்பப் பெற்றவர் அருணகிரிநாதர். முருகப் பெருமான் அடியெடுத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடுத்துச் சிறந்த திருப்புகழ் பாடல்களைப் பாடுமாறு பணித்திடவே, அவ்வாறே பாடிய எளியவர். தமக்கு முன்னோடியாக விளங்கிய ஞானசம்பந்த பெருமானின் தேவாரப் பதிகங்களை ஒப்ப, சந்த இன்பம் மிகுத்துப் பல பாடல்கள் முருகனின் மீது பாடியருளினார். திருமால், கணபதி, தேவி ஆகிய பிற தெய்வங்களையும் பாடியுள்ளார். திருப்புகழ்ப் பாடல்களுக்கு ஆதிகர்த்தா அருணகிரிநாதரே ஆவார்.

இராமாயணக் கதை நிகழ்ச்சிகளையும், சைவம் பற்றிய கருத்துகளையும் உள்ளடக்கியதாக அவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. வடசொற்கள் மிகுதியாய்க் கலந்திருந்தாலும் நல்ல தமிழ் மணம் கமழக் காண முடிகிறது.

அருணகிரிநாதரின் வரலாற்றையும் படைப்புகளையும் கொண்டு அவரின் தனித்தன்மைகளையும் சிறப்பு இயல்புகளை யும் பின்வரும் தலைப்புகளில் ஆராயலாம்.

முன்னுரை, வாழ்வும் பணியும், படைப்புகள் , சந்த இசை, முருகபக்தியும் தமிழும், சமயம், தத்துவம், சமுதாயம், இலக்கியத் திறன், சிறப்புச் செய்திகள், நிறைவுரை என்பன உட்தலைப்புகள்.

அருணகிரிநாதர் முருகப்பெருமான்மீது எல்லையற்ற பக்தி கொண்டு திருப்புகழ்ப் பாடல்கள் பாடியதோடன்றிப் பிற சமயக் காழ்ப்புமின்றித் திருமால், சக்தி, கணபதி போன்ற தெய்வங்களையும் பாடியுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் திருப்புகழ் என்பது ஒரு புதிய மைல் கல்லாகும். அக்கால மக்கள் சமுதாயம் பற்றியும், முக்திக்கு வழி நல்குபவன் முருகனே என்றும், விலைமாதர் பால் கொண்ட அன்பு மனிதனைப் பாழ்படுத்தி விடும் என்றும் எடுத்துக் கூறுவதோடு அக்காலச் சமுதாயத்தையும் படம்பிடித்துக் காட்டுகிறார் என்றால் அது உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1.வாழ்வும் பணியும்

அண்ணாமலையின் சிறப்பு

காரொழுகும் குழலாளைக் கருணைவழிந்
தொழுகு மிரு கடைக்கண் ணாளை
முரலிள நிலவொழுகப் புழுகொழுக
அழகொழுகும் முகத்தி னாளை
வாரொழுகும் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்கி னாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருணை உண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்போம்

-அருணாசல புராணம்

தமிழ் நாட்டில் புகழ்மிக்க திருத்தலங்களில் மிகச் சிறப்பானதும், பஞ்சபூதத் தலங்கள் ஐந்தனுள் ஒன்றான அக்னித் (நெருப்பு) தலமாகத் திகழ்வதும், அருள்மிகு உண்ணா முலையம்மை உடனுறை அண்ணாமலை ஈசன் கோயில் கொண்டிருப்பதான திருத்தலமும் திருஅண்ணாமலையே ஆகும். அதனை 'அருணகிரி' என்று ஆன்றோர் போற்றுவர். தன்னை வணங்கும் அடியார்களின் கொடிய வினை களைத் தீர்க்கும் திருமலை அண்ணாமலையாகும். நீண்ட தழல் பிழம்பாய் நிற்கும் மலை அண்ணாமலையாம். மாலும் அயனும் அகந்தைமிக்கு ஈசனின் அடியும் முடியும் காணப் பெறாமல் தோல்வியால் தளர்ந்த காலத்து அவ்விருவர்க்கும் எட்டாத சோதி மலையாய்த் திகழ்ந்தது திரு அண்ணா மலையாம். மாணிக்கவாசகர் இம்மலையிலிருந்து சில காலம் தங்கித்தவம் இயற்றியதும் உண்டு.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய தேவார மூவரும் போற்றிய திருத்தலம். குகை நமச்சிவாய சுவாமிகள், குருநமச்சிவாயர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள், பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ யோகி ராம்சுரத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குமார் போன்ற அருளாளர்கள் இறைவனைத் துதித்து, புனிதமடைந்த திருத்தலம் திருஅண்ணாமலையாம்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருஅண்ணா மலையை வலம் வந்து கொண்டே 'சோண சைல மாலை' என்னும் நூலைப் பாடியுள்ளார். இன்றைக்கும் மெய்யன்பர்கள் பலரும் இறைவன் புகழ் போற்றிப் பாடிக் கொண்டு மாதந் தோறும் முழுநிலா நன்னாளில் மலை வலம் (கிரிவலம்) வந்து இறைவனை வணங்கி அருள்பெற்று உய்கின்றார்கள் என்பது நாடறிந்த செய்தியாகும். இத்தகு பெருமைகளை உடையது அண்ணாமலை என்னும் திருத்தலம்.

அருணகிரிநாதரின் இளமையும் வறுமையும்

சிறப்புமிக்க திருவண்ணாமலை திருத்தலத்தில் இறை வனுக்குத் தொண்டாற்றும் நற்குடும்பங்கள் பலவுண்டு. அத்தகு சீரிய குடும்பம் ஒன்றில் தோன்றியவர் அருணகிரிநாதர் என்பது ஆன்றோர் கருத்து.

இவரது குலம், காலம், பெற்றோர் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. கி.பி. 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். முருகனையே கடவுளாகக் கொண்டு வணங்கிப் பாடி மகிழ்ந்தவர். இவரைப் பற்றி வழங்கும் வரலாறுகள் பல உண்டு. அருணகிரிநாதரின் தந்தை பெயர் தெரியவில்லை. தாயார் பெயர் முத்தம்மை என்பதாகும். இவர் இளம் பருவமாயிருக்கும் போதே வேளாளர் குலத்திலே பிறந்தவர் என்பது வரலாறு. இவர் முருகப் பிரானது பழைய வழியடிமை என்பதை இவருடைய நூல்கள் வாயிலாக அறியலாம்.

ஊழ்வினை காராணமாகப் பரத்தையர் மயக்கிற்பட்டு பொருளெல்லாம் இழந்தார். பொருள் உள்ளவரைத் தேடிச் சென்று பலவாறு புகழ்ந்து பாடிப் பொருள் பெற்றார். பெற்ற பொருளையெல்லாம் பின்னும் பரத்தையர்பால் இழந்தார். எனவே வறுமையும், பொல்லாப் பிணிகளும் இவரை வாட்டின. இவர் செய்கையைத் தமக்கையார் வெறுத்தார்; கண்டித்தார். ஆகையால் இவர் வாழ்விலே வெறுப்புக் கொண்டு உயிர்விடத் துணிந்தார்.

முன்வினைப் பயனாக அருணையம்பதி: இறைவன் ஒரு தவசீலர் வடிவில் தோன்றி, "அன்ப! நீ தவநிலையில் இருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகக் கடவுளை இடைவிடாது வழிபடுவாயாக'' என்று உபதேசித்தார். அவ்வுபதேசத்தை அவர் பொருட்படுத்த வில்லை. உற்றாரும் ஊராரும் நகைக்க வாழ்ந்தார். பின்னர், தன் நிலை கருதி அவரே வருந்தினார்.

கோபுரத்து இளையனார் அருட்காட்சி

அருணகிரிநாதர் அருணைக் கோயிலின் வடபால் உள்ள கோபுரத்தின் மேல் ஏறிநின்று கீழே குதித்து உயிர்விடத் துணிந் தார். முருகவேளின் வழிவழி அடிமையாதலால், முன் செய்த நல்வினைப் பயன் கைகூடும் நேரம் கூடிற்று. தம் தவறுகளை யெல்லாம் நினைந்து வருந்தியழுதார். அப்பொழுது அருணை யிலுள்ள கோபுரத்து. இளையனாரான முருகப்பிரான் அருணகிரியார் முன் தோன்றித் தம் கையால் அவரைத் தாங்கிப்பிடித்து, குருவடிவில் அருள் புரிந்து உபதேசித்தார்.

கந்தவேளைக் கண்டார் அருணகிரிநாதர் பெருவியப் புற்றார்! உரை தடுமாறியது உரோமம் சிலிர்த்தது! கரமலர் மொட்டித்து, இருதய கமலம் மலர, கண்கள் களி கூற, நுண்துளி அரும்ப, தழலது கண்ட மெழுகதுபோலத் தொழுது உளம் உருகி, உடல் கம்பித்து, ஆடிப்பாடி இறைவனைப் போற்றி நின்றார். பின்னர், தன்னிலை உணர்ந்த அருணகிரிநாதர் இதுவரையில் சிற்றின்பச் சேற்றிலேயே உழன்று கிடந்த தம் முன்பாக முருகவேள் அருட்காட்சி கொடுத்து நிற்பதைக் கண்டு, அலறி அழுதார்.

ஊனே றெறும்பு சீசீ மலங்க
ளோடே நரம்பு கசுமாலம்
ஊழ்நோ யடைந்து மாசான மண்டு
மூனோ டுழன்ற கடைநாயேன்
(திருப்புகழ் 1124)

'அஞ்சற்க' என அபயம் அளித்து, அடியவர் கூட்டம் தம்மைச் சூழவும், வேத ஒலி பக்கத்தில் முழக்கவும், மயில்மிசைத் தம் நடனகோலத்தைக் காட்டி முருகன் அவருக்கு அருளினார். முருகப்பிரான் 'நாதன்' பட்டத்தையளித்து, 'அருணகிரிநாத' எனப் பெயரிட்டு அழைத்து, இளநகையுடன் கண்ணோக்கம் மேலிடச் செய்து, திருவடிப்பேறும் அருளி, தம்கை வேலால் அருணகிரிநாதரின் நாவில் ஆறெழுத்தையும் பொறித்து அருட்காட்சி நல்கினார்; ஜெபமாலை அளித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரது மலம் மாயை இடராயவற்றை ஒழித்தார். 'சும்மா இரு, சொல்லற' என்னும் உபதேசத்தையும் யோகமார்க்கங்களையும் மெய்ஞ்ஞான உபதேசங்கள் பலவற்றையும் உபதேசித்து அருளினான் முருகப் பெருமான்.

முருகன் அருளால் திருப்புகழ்பாடுதல்

முருகப் பெருமான் அருள்பெற்ற அருணகிரிநாதர் துறவறத்தை மேற்கொண்டு வாழ்ந்தார். முருகப்பெருமான் அருணகிரிநாதரை நோக்கி, 'நமது பாத மலரைப் பாடுக' என்று பணித்தார். அருணகிரிநாதர் "நான் எவ்வாறு பாடுவேன்? முருகா! நற்றமிழ்பாட வேண்டுமானால், இருவினையற்று, இயல்கதி பெற்றிருக்க வேண்டுமே" என்று திருவடி வணங்கி வேண்டினார். "முத்தைத் தருபத்தித் திருநகை" என்று அடி எடுத்துக் கொடுத்து முருகப்பெருமான் அருளினார்.

முருகனின் திருவருளையே துணையாகக் கொண்டு, அருணகிரிநாதரும் "முத்தைத்தரு" என்னும் சந்தப்பாவை பாடி முடித்துப் பேருவகை கொண்டார்.

அண்ணாமலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

நல்லுபதேசமும் அருள்வாக்கும் பெற்ற அருணகிரிநாதர் தாம் பெற்ற பேற்றினை நினைத்து மகிழ்ந்தார். இழந்த கண்ணை மீண்டும் பெற்ற குருடனைப் போலப் பேரானந்தம் கொண்டார்; பாடிப் பரவினார். பிணியெல்லாம் நீங்கியவராய், முத்தமிழ்வித்தகராய், மெய்ஞ்ஞானியாய், அட்டமா சித்திகளும் வாய்க்கப் பெற்றவரானார். தமக்குக் குருவாக அமைந்த கோபுரத்திளையனார் திருச்சந்நிதியிலேயே தவ நிலையில் இருந்து வந்தார்; அவ்வப்போது சந்தப் பாடல்களையும் பாடி வந்தார். அண்ணாமலை ஈசன் ஒரு நாள் அவர் முன்தோன்றித் திருநீறு அளித்து "நின் துயர் ஒழிக!" என்று அருள் செய்தார். உண்ணாமுலை அம்மையும் 'நின் பிறப் பொழிக' என்று அருளினாள். சான்று :

"கமழ்மா இதழ்சடையார், அடியேன் துயர்தீர்ந்திட,
வெண்தழல் மாபொடி அருள்வோர்"

(திருப். 568)

"என் மாசுசேர் எழுபிறப்பையும் அறுத்த உமை"

(திருப். 439)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர், இறைவன் திருவருளால் ஞானத்தையும், பல்வேறு வித்தைகளையும் அறியப்பெற்றார். சிவப் பேற்றிற்கு உரியவரானார். தன்னை மனம் உருக்கி அனுபூதி அளித்த வனாகவும், நளின பாதம் தன் சிந்தை அகலாது, தனக்கு மனோலயம் தந்த பெருமானாகவும் முருகவேளைக் கண்டார்.

ஊனக் கண் கொண்டு பெண்முகம் பார்த்து மகிழ்ந்த தமக்கு, ஞானக் கண் கொண்டு அறுமுகவேளைப் பார்க்கும் பேறு கிடைத்தது குறித்து அகம் மகிழ்ந்தார். அவர் விழிக்குத் துணையாக முருகவேளின் மென்மலர்ப் பாதங்கள் வந்தன; மொழிக்குத் துணையாக ''முருகா'' என்னும் நாமம் வந்தது; முன் வினைக்குத் துணையாகப் பன்னிரு தோள்கள் வந்தன; பயந்த தனி வழிக்குத் துணையாக வேலும் மயிலும் வந்தன.

விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்; மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகாவெனு நாமங்கள்; முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்; பயந்ததனி
வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

(கந். அலங். 70)

சம்பந்தாண்டானோடு வாதுசெய்தல்

முருகப்பெருமானின் தனி அடியாராகவும், பெருந்தவ சீலராகவும் அருணகிரிநாதர் விளங்கினார். இவருடைய புகழ் நாடெங்கும் பரவலாயிற்று. அக்காலத்தே, திருவண்ணாமலைப் பகுதியைப் பிரபுட தேவ மகராஜன் ஆண்டு வந்தான். அம்மன்னனும் அருணகிரிநாதரின் புகழ் பற்றி அறிந்து, அன்பும் பக்தியும் கொண்டு விளங்கினான். அவ்வருணைப்பதியின்கண் 'சம்பந்தாண்டான்' எனும் பெயரினை உடைய ஒருவன், அருணகிரிநாதரிடத்துப் பொறாமை கொண்டு வாழ்ந்து வந்தான். அவருக்கு இன்னல்கள் விளைவிக்கக் கருதினான். எனவே, அரசரிடம் சென்று,

''யான் தேவியை நேரே அழைத்து உமக்குத் தரிசனம் தரச் செய்விப்பேன் என்றும், அவ்வாறே முருகவேளையும் அழைக்கும்படி அருணகிரிநாதரைத் தாங்கள் கேட்க வேண்டும்'' என்றும் கூறித் தூண்டினான்.

''அவ்வாறு அழைக்கத் தவறினால், அவர் நகரினைவிட்டு வெளியேறி விட வேண்டும்'' என்றும் நிபந்தனை செய்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாதிடலானான். மன்னரின் அரசவை கூடிற்று. அருணகிரி நாதரையும் மன்னர் அழைத்துச் செய்தியைத் தெரிவித்தார். தீய எண்ணம் கொண்ட சம்பந்தாண்டான் பலவாறு தெய்வத்தை வேண்டியும், இறைவன் அருட்காட்சி நல்கவில்லை.

அருணகிரிநாதர், அன்புடன் முருகவேளைச் சிந்தித்துப் பாடவே, ஒருகல் கம்பத்திடை மயில் மீது முருகனும் அருட்காட்சி நல்கினான்.

"அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
....
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

(திருப்புகழ் - 1292)

என்று அருணகிரிநாதர் பாடினார். அப்போது காட்சி தந்த அத்தரிசன மூர்த்திதான், "கம்பத்திளையனார்" என்று அண்ணாமலையில் போற்றி அழைக்கப்படுகின்றார். உண்மை யான அன்பிற்கு இறைவன் கட்டுப்படுபவன் அல்லவா?

அரசனும் அருட்காட்சியைக் காண விழைந்தார். கண்ணொளி நீங்கிற்று; பிறகு அருணகிரிநாதர் திருநீறு மந்திரித்து அழைக்கவே பார்வை உண்டாயிற்று. எனவே, தோல்வியுற்ற சம்பந்தாண்டான் நகரினின்றும் நீங்கி வாழலானான்.

தல யாத்திரை

திருவண்ணாமலையில் தவசீலராக வாழத்தலைப்பட்ட அருணகிரிநாதர் 'ஞாலம் நின் புகழே மிக வேண்டும்' என்னும் தமிழ் மறைமொழிக்கிணங்க, அம்மொழியைப் பொன்னே போல் போற்றி நாற்றிசையிலும் முருகப்பெருமானுடைய திருப்புகழைப் பரப்பிட விழைந்தார். தாமும் சைவசமயக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரவர் நால்வரைப் போலத் திருத்தல யாத்திரை மேற்கொண்டார். அருணகிரிநாதர், இன்னவரிசையில் தலங்களைச் சென்று தரிசித்தார் என்று துணிவுபடக் கூறிடப் போதிய சான்றுகள் இல்லை. எனினும், ''வயலூரா!'' என்று பல பாடல்களில் குறித்துள்ளதால் வயலூர் முருகன் அருளை மிகுதியும் உணர்ந்து பாடியுள்ளார் எனலாம்.

திருவண்ணாமலையினின்றும் நீங்கித் திருக்கோவலூர், திருவெண்ணெய்நல்லூர் சென்று முருகவேளைத் தரிசித்தார். முருகப்பெருமான் தம்முடைய அற்புதமயில்மிசை திருநடன தரிசனம் தந்தான். அவர் அக்காட்சியைக் கண்டு,

''திருவெண்ணெய் நற்பதி புகழ்பெற அற்புத,
மயிலின் மிசைக் கொரு திருநட மிட்டுறை பெருமாளே,''

என்று போற்றித் துதித்துப் பாடியுள்ளார்.

பிறகு திருநாவலூர், திருவாமூர், வடுகூர், துறையூர், திருவதிகை, திருப்பாதிரிப் புலியூர், திருமாணிக்குழி முதலான தலங்களைத் தரிசித்து, தில்லையம்பதி சென்று சேர்ந்தார்.

தில்லையில் ஆடற்காட்சி காணல்

தில்லையம்பதியை அடைந்த அருணகிரிநாதர், அத்திருத் தலத்தில் பல்வேறு இடங்களிலும் இருந்த முருகப் பெருமானைப் போற்றிப் பாடியுள்ளார். நடராஜப் பெருமானே முருகராகவும், முருகப் பெருமானே நடராஜப் பெருமானாகவும் அவருக்கு அருட்காட்சி நல்கியதை ''அவகுண விரகனை'' என்னும் பாடலில் குறித்துள்ளார். பல்வேறு சந்த வேறுபாடுகள் (63 சந்தங்கள்) உடையதாய் 65 பாடல்கள் சிதம்பரமாகிய தில்லைத் தலத்தில் பாடியுள்ளார். தில்லைவாழ் அந்தணர்தம் சிறப்பு, சிவகாமி அம்மையின் பெருமை, சிவகங்கைத் தீர்த்தம், முருகப் பெருமானின் குடைக் கூத்து, பதஞ்சலி, வியாக்ரபாதன் காண நடராசப் பெருமான் ஆடல் ஆடினார் என்பது போன்ற பல செய்திகள் இத்திருத்தலத்துப் பாடல்களில் காணலாகும் செய்திகளாகும்.

மேலும், பதஞ்சலியும் வியாக்ரபாதரும், 'அரிது இது, அரிது இது' என வியக்கும்படி முருகப்பெருமான் அருணகிரிநாதர்க்கு நடன தரிசனம் காட்டியருளினான் என்பதை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அரிதுயில் சயனவி யாள மூர்த்தனு
மணி திகழ் மிகு புலி யூர்வி யாகரனும்
அரிதென முறைமுறை யாடல்காட்டிய பெருமாளே"

(பாடல் - 612)

என்னும் திருப்புகழ் அடிகளால் அறியமுடிகிறது. பின்பு அருணகிரிநாதர் முதுகுன்றம், கூடலை ஆற்றூர், எருக்கத்தம் புலியூர், கடம்பூர், மயேந்திரப்பள்ளி எனும் தலங்களைத் தரிசித்துவிட்டு, சீகாழி சென்றடைந்தார்.

வயலூர் முருகன் அருளல்

சீகாழித் தலத்தை வழிபட்ட அருணகிரிநாதர் பின்பு மண்ணிப் படிக்கரை தலத்திற்கு வந்தார். முருகப்பெருமான் அவருடைய கனவில் தோன்றி வயலூருக்கு வருமாறு பணித்தான். வயலூர்ப் பெருமானை வழிபடும் ஆசையால் உந்தப் பட்டு, வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடவூர், திருவிடைக்கழி முதலான பல பதிகளை வழிபட்டு விட்டு வயலூர் சென்றடைந்தார். வழியில், சுவாமிமலையில் அருணகிரி யாருக்கு முருகவேளின் பாத தரிசனம் கிடைத்தது.

"தகையா தெனக்குன் அடிகாண வைத்த
தனி யேரகத்தின் முருகோனே"

(திருப்புகழ் - 229)

சுவாமிமலையில், ஓர் அருமையான திருவெழுக் கூற்றிருக்கைச் செய்யுளும் அவர் பாடியுள்ளார். 'திருச்சிராப் பள்ளிக்கு உரிய பதினாறு பாடல்களில், ஒன்பது பாடல்கள் வயலூர் பற்றிச் சொல்லப் பட்டிருத்தலின் திருச்சிராப் பள்ளியிலிருந்தே வயலூரைச் சில காலம் அவர் தரிசித்து வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது' என்பார் வ.சு.செங்கல் வராயப் பிள்ளை. வயலூர், அருணகிரிநாதருக்கு மிகவும் உகந்த தலம். அங்குள்ள பொய்யாக் கணபதியின் அருள் பெற்று அவர் முருகவேளிடம் பற்பல பேறுகளை அடைந்தார். அங்கே ஒரு நாள் முருகப்பெருமானின் திருவடி காணும் பேறு பெற்றார்.

"வயலி நகரியில் அருள் பெற மயில் மிசை,
யுதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலும் நனவிலும் மறவேனே"

(திருப்புகழ், 934)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று பாடியுள்ளார். பின்னர் அவர் விராலி மலைக்குச் சென்றார்.

பழநிப்பதி

விராலிமலையிலிருந்து கடம்பந்துறை, இரத்தினகிரி என்னும் வாட்போக்கி, கருவூர், சென்னிமலை சென்று வழிபாடு செய்தார்.

சென்னிமலையாண்டவன் அவருக்குப் படிக்காசு நல்கினான் என்பதை, ''சென்னிமலையாண்டவன் காதல்'' என்னும் நூல்,

''நாட்டில் அருணகிரி நாதன் திருப்புகழ்சொல்
பாட்டின் மகிழ்ந்து படிக்கா சளித்த பிரான்
தாலமிகுஞ் சென்னிமலை தன்னில் வளர் கல்யாண
வாலசுப்ப ராயனென்று வாணர்புகழ் வாசலினான்''

எனத் தெரிவிக்கின்றது.

பிறகு திருமுருகன் பூண்டி, அவிநாசி (திருப்புக்கொளியூர்) திருச்செங்கோடு, பேரூர் முதலிய தலங்களை வழிபட்ட அருணகிரிநாதர், பழநிப்பதி வந்து முருகனை வழிபட்டார். அருணகிரிநாதரின் மனம் பக்குவப்பட்டு விட்டதை உணர்ந்த முருகப் பெருமான் பழநித் தலத்தில் அவர் முன்னர்த் தோன்றி ஒரு ஜெபமாலை தந்து 'சும்மா இரு சொல்லற' என்று உபதேசித்து அருளினான்.

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனா
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன் குடிப் பெருமாளே.

(பழநி. திருப். 110)

என்னும் பாடல் வரிகளால் இதனை உணர முடிகிறது.

பழநித் தலத்தில் தம்மோடு பழகிய கலிசைச் சேவகன் (காவேரி சேவகன்) என்பவரை 'வீரை' என்னும் தலத்தில் பழநியாண்டவருடைய திருவுருவம் ஒன்று அமைத்து வழிபடச் செய்தார். அவரைப் பற்றி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"வீறு கலிசை வரு சேவ கனதிதய
மேவும் ஒரு பெருமையுடையோனே"

(திருப். 196)

எனவும், "கலிசை வரு காவேரி சேவகனொடன்பு புரிவேனோ" (138) எனவும் அருணகிரிநாதர் புகழ்ந்து பாடியுள்ளார்.

பழநியைப் பற்றி அதிகப் பாடல்கள் (96) பாடியுள்ளார் என்பதால், பல காலம் அவர் அங்கேயே தங்கியிருந்திருக்கலாம் என்று உணர முடிகிறது.

திருச்செந்தூர் முருகனைக் காணல்:

பிறகு அவர் மதுரையம்பதி நோக்கிச் சென்றார். திருப்பரங் குன்றத்து முருகனை பழமுதிர்சோலைமலை கிழவோனை வழிபட்டார்; திருநெல்வேலி சென்ற பின்னர் திருச்செந்தூர் சென்றடைந்தார். பழநிக்கு அடுத்தப் படியாக (83 பாடல்கள்) திருச்செந்தூர் முருகனைப் பற்றிப் பாடியுள்ளார். ஒரு நாள்,

"மணங்கமழ் தெய்வத் திளநலங்காட்டி" என்றபடி, அருண கிரிநாதரின் முன் குழந்தைத் திருக்கோலத்துடன் கொஞ்சிக் கொஞ்சி நடன தரிசனம் தந்தார். அதைக் கண்ட அவர்,

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் றன்புபோலக்
கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்
கண்களும கங்களுஞ் சந்திரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ

(திருப்: 103)

வில்லிப்புத்தூராரோடு வாது செய்தமை

இவ்வாறு அருணகிரிநாதர் திருச்செந்தூர் முருகனை வழிபட்டு விட்டு ஈழநாட்டுத் தலங்களை வழிபடச் சென்றபோது வழியில் வில்லிபுத்தூரார் என்னும் வைணவ சமயத்தைச் சார்ந்த கவிப்புலமை மிக்கவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் பெரும்புலமையுடையவர். அவ்வகையில் அருணகிரிநாதர் அவரோடு வாது செய்ய வேண்டிய தாயிற்று. அப்போது ஆசுகவியாகப் பாடிய நூல் தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''கந்தரந்தாதி'' எனலாம். அதில், 54ஆம் பாடலான 'திதத்த' என்ற செய்யுளுக்குப் பொருள் கூற மாட்டாது வில்லிபுத்தூரார் திகைத்துத் தோல்வியுற்றார். அச்செய்யுளுக்குப் பின்னர் அருணகிரிநாதரே உரையருளினார். வாதில் தோல்வியுற்றவரின் காதை அறுக்க வேண்டும் என்பது நியதி. அந்த ஒப்பந்தத்தின் படி, வில்லிப்புத்தூராரின் காதை அருணகிரிநாதர் அறுக்க வேண்டும். ஆனால் அங்ஙனம் செய்யாது விடுத்ததோடன்றி, அருணகிரிநாதர், 'இனிக் கருணைக்கு விரோதமான இவ்வழக்கத்தை நீங்கள் விட்டுவிட வேண்டும்' என்று கூறி வில்லிபுத்தூராரின் கையிலிருந்த குறடை வீசி எறியச் செய்தார்.

கருணைக்கு அருணகிரி

அருணகிரிநாதர் வில்லிபுத்தூராரின் காதை அறுக்காமல் விட்டதோடன்றி அவருடைய செயலையும் கைவிடச் செய்தமை கண்டு அனைவரும் வியந்து பாராட்டினர். உலகத் துன்பங்களுக்கு அடிப்படைக் காரணமான பெண்ணாசையை ஒழியுங்கள். 'ஈதலே அறம்' என்று கடைபிடியுங்கள்; முதலான நல்லுபதேசங்களையும் உலகமக்கள் உய்வதற்காகப் பலமுறை அவர் கூறியுள்ளார். எனவே தான் அவர் ''கருணைக்கு அருணகிரி'' என்று போற்றப்படலானார்.

''காசுக்குக் கம்பன், கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவனே - தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன்; உவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு''

என்ற தனிப்பாடலும் அருணகிரிநாதரின் பெருமையைக் கூறுகின்றது. பிறகு அவர் மேலும் பல தலங்களைத் தரிசிக்கச் செல்லலானார்.

ஈழ நாட்டுத் தலங்களைக் காணல்

கடல் கடந்து சென்று அருணகிரிநாதர் ஈழ நாட்டுத் தலங்களான கண்டியையும், திருக்கோண மலையையும் தரிசித்தார். பின்னர் கதிர்காமத்தையும் கண்டு தரிசித்தார்.

பிறகு தமிழகம் வந்து சேர்ந்த அவர் பாபநாசம், பெரிய மலை முதலாக திருப்பெருந்துறை ஈறாக உள்ள பல தலங்களையும் கண்டு வழிபட்டார். திருப்பூந்துருத்தியில் முருகப்பெருமான் அவருடைய திருத்தோளில் வேற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொறியையும், மயில் பொறியையும் பொறித்தார். கடைசியில் மீண்டும் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார்.

"அடைக்கலப் பொரு ளாமென நாயெனை
அழைத்து, முத்திய தாம் அநுபூதியெ
னருட் டிருப்புகழ் ஓதுக வேல்மயில் அருள்வோனே."

தொண்டை நாட்டு யாத்திரை

திருவண்ணாமலை மீண்டும் வந்த அருணகிரிநாதர் திருவாமாத்தூர், திருவக்கரை, மயிலம், சேயூர், உத்திரமேரூர், திருக்கழுக்குன்றம், திருப்போரூர், காஞ்சி மாநகர், திருவோத்தூர், கோடை நகர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருவொற்றியூர், வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு, திருவாலங்காடு, வேப்பூர் (நிம்பபுரம்), தேவனூர், வேலூர், விரிஞ்சிபுரம், திருவலம் முதலான தலங்களுக்குச் சென்று அம்மலையை வலம் வந்து மகிழ்ந்து பாடினார். "யார் ஒருவர் யான் எனது என்ற ஆணவம் நீங்கித் தன்னை வழிபடு கின்றார்களோ அவர்களுக்கு, தான் எளியன்" என்பதை உணர்த்தும் தன்மைதான் வள்ளியை முருகன் வேட்டது! இதனை உணர்ந்த அவர்,

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

(கந். அலங்: 24)

என்று பாடியுள்ளார்.

"முருகா! நீ சிவபெருமானுக்கு உபதேசித்த ரகசிய உபதேசம் வள்ளிச் சன்மார்க்கமே எனத் தெரிந்து கொண்டேன்" என்றும் போற்றிப் பாடினார்.

"வள்ளிச்சன் மார்க்கம் விள்ளைக்கு நோக்க
வல்லைக்கு ளேற்று மிளையோனே"

(திருப். 316)

எனவே தான்,

"ஐயா, அருணகிரி அப்பா உன்னைப் போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று தாயுமானவர் வியந்து கூறியுள்ளார். பிறகு அருணகிரியார் திருத்தணிக்குச் செல்லலானார்.

திருத்தணிகைத் தரிசனம் காணல்

அருணகிரிநாதர் தணிகைமலை அழகைப் பார்த்தார் 'அழகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே' (285) என்று பாடினார்.

''உனது தண்டையஞ் தாள்களைச் சூடாத சென்னியையும், நாடாத கண்களையும், பாடாத நாவையும் எனக்கென்றே தெரிந்து அமைத்தனனே''

கோடாத வேதனுக் கின்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

(கந். அலங். 76)

என நினைந்து வருந்திப் பாடிய அவர் பல நாள் திருத்தணியில் தங்கி முருகப்பிரானைப் புகழ்ந்து பாடினார். அருணகிரி நாதருக்கு முருகப் பெருமான் தன் தேவியர்களுடன் மயில்மீது நடன தரிசனம் காட்டியருளினான். இதனை,

''...................... ....
விண்
அமரர் கொடுத்திடு மரிவை குறத்தியொ
டடிரு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமானே.''

(திரு. 285)

''தணிகைமலை தனில் மயிலில் நிர்த்தத்தில்
நிற்கவல பெருமாளே''

(திருப். 308)

என்னும் தொடர்களால் அறிய முடிகிறது.

வட நாட்டு யாத்திரை

பிறகு தணிகை நாயகன் அருளால் திருவருள் தீக்கை பெற்ற அருணகிரியார் அங்கிருந்தும் புறப்பட்டு வெள்ளிகரம், திருவேங்கடம், திருக்காளத்தி, திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) மற்றும் காசி முதலான வடநாட்டுத் தலங்களில் உறையும் முருகனை வழிபட்டார். பிறகு அவர் கடைசியாகத் தம் சொந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊரான திருவண்ணாமலைக்குத் திரும்பினார். அங்கேயே தங்கி வாழலானார்.

கிளி வடிவம் பெறல்

அருணகிரிநாதர் இறைவனது திருவடித் தாமரையில் தம் மனதைப் பதித்து மகிழ்ந்து வாழ்ந்தார். முன்னர் வாதில் தோற்று நாணம் அடைந்த சம்பந்தாண்டான் மறுபடி சூழ்ச்சி மேற் கொண்டு, கண்ணொளி மங்கி வாழ்ந்த பிரபுட தேவராஜனிடம் அணுகினான். அவன் விண்ணுலகத்துக் கற்பக மலரை அருண கிரிநாதர் மூலம் கொண்டுவித்துக் கண்ணுறலாம் என்று கருத்துத் தெரிவித்தான். அதனைச் செவி கொண்ட மன்னனும் அருண கிரிநாதரிடத்துத் தெரிவித்தான். எனவே, மானுட உடலோடு விண்ணுலகத்திற்குச் செல்லக் கூடாது என்று அருணகிரிநாதர், தமது உடலை அண்ணாமலையிலுள்ள கோயில் கோபுரத்தில் பாதுகாப்பாக வைத்து விட்டுக் கிளி வடிவில் சென்றார். அதனை அறிந்து சம்பந் தாண்டான் தூண்டுதலால், மன்னன் அனுமதி பெற்று அருணகிரிநாதரின் உடலை எரித்துவிட்டனர். பிறகு கிளி வடிவில் கற்பக மலரை (பாரிஜாத மலர்) கொண்டு வந்ததும், மன்னன் அச்செயலுக்கு வருந்தினான். தம் உடல் எரிபட்டுப் போனதை அறிந்த அருணகிரிநாதர்,

"எம் உடல் சிறையை இறைவன் அழிப்பித்தது நியாயமே" என மகிழ்ந்து திருத்தணிகைச் சென்று தணிகைநாயகர் கையில் தங்கிவிட்டார் என்றும் பெரியோர் கூறுவர்.

ஏழையினி ரட்டைவினை யாயதொரு டற்சிறையி
ராமல்விடு வித்தருள்நி யாயக் காரணும்...
மேதகு குறத்திரு வேளைக் காரனே.

எனக் கூறும் வேளைக்காரன் வகுப்பு சிந்திக்கத்தக்கது.

கிளி வடிவம் உற்றபின் அவர் அருளிய நூல் கந்தர் அநுபூதி என்பர் பெரியோர்.

"கையில் யார் பிடிப்பார் - கந்தரநுபூதி சொன்ன
கிளி நீ பிடிக்க எய்துமோ" -

(இலஞ்சி முருகன் உலா. 205)

இவ்வாறு அருணகிரிநாதர், வேண்டியார்க்கு வேண்டுவன நல்கும் பெருமாளான முருகனிடம் வேண்டிச் 'சுகபதம்' பெற்றார் எனலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சான்றோர் பாராட்டு

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாம்பன் சுவாமிகள் அருணகிரிநாதரின் வாழ்வு பற்றி, விளக்கமாக சென்னை, புதுப்பாக்கம் சிவசுப்பிரமணிய பக்தஜன சபா மண்டபத்தில் ''ஸ்ரீமத் அருணகிரிநாதரின் தூய சரித்திரம் இதுவே'' என்று (24.6.1918) அனைவரும் அறிய எடுத்து இயம்பினார் ''எம் கருத்தின்படி இயன்றவாறு புகன்றாம்'' என்று கூறி, அருணகிரிநாரின் தூய வாழ்வு பற்றியும், அவரது குருபூஜை நாளையும் குறித்துப் பேசியுள்ளார், பாம்பன் சுவாமிகள்.

தாயுமான சுவாமிகள் ''ஐயா, அருணகிரி அப்பா, உனைப் போல மெய்யாக ஓர் சொல் விளம்பினவர் யார்?'' என்று கூறியுள்ளார்.

இந்திய அரசு, ஸ்ரீமத் அருணகிரிநாதனாரின் ஆறாம் நூற்றாண்டு நினைவாக அஞ்சல்தலை வெளியிட்டு, அவர் புகழ் பரப்பிய திரு. சுப்பிரமணியப் பிள்ளை மற்றும் தணிகைமணி திரு. வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டி செய்தி வெளியிட்டது.

ஸ்ரீதேவி கருமாரிதாசர் அருணகிரி பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். அருணகிரி நாதரைப் புகழ்ந்து போற்றியவர்கள் அந்தகக்கவி வீரராகவ முதலியார், வரகவி மார்க்க சகாயத் தேவர், திருப்போரூர் ஸ்ரீசிதம்பர சுவாமிகள், தொட்டிக்கலை சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீகந்தப்ப தேசிகர், வடலூர் ஸ்ரீஇராமலிங்க வள்ளலார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், அருட்கவி சாதுராம் சுவாமிகள் போன்றோர் குறிப்பிடத் தக்கவராவர்.

பாராட்டுரைகள்

அருணகிரிநாதருக்கு வழங்கப் பெற்ற சிறப்புப் பெயர்கள் பின்வருமாறு, சார்ம பௌண்டிம கவி, அஷ்டபாஷா பரமேஸ்வரர், சந்தப் பாவலப் பெருமான், நாற்கவிராஜன், முத்தமிழ் அரசர், நவரச நாவலர், சந்தக்கவித் தலைவர், தாளச் செல்வர், இசைஞானியார், திருப்புகழ் பாவகை ஆதிகர்த்தா என்பனவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எழுதிய நூல்கள்

திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரநுபூதி, கந்தர் அலங்காரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழுகூற்றிருக்கை முதலிய நூல்களைப் பாடியுள்ளார். தெய்வத்தமிழ் புலமைமிக்க அருணகிரிநாதர் வடமொழியிலும் வல்லவராக விளங்கினார்.

வயலூருக்கு வரவழைத்து அருணகிரிநாதரைத் திருப்புகழ் பாடச் செய்தான் முருகப்பெருமான். பின்னர், விராலிமலைக்கு வருக எனக் கட்டளையிட்டு, ஒரு வழியில் பாதை தெரியாமல் தவித்தபோது வனவேட வடிவில் வந்து ஞானோபதேசம் செய்து விராலிமலையில் அஷ்டமா சித்திகளையும் முருகனே அருளினான் என்பர் ஆன்றோர். அவருடைய தூய தவ வாழ்வு சரிவரப் புரிந்து கொள்ளாமல் வெளியிடப் பெற்ற செய்திகளும் உள்ளன என்பார் பாம்பன் சுவாமிகள்.

தவத்திரு குகதாச சுவாமிகள், ''அருட்செல்வர் அருணகிரி நாதர் வரலாறு ஓர் ஆய்வு'' என்னும் நூல் எழுதியுள்ளார். தவத்திரு கா. ரா. ஜமதக்கினி சுவாமிகள் கந்தரநுபூதி நூலை வெளியிட்டுள்ளார். புதுடெல்லி உத்தர சுவாமிநாதர் கோயிலில் அருணகிரி நாதர் நினைவு விழா மலர் வெளியிடப் பெற்றது. டாக்டர் சீனிவாச தேசிகர் ஸ்ரீமத் அருணகிரி ராமாயணம் என்ற நூல் வெளியிட்டுள்ளார். இவைகளில் அருணகிரிநாதர் வாழ்வு பற்றிய செய்திகள் உள. இளமையில் அவர் காமக் களியாட்டத்தில் வாழ்ந்து நோய் வாய்ப்பட்டார் எனவும், பிறகு முருகனருளால் உய்வு பெற்றார் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. அக்கருத்தைப் பாம்பன் சுவாமிகள் ஏற்கவில்லை. முருகன் அருள் பெற்ற தவசீலர் அருணகிரிநாதர் என்பது அனைவரும் ஒப்ப முடித்த முடிவாகும். அவருடைய பாடல்களில் மிகுதியும் சிற்றின்ப வாழ்வை வெறுத்து முடிவு கூறிப் பின் பேரின்பத்தின் முடிவு கூறுவதை நாம் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2.படைப்புகள்

அருணகிரிநாதர் பாடியவை திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருவகுப்பு, கந்தர் அந்தாதி, வேல், மயில், சேவல் விருத்தங்கள் என்பவையாம். இவற்றுள் மெய்யன்பர்களால் பெரிதும் போற்றிக் கொண்டாடப்படும் நூல் திருப்புகழ் ஆகும்

1. திருப்புகழ்

ஒரு நூல் இயற்றியவர் தான், அந்நூலுக்கு இன்ன பெயர் என்று பெயரிடுவர் என்பது வழக்கம். ஆனால் இதற்கு மாறாக அருணகிரியாரின் பாடல்கள் அமைந்த நூலுக்கு முருகனே முன்னதாகத் ''திருப்புகழ்'' என்று பெயர் சூட்டினார் எனலாம்.

''திருப்புகழ் விருப்பமொடு செப்பென
எனக் கருள் கை மறவேனே''

என்று அருணகிரி நாதரே கூறுகின்றார்.

சிவபெருமான் சுந்தரரைப் பார்த்துச், சொற்றமிழால் பாடுக'' என்றுதான் கூறினார். முருகன் ''நற்றமிழ் பாடுக'' என்று கூறாமல், ''திருப்புகழ் பாடுக'' என்றே கூறியருளினார். இதனால் திருப்புகழின் மேன்மை நன்கு விளங்குகின்றது.

திருவண்ணாமலையில் முருகப்பிரான் அருணகிரிநாதரைத் திருப்புகழ் பாடுக என்று கட்டளையிட்டார். வயலூரில் வாக்கு வன்மையும் ஊக்கமும் அருளினார்.

''பாத பங்கய முற்றிட உட்கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடு மன்பது செய்ப்பதியில்தந் தவனீயே''

(பழநி. திருப். 109)

என்பது அருணகிரி நாதரின் வாக்கு.

திருப்புகழ் என்பதற்கு ''அழகியபுகழ்'' அல்லது 'அழகிய பெருமை' என்றுபொருள். இப்பொழுதுப் பெயர் முருகன் புகழ் பேசும் நூலுக்குச் சிறப்புப் பெயராக அமைந்துவிட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப் பெருமானின் மார்பில் ஞானவொளி வீசிவிளங்கும் மதாணியாகத் திருப்புகழ் விளங்குகிறது.

"உரைபெற வகுத்த கருணை நகரிலொடு பத்தனிடு
ஒளிவளர் திருப்புகழ் மதாணிக்காரனும்

-திருவகுப்பு

என்பார் அருணகிரிநாதர்.

மேலும் முருகப்பெருமானின் மார்பில் திகழும் கடப்ப மலர் மாலைக்குத் திருப்புகழ்ப் பாடல்கள் பன்னீராகும் என்பர்.

"பலபல பைம்பொன் பதக்க மாரமும்
அடிமை சொலுஞ்சொல் தமிழ்ப்பனீரொடு
பரிமள மிஞ்சக் கடப்பமாலையும் அணிவோனே"

-திருப்புகழ்

என்று கூறுகின்றார்.

திருப்புகழின் மொத்தப் பாடல்கள் பதினாறாயிரம் என்பர். நமக்குத் தற்போது கிடைப்பவை ஏறத்தாழ 1324 பாடல்களே.

"எம் அருணகிரி நாதர் ஓது பதினாறாயிரம் திருப்புகழ் அமுதுமே" -விரிஞ்சைப் பிள்ளைத்தமிழ் (மார்க்க சகாயதேவர் பாடியது)

"அருணகிரி நாதன் அறைந்த பதினாறாயிர கவிதை
யென்றுலகில் யாரும் உரைபுகலும் தெய்வத் திருப்புகழ்"

-தணிகையுலா

"முத்தித்திருவென்னும் முன்பதினா றாயிரம்
பத்தித் திருப்புகழைப் பாடுங்காண்"

- தணிகையுலா

"அருணகிரி நாதர்பதி னாறாயிரமென்
றுரை செய் திருப்புகழை யோதீர்"

- தனிப்பாடல்

மேற்காணும் தொடர்கள் அருணகிரிநாதரின் திருப்புகழ் பதினாறாயிரம் என்பதையும் அதன் சிறப்புகளையும் தெரிவிக்கின்றன.

புகலி வித்தகர் - (சம்பந்தர்) போல - அமிர்தகவிபாட அருள்வாயே என அருணகிரிநாதர் சம்பந்தர்போலப் பதினாறாயிரம் பாடல்கள் முருகனருளால் பாடினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புமியதனிற் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே.

(திருப். 241)

திருப்புகழ் சொற்சுவை, பொருட்சுவையோடு பக்திச் சுவையும் உடையதாகும். பல திருத்தலங்களுக்குச் சென்று முருகவேளை மட்டுமின்றி கணபதி, சிவபெருமான், பார்வதி, திருமால் முதலிய பிற தெய்வங்களையும் குறித்தும் அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

திருப்பரங்குன்றம்	14 பாடல்கள்
திருச்செந்தூர்	84 பாடல்கள்
திருவாவினன் குடி – பழனி	96 பாடல்கள்
திருவேரகம் / சுவாமி மலை	38 பாடல்கள்
பழமுதிர் சோலை	16 பாடல்கள்
குன்று தோறாடல் என்னும் தலைப்பில் பொதுவானவை 7 சிறப்பானவை 198 ஆக	205 பாடல்கள்
ஐம்பூதத்தலங்கள் காஞ்சிபுரம்	44 பாடல்கள்
திருவானைக்கா	14 பாடல்கள்
திருவண்ணாமலை	79 பாடல்கள்
திருக்காளத்தி	8 பாடல்கள்
சிதம்பரம்	67 பாடல்கள்

அருணகிரிநாதர் காசி, ஹரித்துவார், திருக்கயிலை ஜெகந்நாதம் போன்ற வட இந்தியத்தலங்கள் பற்றியும், கதிர்காமம் திரிகோணமலை முதலிய அண்டை நாட்டுத் தலங்கள் பற்றியும் பாடியுள்ளார். இவர் சென்று பாடியவை 200 தலங்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளன.

திருப்புகழ்ப்பாடல்கள், முருக பத்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளைப் புற்றி நன்கு விளக்குவனவாம். இவர் பாடல்களில் பெரும்பாலும் முதற்பகுதி உலகியலைப் பற்றியதாக உள்ளது. அதாவது பொதுவாக மக்கள் மங்கையர் மையலில் பட்டுழலும் துன்பங்களைக் கூறுபவையாகவும், பிற்பகுதி முருகப்பெருமானைச் சரணடைந்தால் உய்வு பெறலாம் என்று அறிவுறுத்தும் தன்மையிலும் உள்ளன. சில

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடல்கள் வயது முதிர்ச்சியால் - பல்வகை நோய்களால் ஏற்படும் துன்பங்களைக் கூறுவனவாக உள்ளன.

வேதக் கருத்துக்கள் புராண இதிகாசக் கருத்துக்கள் உள்ள டக்கியனவாகவும், இசை இன்பம் கூடியதாகவும் இப்பாடல்கள் காணப்படுகின்றன. முருகனே அடியெடுத்துக் கொடுத்திட, சந்த யாப்பில் வடமொழியும் தென் தமிழ்மொழியும் கலந்த தன்மையில் அவர் பாடல்களைப் பாடியுள்ளார்.

திருப்புகழ்ப் பாடல்கள் கிருதி, கீர்த்தனை, பதம், ஜாவளி போன்ற இசை உருப்படிகளின் அமைப்பைப் போன் றில்லாமல், பெரும்பான்மையான பாடல்கள் எட்டுப் பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட தலத்து உறையும் முருகப்பெருமானை எட்டுப் பிரிவுகளில் புகழ்ந்து பாடப்பெறும் பதிக அமைப்புபோல் உள்ளது. எட்டுவரி மற்றும் நான்குவரிகள் கொண்ட சிறியபாடல்களும் உள்ளன. ''தொங்கல்'' என்னும் இசை மரபை ஒட்டியதாக உள்ளன. ''துள்ளல்'' என்பதே ''தொங்கல்'' எனப்படும்.

ஞானசம்பந்தரை முருகப்பெருமானின் மறு தோற்ற மாகவே அருணகிரிநாதர் கருதினார்.

சான்று

அருணைத்திருப்புகழில் (547, 567) சம்பந்தரின் தேவாரப் பதிகங்களும் செயல்பாடுகளும் முருகனின் செயல்பாடு களாகவே பாராட்டிப் பாடியுள்ளார்.

சீகாழிப் பாடல்களைச் (768 , 769, 770, 771, 772, 773, 775, 776, 776) சம்பந்தரின் பாடல்களை முன்னோடியாகக் கொண்டு பாடியுள்ளார் எனலாம்.

விலைமாதர்களைப் பற்றி - அவர்கள் நடத்தைகளைப் பற்றித் தெளிவாகக் கூறுவதனால், அருணகிரிநாதர் தம் அனுபவத்தைக் கூறுகிறாரோ என்று எண்ண வேண்டியுள்ளது.

காமத்தில் விளையும் துன்பங்களை எடுத்துச் சொல்வது காமவெறியை ஊட்டுவது ஆகாது. எனவே திருப்புகழ் என்பது காமவெறியை ஊட்டும் நூல் என்று சொல்வது வீண்பழிச் சொல்லாகும் என்பார் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்புகழிலே நீதிமொழிகள் பலவற்றையும் அவர் கூறியுள்ளார். அறிவுரைகளும் பல உள்ளன. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையில் உள்ள வாழ்க்கை நிகழ்வுகளைப் பற்றிய செய்திகள் பல உள. திருப்புகழில் இசைக்கருவிகள், அவற்றின் முழக்கங்கள், நடனக்கலை பற்றிய செய்திகள், ஆடை அணிகலன்கள் முதலிய செய்திகள் பலவற்றையும் நாம் காணலாம். மதநல்லிணக்கத்தை வலியுறுத்துவதாக ''மால் மருகோனே'' என்று அடிக்கடி கூறியுள்ளார். திருமாலின் பல அவதாரச் செய்திகளோடு பிறதெய்வவழிபாட்டு நிலைகளையும் போற்றியுள்ளார். மொழிக்கலப்பு உள்ளது. இவருக்கு மொழியைப் பற்றிய விருப்பு வெறுப்பு இல்லை எனலாம்.

அருணகிரிநாதரின் வழித்தோன்றல்கள்

அருணகிரிநாதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பல கவிஞர்கள் அவரவர் வழிபடும் தெய்வங்கள் பேரில் திருப் புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளனர்.

வில்லிப்புத்தூரார் தம் காப்பியமான வில்லிபாரதத்தில் அருணகிரிநாதரின் சந்தங்களைப் பின்பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். ஆசுகவி வீரகவிராயரும், பிறரும் சந்தம் பாடியுள்ளனர். பதினேழாம் நூற்றாண்டில், அழகுமுத்துப் புலவர் பல சந்தங்கள் பாடியுள்ளார். பதினெட்டாம் நூற்றாண்டில், குழந்தைக் கவிராசன் நாள்தோறும் சந்தங்களைப் போற்றிப் பாடினார். குரவை இராமானுஜ தாசர் சந்தப் பாட்டால் பெருமானை வழிபடலானார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இராமலிங்க அடிகளார், காசிம் புலவர், அண்ணாமலை ரெட்டியார் முதலானோர் சந்தப் பாடல்களைப் பாடிப் பெருமை கொண்டனர்.

சந்த அமைப்பிற்குச் சந்தம், துள்ளல், குழிப்பு, தொங்கல், கலை, அடி என்னும் ஆறு உறுப்புகள் அடிப்படை ஆகும். இவற்றிற்கு முதன்முதல் இலக்கணம் வகுத்தமைத்தவர் தண்டபாணி அடிகளார் ஆவர். வண்ணச்சரபம் என்ற பெயர் பெற்று, தண்டபாணி அடிகளாரே சந்தத்திற்குப் புத்திலக்கணம் வகுத்து, ஆயிரக்கணக்கான சந்தப் பாடல்களை இயற்றிப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரதாச சுவாமிகள்

அருணகிரிநாதர் சம்பந்தரைப் போற்றியது போலவே தவத்திரு சங்கரதாச சுவாமிகள் தமது குருவாக அருணகிரி நாதரை நினைத்துப் போற்றுகின்றார். அவர் இயற்றிய பழனித் தண்டபாணிப் பதிகத்தில்,

"தண்டலைப் பழனிமலையில்
தமிழ்முனி வன்அருணகிரி பணியவருள் புரியுமொரு
தண்டபாணித் தெய்வமே!"

என்கிறார்.

அருணகிரிநாதரைத் தமிழ் முனிவன் என்று போற்றும் சுவாமிகள், "அருணகிரிக்கு அன்று இப்பழனி மலையில் அருள் புரிந்தாய் அல்லவா? அதேபோல் தமிழில் உன்னைப் பாடும் எனக்கும் இத்திருக்கோலத்தைக் கண்டு போற்றும்படியான பாக்கியத்தைத் தந்தருள்வது எப்போது?" என்று கேட்கிறார்.

"அருணகிரிநாதருக்காகத் திருவண்ணாமலையில் பிரபுட தேவ மன்னன் முதலாகப் பல்லாயிரக் கணக்கானவர்களுக்குக் காட்சியளித்தாயே. ஆனால், நான் நின் புகழை இவ்வளவு பாடியும் காது கேட்காதவன்போல் இருக்கின்றாயே ?" என்று ஒரு பகுதியில் அங்கலாய்க்கிறார் சுவாமிகள்.

சிவப்பிரகாசர் சந்தம்

சிவப்பிரகாசர் பல்வேறு ஓசை வேறுபாடுகளைத் தம் பாட்டில் அமைத்துச் சந்த இனிமையைக் காட்டியுள்ளார். தாம் இயற்றிய பிரபுலிங்கலீலையில் விருத்த வகையில் பலவற்றைப் படைத்தளித்து, சந்தம் அமையப் பாடியுள்ளார்.

பிற சான்றோர்கள்

அருணகிரிநாதரின் திருப்புகழை அடியொற்றி 108 திருப்புகழ்ப் பாடல்கள் குரவை இராமானுஜதாசரால் இயற்றப் பட்டுள்ளன.

அழகுமுத்துப் புலவர், "அருணகிரி தமிழ் உகந்த வேளே" என்று பாராட்டித் திருப்புகழ் பாடியுள்ளார். திருநாகையில் உறையும் குமரக் கடவுளைப் பற்றிய 100 பாடல்களைக் கொண்டது அத்திருப்புகழ் நூல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இராமாயணத் திருப்புகழ் எனவும் இராமசெயத் திருப்புகழ் எனவும் அறியப்படும் திருப்புகழைப் பாலபாரதி என்பவர் பாடியுள்ளார். இதில் 370 வண்ண விருத்தங்கள் உள்ளன.

மாம்பழக் கவிச் சிங்க நாவலர் ''சந்தப்புகழ்'' என்னும் தலைப்பில் ஏழு பாடல்கள் பாடியுள்ளார்.

18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்லாமியப் புலவரான காசிம் புலவர் நபிகள் நாயகத்தின் வரலாற்றைப் பாடியுள்ள 141 பாடல்கள் அருணகிரிநாதரைப் பின்பற்றியது போன்ற பாடல்கள் எனலாம். அப்துல் காதிர் புலவர் பாடிய சந்தத் திருப்புகழ் நூறுபாடல்கள் கொண்ட நூல் இதே தன்மைய தாகும். திருமலைக் குமாரசாமி திருப்புகழ் என்பதைச் சங்கர பாண்டியனார் என்பவர் பாடியுள்ளார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

பிள்ளையவர்கள் பல்லாயிரம் பாடல்கள் பாடியவர். 'திரு வெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ்' என்னும் நூலில் பன்னிரு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாக அமைத்து, அதில் சந்தம் தோன்றிடப் பாடலைப் பாடியுள்ளார்.

இராமலிங்க அடிகளார் எளிய இனிய சொற்களால் உணர்வு நிரம்பிய பாடல்களைப் பாடி, சந்தத்திற்கு வாழ்வளித்தவர் ஆவர். காசிம்புலவரின் திருப்புகழ் சந்த இனிமை கொஞ்ச விளங்குகிறது. காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் சிறந்த சந்தப்புலவர் என்று புகழப் பெற்றவர்.

ஸ்ரீசங்கர ஜகத் திருப்புகழ் என்பதைக் காமாட்சிதாசர் இயற்றியுள்ளார்.

பல்வேறு வகை அமைப்பில் யாப்பில் பாடல்கள் புனைந்த பாடலாசிரியர்களும் திருப்புகழ் அமைப்பில் நாட்டம் கொண்டு ஒரு சில பாடல்களை இயற்றி மகிழ்ந்துள்ளனர்.

மகாகவி பாரதியார், இராமலிங்க அடிகளார், பாரதிதாசன், தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் போன்றோர் அத்தகையவர் ஆவர்.

திருப்புகழ்ப் பாடல்கள் பஜனை முறையிலும் செவ்விசை அரங்குகளிலும் பிற்காலத்தில் இசையமைக்கப்பட்டு, பாராட்டுக்குரியன ஆயின. இவ்வாறு பெருமைப்படுத்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வர்களுள், "வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகளும், காஞ்சிபுரம் நயினாப் பிள்ளை அவர்களும் முதல் இடத்திற்கு உரியவராவர். திருப்புகழை இசைச் சொற்பொழிவு முறைக்கு ஏற்ப, திருமுருக கிருபானந்தவாரியாரும், பஜனை முறையில் பித்துக்குளி முருகதாஸ், திருப்புகழ் மணி டி.எம். கிருஷ்ணசாமி ஐயர் முதலானோர்கள் மேற்கொண்டு செய்த பணி பாராட்டுக் குரியவையாகும்.

கந்தர் அந்தாதி

தமிழ்க்கடவுளாம் முருகப்பெருமானின் அடியவரான அருணகிரிநாதர் பாடிய நூல்களில் கந்தர் அந்தாதி என்பதும் ஒன்றாகும். இதன் சிறப்பை

.....'இலங்கு கந்தர் அந்தாதி மேலாசை யாவதுயிர்த் தோழி
யெனும் நந்தாதி மேலான நட்பு'

-தணிகை உலா 620

என்னும் பாடல் வரிகளால் உணரமுடிகிறது. இதிலுள்ள காப்புச் செய்யுள்கள், திருவண்ணாமலையிலுள்ள விநாயகப் பெருமானைக் குறிப்பதனால் இந்நூல் திருவண்ணாமலையில் பாடப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. ஆனால் வ.சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் திருச்செந்தூரிலோ (அ) திருச்செந்தூரைத் தரிசித்த பின் சமீப காலத்திலேயோ பாடியிருக்கலாம் என்று குறிப்பிடுகின்றார்.

அந்தாதி

'அந்தம் + ஆதி = அந்தாதி', ஒரு நூலின் முதல் பாடலில் உள்ள கடைசி எழுத்தோ, கடைசிச் சீரோ, தொடரோ அடுத்த பாடலில் முதல் எழுத்தோ, முதல் அசையோ அமையப் பாடுவது அந்தாதியாகும். இத்தகைய 100 பாடல்கள் பாடி, கடைசிப் பாடலின் கடைசி எழுத்து முதல் பாடலோடு தொடர்புபடுத்தி மாலையாகத் தொடுப்பதே அந்தாதி.

எ.கா.அபிராமி அந்தாதி. அந்த நிலையில் கந்தர் அந்தாதி மிகச் சிறந்து விளங்குகின்றது.

நூல் வரலாறு

பெரும்புலமை மிக்கவரும், தம்மோடு வாதுசெய்து தோற்றவர்களது காதைக் குறடு கொண்டு குடைந்து தோண்டும் வழக்கத்தைத் தமது கல்விச் செருக்கால் கையாண்டவரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழில் அற்புதமாகப் பாரதத்தைப் பாடியவரும் வில்லிப் புத்தூரார் என்னும் புலவராவார்.

அவரோடு அருணகிரியார் ஒரு சமயம் வாது செய்ய நேர்ந்தது. அப்பொழுது ஆசுகவியாக அருணகிரிநாதர் பாடியதே கந்தர் அந்தாதி என்னும் நூலாகும். இக்கந்தர் அந்தாதி என்னும் நூலுக்கு வில்லிப்புத்தூரரே உரை செய்தார். அதில் ''திதத்த'' என்று தொடங்கும் 54வது செய்யுளுக்கு உரைகூற இயலாது திகைக்கவே அருணகிரிநாதர் அச்செய்யுளுக்கு உரை கூறினார். வாதில் தோற்றவர் காதை அறுக்கவேண்டும் எனச் செய்த ஒப்பந்தத்தின்படி வில்லிப்புத்தூரார் காதை அருணகிரிநாதர் அறுத்து இழிவு படுத்தவேண்டும் என்று இருப்பினும் அவ்வாறு செய்யாது இனி இவ்வழக்கத்தினை நீங்கள் விட்டுவிட வேண்டும் என்று வில்லிப்புத்தூராருக்கு அறிவுரை கூறி, குறடாவை வீசி எறியச் செய்தார். இத்தகைய கருணை நோக்கத்தாலும், ஈதலே அறம், பெண்ணாசை ஒழியுங்கள் என்னும் உபதேசத்தை (நற்கருத்துக்களை), மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ள காரணத்தாலும், 'கருணைக்கு அருணகிரி' என்னும் பழமொழியும் ஏற்பட்டது.

சிறப்புகள்

இந்நூல் யமக அந்தாதியாக அமைந்துள்ளது. வாதத்தின் பொருட்டுப் பாடிய நூலாகும். ஆதலால் நூலின் பொருள் எளிதில் விளங்கக் கூடியதாக இல்லை. எனவே அரிய பெரிய கடினமான செஞ்சொற்களால் அமைந்துள்ளது. இச்சொற்களை நுணுகி ஆராய்ந்தால் அவை வற்றாச் சுவையாகத் திகழும். மேலும், பல நல் உபதேசங்களைக் கொண்டுள்ளது. எனவே,

'கந்தர் அந்தாதியைப் பாராதே.
கழுக்குன்றத்து மாலையை நினையாதே'

என்னும் பழமொழி அமைந்தது எனலாம்.

சிவபெருமானுக்கு உரிய சிறந்த அகப்பொருள் நூல் திருக்கோவையார் என்பதுபோல முருகப்பிரானுக்கு உரிய அருமையான அகப்பொருள் நூல் கந்தர் அந்தாதி எனலாம். இந்த அந்தாதியிலுள்ள 100 செய்யுள்களின் முதல் எழுத்துக்களும், சி, சீ, செ, சே, தி, தீ, தெ, தே என்னும் 8 எழுத்துக்களுள் அடங்கியுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூற் செய்திகள்

திருவேரகக் கோயிலைக் கட்டியவன், தெய்வத் தன்மைப் பெற்றவன் சோழராசன் ஒருவன் (கோச் செங்கண் சோழன்) என்னும் வரலாற்றுச் செய்தியை இந்நூலின் 3-ம் பாடல் வழி அறியலாம்.

தெய்வச் சென்னிய மோகம் பணிபணி ஏரகத் தேமொழிக்கே

(பா. 3)

வள்ளியம்மையை மணந்து, முருகர் பெற்ற சீதனங்கள் ஐந்தாகும். ஊது கொம்பு, சேவற்கொடி, வேலாயுதம், மயில் வாகனம், மலை ஆட்சி என்பதை எட்டாம் பாடல் வழி அறிய முடிகிறது.

சீதனங் கோடு னிதருமென் பார்தொழுந் தேவிபெறுஞ்
சீதனங் கோடு கொடிவேள் மயூரஞ் சிலையரசே

(பா. 8)

தென்றலை, மயிலின் உச்சிட்ட எச்சில்

(பாடல் 9)

என்னும் சொல்லாட்சி மூலம் வெளிப்படுத்துகின்றார்.

'சேய்மயிலுச் சிட்ட எச்சிலை'

முருகனின் புகழைத் தாம் பாடமுயல்வது, கையால் கடலை நீந்த முயல்வதற்கும், ஒரு குழந்தை தன் கையை நீட்டி, சந்திரனைப் பிடிக்க முயல்வதற்கும் ஒப்பாகும் என்று சிறந்த உவமைகளைக் கையாண்டுள்ளார் (பாடல். 10) கொடைச் சிறப்புக்குக் கர்ணனையும், பாரியையும் செய்யுள் 15 வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

''ஐ யான்பாட நாடுதல் செய்ய சங்க
திரளக் கரக்கரை காண்பான்கைந் நீத்திசை வார்பனிக்க
திரளக் கரக்கரை வாளீட்டு மைந்தர்புந் திக்கொக்குமே''

(பா.1)

''திவாகர கன்ன கொடைப்பாரி யென்றுழ''

(பா. 15)

சம்பந்தப் பெருமானே தெய்வம் என உறுதியுடன் கூறி, பெருமையும் சிறப்பும் வெளிப்பட உணர்த்துகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் திருநீறு பூசும்போது சீர்காழி, அமராவதி, திருத்தணி என்னும் மூன்று தலங்களைத் தியானித்து மொழிந்து திருநீறு இடுக என்று 29ம் பாடலில் அறிவிக்கின்றார்.

ஓதிகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகழு மலங்கள் பருளுமென் னாவமண் சேனையுபா
திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே

பின் தேவாரத்திலுள்ள கோளறு பதிகம் போல் பெருமை யையுடையது. கோள்களின் தீமையைப் போக்க வல்ல சிறப்புடையது.

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்த வென்றிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

(கந். அலங். 48)

அலர் அறிவுறுத்தல், நலம் புனைந்து உரைத்தல், மடல் எழுதுதல் போன்ற அகப் பொருட் செய்திகளை முறையே செய்யுள் 14,67,71 - பாடல்களில் தெரிவிக்கின்றார். சம்பந்தர் தேவாரம், ருக்வேதசாரம் என்பதைச் செய்யுள் 96இல் கூறுகின்றார்.

தும்மும் போதெல்லாம் 'குமர சரணம்' என்று சொல்லுங்கள் உய்யுங்கள் என்னும் எளிதான செய்தியைச் செய்யுள் 97ல் குறிப்பிடுகின்றார்.

சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் (பா. 97)

கந்தர் அநுபூதி

சிவபெருமானுக்குரிய திருமுறைகள் பன்னிரண்டு என்று ஆன்றோர்கள் வகுத்துள்ளனர். அதுபோல் முருகவேள் பன்னிரு திருமுறையாக நூல்களைத் தொகுத்து வழங்கியவர் வ.சு.செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் ஆவார். சிவபெருமானைப் போற்றும் பத்தாம் திருமுறை திருமூலர் எழுதிய திருமந்திரம் ஆகும். அந்தத் திருமந்திரத்திற்கு ஒப்பான நிலையில் முருகவேளுக்குரிய நூல்களில் பத்தாந் திரு முறையாகப் போற்றப்படும் தகுதிக்கு ஏற்பவும், மந்திரக் கருத்துக்கள் அடங்கிய நூலாகவும், சிறந்து விளங்குவது. அருணகிரிநாதரின் கந்தர் அநுபூதி என்னும் நூலாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமூல நாயனார், ஆயன் உடலில் புகுந்த பின்பு திருமந்திரம் பாடினார். அதுபோல, அருணகிரியார் கிளியின் உடலில் புகுந்தபின்பு கந்தர் அநுபூதி பாடினார் என்பது பெரியோர் கொள்கை.

கந்தர் அநுபூதி சொன்னகிளி....நீ பிடிக்க
எய்துமோ –இலஞ்சி முருகன் உலா

(கண்ணி 205)

ஆனால், பொருள்வழி ஆயுமிடத்து சுவாமிகள் தமக்கிருந்த மனநிலைக்கும், பக்தி நிலைக்கும், ஞான நிலைக்கும் ஒத்தவாறு தனித்தனியே பாடிய பாடல்களின் பாடல் தொகுதி "கந்தர் அநுபூதி" எனலாம். அதிலுள்ள பாடல்கள் தவங்கிடந்த நிலையில் பாடப்பட்டன சில; தவங்கிடந்தும் சாந்தி பெறாது கலக்கமுற்ற நிலையில் பாடப்பெற்றன சில; பேறு பெற்று ஞான நிலையில் பாடப்பட்டன சில; உலகுக்கு உபதேசமாகப் பாடின சில எனப் பகுக்கக் கூடியனவாய் உள்ளன. மேலும் திருத்துருத்தித் தலத்தில் இறைவன் அநுபூதியைப் பாடுக என்று கட்டளையிட்ட பின், அநுபூதிப் பாடல்கள் சில பாடப்பட்டு இருக்கலாம் என்னும் கருத்தும் உள்ளது.

"அநுபூதி ஐம்பதுமே ஆருயிர் பேரின்ப
அநுபூதி நல்கும் அணி

என்னும் தணிகை உலா வரிகள் இதன் சிறப்பை உணர்த்துகின்றன.

இவ்வநுபூதி நூலில் பொருட் சிறப்பினை உணர்ந்து தாயுமான சுவாமிகள்,

"கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடி யிருக்கு நாள் எந்நாளோ!"

என்று வியந்து போற்றுகின்றார். அநுபூதியின் தன்னரிய நடையையும் செவ்விய பொருளையும் கண்டே பல்லாண்டு களாகப் பெரியோர்கள் இந்நூலை வழிபாட்டு நூலாகக் கொண்டு பலனடைந்து வருகின்றனர்.

நூலமைப்பு

கந்தர் அநுபூதியில் அருணகிரிநாதர் தமது அனுபவத்தை மிகவும் கூறியிருக்கின்றார். நமது உடம்பில் ஆறு ஆதாரங்கள் உண்டு. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநாகதம், விசுத்தி, ஆக்ஞை. இந்த ஆறு ஆதாரங்களில் வளர்ந்துள்ள மலர் இதழ்களில் அகர முதல் க்ஷகரம் முடிவாக 51 அட்சரங்கள் (எழுத்துக்கள்) உள்ளன.

இந்த 51 எழுத்துக்களும் ''மாத்ருகா மந்திரங்கள்'' எனப் படும். இம் மாத்ருகா மந்திரங்களையே அருணகிரிநாதர் 51 பாடல்களாகத் தொகுத்து கந்தர் அநுபூதி என்னும் நூலாகத் தந்துள்ளார் எனலாம்.

நூற்செய்திகள்

குருவின் அருளால் பெறக்கூடியது கல்வியும் ஞானமும் ஆகும். கல்வியினும், ஞானமே சிறந்தது. அந்த ஞானம் பெறுவதே அனுபூதி நிலையாகும். அந்த ஞானத்தைப் பெற்று விட்டால் மெய்ப்பொருள் கண்டு உய்வு பெற்றதாகிவிடும். எனவே மற்றதெல்லாம் எளிமையாகும். விருப்பு வெறுப்பற்ற நிலையில் தான் ஞானம் தோற்றமாகும். 'சும்மா இரு சொல்அற' என்று முருகன் உபதேசிக்க அந்த அருள் ஞானத்தை உணர்ந்தவர் அருணகிரியார். எனவே தான் ''ஐயா அருணகிரி அப்பா உனைப் போல மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்' என்றும் தாயுமானவர் வியக்கின்றார். 'நான்' என்பதை இழந்து இறைவனே எல்லாம் என்கின்ற மெய்ஞ்ஞானத்தை இறை யருளால், உணர்ந்தவர். அருணகிரி நாதர் 'முருகனே! மெய்ப் பொருள்' என்று உணர்ந்து தெரிவிக்கின்றார்.

இம் மெய்பொருள் என்னும் அருமையான திருமொழியை (தொடரை) அருணகிரிநாதர் 4 இடங்களில் கையாண்டுள்ளார்.

அமரும் பதிகேள் அகமாம் எனும் இப்பிரமம்
கெட மெய்ப் பொருள் பேசியவா

-பா. 8

கூகா எனஎன் கிளை கூடியழப்போகா
வகைமெய்ப் பொருள் பேசியவா

-பா. 11

அரிதாகிய மெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா

-பா. 20

கரவாகிய கல்வியுளர் கடைசென்றிறவா
வகைமெய்ப் பொருளீ குவையே

-பா. 45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், மனத்தை விளித்து மூன்று நற்கருத்துகளை உபதேசிக்கின்றார். "ஏ! மனமே! உடைமை யாவும் முருகனுடையவை என்னும் எண்ணத்தோடு வறியார்க்குப் பொருளைக் கொடுத்தால் வேதனைகள் நீங்கிவிடும். அவாவினால் தான் எல்லாத் துன்பங்களும் விளைகின்றன. அந்த அவாவினை ஒழித்து உய்வாய். அகந்தையை முருகன் அருளால் நீக்கிவிட்டு, தொண்டனாக இரு என்று தன் மனத்திற்கு உபதேசிப்பது போல் உலகினர்க்கு உணர்த்தி யுள்ளார். இந்நூலில் முருகனுடைய அறுபடைவீடுகளையோ, அருணகிரியையோ, அருள் கிடைத்த வயலூரையோ அவர் ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை.

"நாகாசல" - என்று (பா.11) திருச்செங்கோடு தலத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். முருகனைத் திருமால் மருகன் என்று மிக அழகாகத் திருப்புகழிலும், கந்தர் அலங்காரத்திலும், திருவகுப்பிலும் பல இடங்களில் கூறிய அருணகிரிநாதர் கந்தர் அநுபூதியில் ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை.

குமரகுருபரனாகிய முருகப் பெருமானை, குரு மூர்த்தமாக ஏற்றுக் கொண்டுதான், உண்மைப் பொருளை உணர முடியும் என்பதை 13வது பாடலில் தெளிவாகக் கூறியுள்ளார். எனவே முருகனைக் குருவாக அழைத்து இறுதிப் பாடலில் வேண்டுகின்றார்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

(பா. 51)

இந்நூல் மனவியல் உண்மைகளைத் தன்னுள் அடக்கிய மகத்தான நூல். எனவேதான் நூலின் தொடக்கத்திலேயே நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்துருக, என்னும் சொற்றொடரில் தொடங்குகின்றார். நம் மனத்தை அடக்கும் காரியமும் யானையை அடக்குகின்ற யானைப்பாகனது முயற்சியும் ஒன்றேயாகும். மனவடக்கத்திற்குத் தியானம் அவசியம். எனவே தான் யானை சகோதரனே! ஆடும் பரிவேல் அணிசேவல்... பணியா அருள்வாய் என்று வேண்டுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடும் பரிவேல் அணிசே வல்எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே

(ப. 1)

கந்தர் அலங்காரம்

கந்தர் அலங்காரம், நூறு பாடல்களைக் கொண்ட நூலாகும். இப்பாடல்கள் ஒரே சமயத்தில் பாடப்பட்டதல்ல. ஏனெனில், இது அருணகிரிநாதரின் மனமும் தவமும் நின்ற வழியே சந்தர்ப்பத்திற்குத் தக்கபடித் தனிப் பாடல்களாகப் பாடப் பட்டுள்ளன. பின்னர், அருணகிரியாராலோ அவர் தம் சீடர்களாலோ தொகுக்கப்பட்டு கந்தர் அலங்காரம் என்று பெயரிட்டிருக்கலாம். சிவபெருமானுக்கு திருவாசகம் எங்ஙனம் மகிழ்ச்சி தருமோ அங்ஙனம் முருகப்பிரானுக்குத் கந்தரலங்காரம் மகிழ்ச்சி தரும் எனலாம். யானைமுகனாகிய விநாயகப்பெருமானின்,இளையவரான முருகப்பெருமானை அருணையில் வடப்புறமாக வீற்றிருக்கும் முருகப்பெரு மானை அருகிற் சென்று காணப்பெற்றேன் என்கிறார் அருணகிரிநாதர்.

''அலகு ணைத்திருக் கோபுரத் தே, அந்த வாயிலுக்கு
வடஅருகில்சென்று கண்டுகொண் டேன்,....'

(காப்பு)

உமாதேவியின் அருமைக் குழந்தையும், இராமபிரானின் மருமகனுமான, வள்ளியின் மணாளனாகிய முருகப்பெருமான் தன்னை வைதவர்களையும் அப்பொழுதே அங்கேயே திருவருள் புரிந்து இனிது வாழ வைப்பவன் என்கிறார் அருணகிரிநாதர்.

'மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன், முத்தமிழால்
வைதாரை யும்அங்கு வாழவைப் போன்...

(பா. 22)

அருணகிரிநாதர், முருகப்பெருமானின் திருவருள் பெற்றவர் என்பதை நாம் அறிந்ததாயிருந்தாலும், அச்செய்தியை அவரே, தனக்கு முருகப்பிரான் உபதேசம் செய்ததாய்க் கூறியதோடு மட்டுமல்லாமல், அது இத்தகையது என்று கூறத்தகும் தரத்ததோ! என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேன்என்று பா(கு)என்(று) உவமிக் கொணாமொழித் தெய்வவள்ளி
கோன், அன்று எனக்குஉப தேசித்த(து) ஒன்று(உ)ண்டு, கூறவற்றே!

(9)

முருகனின் திருவருள் நிறைந்த தோற்றம் வந்து தோன்றுமாயின் எத்தகைய தீமையும் தம்மை என்னசெயும், உயிரைக் கவர்ந்து செல்லும் கொடிய யமனும் என்ன செய்ய இயலும் என்று வினவுகிறார் அருணகிரிநாதர்.

நாள்என் செயும்,வினை தான்என் செயும்,எனை நாடிவந்த
கோள்என் செயும்,கொடுங் கூற்(று)என் செயும்,கும ரேசர்
இருதாளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும்,
சண்முகமும், தோளும், கடம்பும் எனக்குமுன் னே வந்து
தோன்றிடினே

(38)

முருகப்பெருமானின் மலர் போன்ற பாதமும், திருநாமமும், தோள்களும், கைவேலும், மயில்வாகனமும் என்றென்றும் நமக்குத் துணையாவன ஆகும் என்பதை,

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள், மெய்ம்மை குன்றா,
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள், முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும், பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும் செங் கோடன் மயூரமுமே

(70)

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இத்தகைய சிறப்புடைய முருகப்பெருமானின் திருஉருவத்தைக் காணாத கண்களும், தொழாத கைகளும், திருப்புகழ் பாடாத நாவையும், திருவடியை வணங்கி முடியிற் சூடிக் கொள்ளாத தலையையும் எனக்கென்றே ஆராய்ந்து படைத்துள்ளானே பிரம்மன் என்று தன்னைத் தானே நொந்து கொள்கிறார் அருணகிரியார்.

கோடாத வேதனுக்(கு) யான்செய்த குற்றம்என், குன்(று) எறிந்
தாடாள னே,தென் தணிகைக் குமரநின் தண்டைஅம்தாள்
சூடாத சென்னியும், நாடாத கண்ணும், தொழாதகையும்,
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே.

(76)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்லொழுக்கப் பேற்றையும், தவத்தையும் சிறிதும் பெற்றில்லாத உலகமாயையில் உழன்று கிடந்து தன்னை முழுவதுமாக நீக்கி, முருகப்பெருமான் தனக்குத் திருவருள் காட்டிய வியக்கத்தகு தன்மையை அருணகிரிநாதர்,

'பேற்றைத் தவம்சற்றும் இல்லாத என்னை, ப்ர பஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்'

(பா. 1)

என்கிறார்.

அதுமட்டுமன்றி, 'செய்வதென் யான்' என்று 4வது பாடலிலும், 'உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பாய்' என 7வது பாடலிலும் குறிப்பிடுகிறார் அருணகிரிநாதர்.

பூரண அருள் நிரம்புவதற்கு முன்பு பாடப்பட்டவை சில; பூரண அருள் நிரம்பின பின் பாடப்பட்டன பிற என அறியலாம்.

இறைவனின் திருவருள் கிட்டிய பின், உலக மக்களுக்குக் கூறுவதாகக் கோபத்தை விடுங்கள், தானத்தை இடுங்கள் மனநிலைமாறாது இருந்தால், முருகப்பெருமானின் திருவருள் தானாகக் கிட்டும் என்பதை அருணகிரிநாதர்,

தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியைத், தானம் என்றும்
இடுங்கோள், இருந்த படியிருங் கோள்...............வைவேல்
விடுங்கோன் அருள்வந்து, தானே உமக்கு வெளிப்படுமே

(16)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

தம்மிடம் உள்ளதைச் சிறிதளவாயினும் பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும் என்ற செய்தியை மேற்கூறிய பாடலில் குறிப்பிட்டுள்ளது போல, இப்பாடலிலும், எத்தகைய செல்வம் இருப்பினும், முருகப்பிரானின் அடிபணி யாதவர்களுக்கு திருவருள் இல்லையென்றால் அச் செல்வத் தினால் ஏதும் பயனில்லை என்கிறார் அருணகிரிநாதர் (பா. 20).

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காணுங்கள்.

அருணகிரிநாதர் தான் இயற்றிய நூல்களில் ஒன்றில் கூறப்பட்டுள்ள செய்தியைப் பிறிதொன்றிலும் கூறியுள்ளார் என்பதற்குச் சான்றாக, திருவகுப்பு என்னும் நூலில் பூதவேதாள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வகுப்பில் கூறப்பட்டுள்ள பேய்கள் போர்க்களத்தில் கூத்தாடும் செய்தியை கந்தரலங்காரத்தில் 7வது பாடலில் அச்செய்கையை மனத்திலுள்ள மயக்க அறிவினையாக உவமித்து அதனை நீக்க வேண்டும் என்று முருகப்பிரானிடம் வேண்டுகிறார் (பா. 7)

சளத்திற் பிணிபட் டசட்டு கிரியைக்குட் டவிக்குமென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே.

முருகப்பெருமானை நினைத்தால், தீவினை அகலும், நல்வழி பிறக்கும், அகமாயை நீங்கும், என்றெல்லாம் அவரைச் சிறப்பித்துக் கூறியுள்ள அருணகிரிநாதர், அவரது கையில் தாங்கியுள்ள வேலாயுதத்தின் சிறப்பாக, கிரௌஞ்ச மலையை பிளந்து, அரக்கன் சேனையை நிலைகுலைந்திடச் செய்தது, சூரனுடைய கரிய உடல் பிளந்து, ஏழுமலைகளையும் பொடிப்படச் செய்தது என்று குறிப்பிடுகின்றார். பல பாடல்களில் கூறப்பட்டிருந்தாலும், வேலின் வலிமை என்று தனிப்பாடலாக ஒன்றை இயற்றியுள்ளார்.

தேரணி பாட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேல்,
கூரணி யிட்டணு வரகிக், கிரௌஞ்சம் குலைந்(து) அரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்தது, சூர்ப்
பேரணி கெட்டது, தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே

(பா. 3)

சூரனை இரண்டாகப் பிளந்து சேவலாகவும், மயிலாகவும் தன்னுடைய வாகனமாய்ச் சேர்த்துச் சிறப்பித்துள்ளார் முருகப் பெருமான். அத்தகைய மயிலின் திறனையும், சேவலின் திறனையும் சிறப்பித்துள்ளார் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதர், பெரும்பாலும் திருச்செந்தூரையும், திருச்செங்கோட்டையும் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், இந்திர லோகத்தைத் தாண்டியிருக்கும் அமராவதி தலத்தில் வீற்றிருக்கும் முருகப்பெருமானைப் பாடியுள்ளதை நோக்கின், கிளி வடிவாய் இருந்த பொழுது பாரிஜாத மலரை எடுத்துவர விண்ணுலகம் சென்றிருந்த போது தரிசித்து இருக்கலாம் என்பது கூற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விண்ணுலகத்துத் தேவர்கள் துதிக்கின்ற அமராவதியில் வீற்றுள்ள முருகப்பெருமானைத் தொழுவது தரிசிப்பவர் களுக்கு, எமராஜனின் செயல் தான் என்ன செய்ய முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

குமரா சரணம் சரணம் என்(று) அண்டர் குழாம்துதிக்கும்
அமரா வதியில் பெருமாள், திருமுகம் ஆறும்கண்ட
தமராகி வைகும் தனியான ஞான தபோதனர்க்(கு), இங்(கு)
எமராசன் விட்ட கடையேடு வந்(து) இனி யென்செயுமே

(பா. 18)

பெரும்பாலும், முருகப்பெருமானை, சிவபெருமானின் இளைய குமாரன், பார்வதியின் அருமைக் குழந்தை, விநாயகனின் இளையவன், திருமாலின் மருகன் என்றெல்லாம் பாடியுள்ளார்.

திருமாலைக் குறிப்பிடும்போது, மாயோன் என்று குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல், தசாவதார ரூபமாகிய இராமவதாரத்தையும், கூர்மவதாரத்தையும் ஏற்ற பெருமானின் மருகோனே என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

'கவியால் கடல் அடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்

(பா. 43)

என்ற பாடலில் குரங்குகளைக் கொண்டு கடலைத் தடுத்து அணைகட்டிய இராமனாகிய திருமாலின் மருகனே என்றும்,

இலங்கைக்குச் செல்ல, கடலருகிற் சென்று வழிகாட்டு என்று கூற, கடல் காட்டாதொழிய, கடல் நீரும் வற்றும்படி வெற்றியைத் தரும் கோதண்டம் என்ற வில்லை வளைத்த வனான இராமாவதார திருமாலின் மருகனே என்று இராமாயண செய்தியுடன், இராமவதாரத்தையும் இணைத்து முருகப் பிரானை வணங்குகிறார்.

...............யிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்(டு) என்று போய்க், கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே

(54)

தசாவதாரத்தில், பெருமாளின் அவதாரமாகிய கிருஷ்ண அவதாரத்தில், அவன் புரிந்த லீலைகள் எண்ணற்றவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதனுள் குறிப்பிடத்தக்கதாய் விளங்கும் இளம் பாலகனாகிய கண்ணபிரான் நஞ்சை தன்னகத்தே கொண்ட ஐந்து தலை நாகமாகிய காளிங்கன்மீது நடனம் புரிந்த திருமாலின் மருகனே என்று கிருஷ்ணவதாரச் செய்தியையும் இணைத்துள்ளது அவரின் கவித்திறனைப் புலப்படுத்துவதாகும். (பா. 50)

மேலும், வாமன ரூபமாய் அவதரித்து மாவலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி கேட்டு, உலகளாவிய தோற்றம் கொண்டு செவ்விய அடியை நீட்டிய திருமாலின் மருகனே உனது சிறிய திருவடிகள், மயில் மீதும், தேவர்கள் தலைமீதும், என்பாக்களின் அடியேட்டிலும் பதிந்துள்ளன என்பதாய் திருமாலின் அவதாரத்தையும், முருகனின் திருவடிச் சிறப்பினையும் இணைத்துப் பாடியுள்ளார்.

தாவடி யோட்டு மயிலிலும், தேவர்தலையிலும் என்
பாவடியேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டு, அன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே

(பா. 15)

திருமாலின் மருகன் என்ற கூற்றை எவ்வாறெல்லாம் திருமாலின் பெருமையையும் இணைத்துள்ளார் என்று மேற்கூறிய பாடல்களில் கூறியுள்ளார் என்பதோடுமட்டு மல்லாமல், பாற்கடலில் மந்திர மலையை மத்தாக நிறுத்தி வாசுகியைக் கடைகயிறாகப் பூட்டி, திருப்பாற்கடலைக் கடைந்த திருமாலின் மருகனே, உன்னுடன் என்னை இரண்டறக் கலந்து, உனது திருவருளைப் புரியும் காலம் என்று உண்டாகுமோ? என்று வேண்டுகிறார் அருணகிரிநாதர் (பா. 39)

இவ்வாறு, முருகனைப் போற்றிப் பணிவதால் நற்பயனைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், யம பயம் நீங்கி, வினைகளைப் போக்கித் திருவருள் புரிந்திடுவான் என்றும், அப்பிரானின் வேலாயுதத்தையும், மயில் வாகனத்தினையும், சேவல் கொடியின் வலிமையையும், சிறப்பித்துக் கூறியுள்ளார்.

'திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்று சிவபெருமானுக்குத் திருவாசகம் எங்ஙனம் ருசிக்குமோ அங்ஙனம் கந்தரலங்காரம் ருசிக்கும் எனலாம். இந்நூல் ஒரு பாராயண நூலாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவகுப்பு

அருணகிரிநாதர் மதுரைத்தலத்தில் முருகப்பெருமானைத் தரிசித்தபோது ஒரு வேண்டுகோளைச் செய்தார்.

''வரிசை தரும் பதம் அதுபாடி - வளமொடு
செந்தமிழ் உரைசெய அன்பரும்
மகிழ வரங்களும் அருள்வாயே''

(திருப்புகழ் 962)

என்பதே அவ்வாக்கு. இவ்வேண்டுகோளே சீர்பாத வகுப்புப் பாடுவதற்கு வித்து எனலாம். பிறகு பொதுப்பாடல் ஒன்றில் அவர் முருகா! ''நின்படி யுகப்ரசித்தி என்புன வகுத்துரைக்க நின்பணி தமிழ்த்ரயத்தை அருள்வாயே (திருப்புகழ் 1233) என்று வேண்டினார்.

இவ்வேண்டுகோள் சீர்பாத வகுப்பு முதலான எல்லா வகுப்புகளுக்கும் காரணமாயிற்று எனலாம். அங்ஙனமே அருணகிரியார் முருகன் அருளால் ''திருவகுப்பு'' பாடினார்.

சீர்பாத வகுப்பு முதலாகச் சிவலோக வகுப்பு வரைஉள்ள பதினெட்டு வகுப்புகளே அருணகிரிநாதர் அருளியது என்பது ஆன்றோர் கொள்கை. சில பிரதிகளில் 32 வகுப்புகள் வரை அதிகமாக உள்ளது. அவை அருணகிரியார் வாக்கல்ல என்கின்றனர் சிலர். முருகன் திருவடிச் சிறப்பு முருகன் அடியார் பெருமை, முருகன் படை, முருகனுக்கு உகந்த நாயகி, முருகன் திருவாய் மலர்ந்த உபதேச மொழி, முருகன் சேனை, போர் வீரம், முருகன் உபதேசத்தால் பெற்ற ஞானப் பிரசாதத்தின் சீரும் சிறப்பும், பன்னிரு புயங்களின் பெருமை, முருகன் திருப்புகழ். பெருமை, திருநோக்கச் சிறப்பு, திருவருளாற்பெற்ற அன்பின் சிறப்பு ஆகியவை பதினெட்டு வகுப்புகளில் கூறப்பட்டுள்ள செய்திகளாகும். பல பாடல்களில் திருத்தணிகை பற்றிக் கூறப்பட்டிருப்பதனால், கிளியானபின் அருணகிரியார் திருத்தணிகைக்கு வந்து திருவகுப்புகளில் பலபாடி இருப்பார் என்பது ஆன்றோர் கூற்று.

சீர்பாத வகுப்பு ஞானத்தை அளித்து, யமபயத்தை நீக்கி அருள் நெறியில் சேர்த்து வினைப்பகையை அழித்தொழிக்கும். தேவேந்திர சங்கவகுப்பு பூதம், பிசாசு ஆகிய தீய கொடிய பகைகளையும் யமனையும் வெருட்டவல்லது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேல் வகுப்பு எவ்வித ஆபத்தையும் நீக்கி உயிர்க்கு உற்ற துணையாய் நிற்பது.

வேளைக்காரன் வகுப்பு, வேடிச்சி காவலன் வகுப்பு, புயவகுப்பு இம்மூன்றும் பத்தித்துறையிழிந்து, ஆனந்தவாரியில் திளைத்து நிற்பதற்கு உதவும் துதிகளைக் கூறுவது.

வேல் வாங்கு வகுப்பு, போர், பூகம்பம், வெள்ளம், தீ ஆகிய பெரிய ஆபத்துக்களினின்றும் நம்மைக் காக்கவல்ல பேராற்றல் கொண்டது. கடைக் கணியல் வகுப்பு, உலகோரை முருகனிடத்தே ஆற்றுப்படுத்தி உய்யும் வழியை எடுத்துரைக்கும் பெருங்கருணை உடையது.

கழகவெளியீட்டில் ''திருவகுப்பு'' என்னும் நூலில் 25 வகுப்புகள் கூறப்பட்டுள்ளன. இப்பாடல்களை அருணகிரியார் சந்தப்பாவில் மொழிந்துள்ளார்.

நூலின் உயர் பொருளான திருவேளைக்காரன் வகுப்பில்,

''ஏழையின் இரட்டைவினை யாலதொருடற் சிறையிராமல்
விடுவித்தருள் நியாயக் காரனும்''

என்னும் தொடராலும் சித்திகள் பலவும் கைகூடிய பின் இந்நூல் பாடப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் வ.சு.செங்கல்வராய பிள்ளை அவர்கள்.

முருகனினும் சிறந்தது அவருடைய சீர்பாதம்.

எனவே முதலில் சீர்பாத வகுப்புப் பாடியுள்ளார்.

தேவதுதிபோல அழகும் சிறப்பும் வாய்ந்த தேவி துதி போல உள்ளது, தேவேந்திர சங்க வகுப்பு. இவ்வாறு ஒவ்வொரு வகுப்பிலும் பல சிறப்புச் செய்திகள் உள.

இத்திருவகுப்புப் பாடல்களை இன்றளவும் உலகோர் பத்திமை கொண்டு பாடி மகிழ்கின்றனர்.

திருஞான சம்பந்தர் முருகரே என்ற கொள்கையைத் திருவகுப்பு, கந்தரநுபூதி, கந்தரலங்காரம் ஆகிய நூல்களில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, கந்தரலங்காரம் பாடும் பொழுது இருந்த நிலையிலும் மேம்பட்டு சிவஞான நிலையில் இருந்து பாடப்பட்டது திருவகுப்பு என்றறியலாம். இத்திருவகுப்பின் பெருமையை ''நூலறி புலவ''னாம் திருமுருகன் ஒருவனே அறிவன் என்பது குறிப்பிடத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீர்பாத வகுப்பு

இவ்வகுப்பே மிகப் பிரதானமானது. ஏனெனில் முருகரினுஞ் சிறந்தது அவருடைய சீர்பாதம், என்பதை

"நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை"

என்கிறது பரிபாடல்.

மேலும், இறைவனின் திருவடியைப் போற்றினாலே போதும் அவனருளும் கிட்டும் என்பது ஆன்றோர் வாக்கு

இவ்வகுப்பு ஞானத்தை அளித்து யமபயத்தை நீக்கி அருள் நெறியில் சேர்த்து வினைப்பகையை அழித்தொழிக்கும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

'முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்கெட
முடுகுவதும் அருணெறியில் உதவுவதும் நினையுமவை
முடியவரு வதுமடியர் பகைகோடி சாடுவதும்'

(பா. 1)

என்னும் பாடலில் தெரிவித்துள்ளார்.

தேவேந்திர சங்க வகுப்பு

இவ்வகுப்பில் குறிப்பிட்டுள்ளது போல் தேவியின் துதிபோல அழகும், சிறப்பும், வேறு தமிழ் நூல்களிற் காண்பது அரிது. மேலும், பூதப்பிசாசு ஆகிய தீய கொடிய பகைகளையும் யமனையும் வெருட்ட வல்லது.

வேல் வகுப்பு

வேலின் பெருமையையும் ஆற்றலையும் கூறுவதோ டல்லாமல் எவ்வித ஆபத்தையும் நீக்கி உயிர்க்கு உற்ற துணையாய் நிற்கும் என்கிறார் அருணகிரியார்.

முருகனின் கையிலுள்ள வேலுக்கு ஒப்பாக வள்ளிப் பிராட்டியார் கண்களைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

'பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கருத்த குழல்
சிவந்த இதழ் மறச்சிறுமி விழிக்கு நிகராகும்... வேலே'

வேலின் பெருமை சிறந்த பொருளுடன் இவ்வகுப்பு எடுத்துக்கூறியுள்ளது என்பதை, இவ்வகுப்பின் முத லெழுத்தையும், கடையெழுத்தையும் கூட்டி வரும் 'பலே'! என்னும் சொல் கொண்டே அறியலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேளைக்காரன் வகுப்பு

வள்ளிப்பிராட்டியுடன் முருகப்பெருமான் பொழுதைப் போக்குவதாக இவ்வகுப்பு அமைந்துள்ளது. இதனை மெய்ப்பிப்பதாய்த் திருப்புகழ்க் கூற்றும் உள்ளது.

"விந்தை குறமாது வேளைக்கார"

(திருப். 41)

'அத்த மறவர் மகள் வேளைக்காரப் பெருமானே

(திருப். 1026)

இந்த வகுப்பின் 12வது அடியில், 'ஏழையின் இரட்டை வினையாய தொருடற் சிறை பாராமல் விடுவித்தருள் நியாயக் காரனும்' எனக்கூறித் தமது மானுட உடலம் மறைந்ததைப் பற்றி மகிழ்ச்சி தெரிவிக்கின்றார். வேளைக்காரன் - பொழுது போக்குபவன் என்னும் பொருளை,

'குருவி யோச்சிய... திருமானை... தொழுது என்றும் பொழுது போக்கிய பெருமானே

என்னும் திருப் - 1181இல் காணலாம்.

பெருத்த வசன வகுப்பு

முருகப்பிரான் அருணகிரிநாதருக்கு உபதேசித்த மௌனோபதேசத்தின் சிறப்பினை இவ்வகுப்பு தெரிவிக்கின்றது.

பூதவேதாள வகுப்பு

முருகப்பிரான் சூரனோடு போரிட்ட பொழுது ஆடிய அநேக விதமான பூதப் பிசாசுகளின் வருணனையைக் குறிப்பதாய் அமைந்துள்ளது.

பரணி நூல்களில் உள்ளவாறு மிக அருமையான 'போர்க் களத்துப் பூத வேதாள' வர்ணனை இதிலும் காணப்படுகிறது.

உதாரணமாக, சிறுபிள்ளைகள் புளியங் கொட்டையில் ஒத்தையா இரட்டையா விளையாடுவது போல, யுத்த களத்தில் இறந்த அரச மன்னர்களின் முடிகளினின்றும் சிதறி விழுந்த இரத்தின மணிக் குவியல்களை வைத்து இவைகள் விளையாடின என்று கூறுகின்றார்.

பொருகளத்தலவை வகுப்பு

முன்கூறிய வகுப்பினைப் போல் பேய்களின் வருணனை உடையதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செருக்களத் தலகை வகுப்பு

சென்ற திருவகுப்பைத் தழுவியதாய் உள்ளது.

அடி 13ல் 'அதரத்து விரற்பட வைத்து அரவத்தொடு கொக்கரிக்கும்; பிள்ளைகள் உதட்டில் விரல் வைத்துச் சீழ்க்கை யிடுவது போலச் செருக்களத்திற் பேய்கள் தமது வாயிதழில் விரல் வைத்துச் சீழ்க்கை யிட்டனவாம்.

திருஞான வேழ வகுப்பு

மௌனஞான விசேஷத்தைக் குறிப்பிடுகின்றது. சிவஞான வேழம் செய்ய வல்ல பெருஞ் செயல்கள் பதினெட்டு என்கிறார். இறைவனின் மெய்த்தவத் திருவருள், உண்மைத் தவத்தின் பேறாகக் கிடைக்கும் என்பதை

'கருணை மெய்த்தவத் திருவருட்'

என்று குறிப்பிட்டுள்ளார்.

திருக்கையில் வழக்க வகுப்பு

இவ்வகுப்பு திருத்தணிகைப் பெருமாளின் திருப்புகழைப் பாடுபவர்க்கு அவர் திருக்கையில் அளிக்கப்படும் பிரசாத மகிமையைக் கூறுகிறது. இவ்வகுப்பில், 'வினைப்பகை செகுப்பவன்' என்னும் அடி 'நினைப் புடை மனத்தவர் வினைப் பகையு நீயே' என்ற சம்பந்தர் திருவாக்கை நினை வூட்டுகின்றது.

வேடிச்சி காவலன் வகுப்பு

இவ்வகுப்பு வேடர் மகளாம் வள்ளி காதலராகிய முருகன் பெருமையைக் கூறுவதாக அமைந்துள்ளது. 19ஆம் அடி முருகவேள் தம்மை வழியடிமையாக ஆட்கொண்டு அருளிய அருட் பிரசாதத்தை இங்குக் குறிப்பிட்டுள்ளார்.

'எழுமையும் எனைத்தனது கழல்பரவு பத்தனென
இனிதுகவி யப்படிப்ர சாதித்த பாவலனும்'

வேல் வாங்கு வகுப்பு

முருகப்பிரான் தன் கையிலுடைய வேலைப் பயன்படுத்திய தால் நேர்ந்தன இவை என்று குறிப்பிடுவதாய் அமைந்துள்ளது. குறிப்பாக, பிரமனைச் சிறையிட்டது வேல் என்கிறார் அருணகிரியார் (அடி 9)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புயவகுப்பு

முருகவேளின் பன்னிரு திருக்கரங்களின் செயல்களை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது இவ்வகுப்பு. இதில் முதல் 12 அடிகளில் திருமுருகாற்றுப் படையை அப்படியே தழுவி பின்னர் முருகன் திருப்புயத்தின் சிறப்புகள் வேறு பலவற்றை எடுத்துக் கூறுகின்றது.

சித்து வகுப்பு

அரிய உபதேச மந்திரம் இவ்வகுப்பில் இருப்பதால் 'நமச்சிவாய வாழ்க' என்னும் திருமந்திரத்துடன் திருவாசகம் தொடங்குவது போல, 'வேலும் மயிலும் வாழி' என்ற திருமந்திரத்துடன் தொடக்கம் பெறுகின்றது.

வேலின் துணையால் வினை நீங்கி, பிறப்பு ஒழியும்;
மயிலின் துணையால் ஆணவம் ஒழியும்

கடைக்கணியல் வகுப்பு:

இறைவனாகிய முருகப் பிரானது கடைக் கண் பார்வையால் விளையும் பெருமையைக் கூறுவதாய் அமைந்துள்ளது.

ஒருவர் தனக்கு வேண்டியவராயிருந்த போதிலும் அவர் பிழையான வழியிற் சென்றால் அவரை முருகன் தண்டிப்பான் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவலோக வகுப்பு

மௌன யோக நிலையில் வரும் பேரின்பமாகிய அன்பின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது.

'அன்பு சிவம் இரண்டென்பார் அறிவிலார்,
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்'

திருமந்திரம் (270)

காரைக்கால் அம்மையாரும் இறைவனிடம் வேண்டியது 'இறவாத இன்ப அன்பு' (பெ.பு. காரை அ. 60) என்றும் அழிவிலாத, பதினாறு பேறுகளைத் தருவது இவ்வன்பு என்னும் சிவலோகம் ஆகும்.

வேல், மயில், சேவல் விருத்தங்கள்

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று வேல் கை விமலனிடம் அருணகிரிநாதர், கந்தர் அநுபூதியில் விண்ணப்பம் செய்துள்ளார். வேல், மயில், சேவல் இம்மூன்றையும் பாட, வரங்கேட்கும் அருணகிரிநாதரின் எண்ணம் ஆய்வுக்குரியது. வேலும் மயிலும் நினைந்தவர் தம் துயர் தீர்வர் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவராய் இருந்தார் அருணகிரிநாதர் எனலாம். வேலும் மயிலும் துணை என்று நினைப்பதால் அறியாமை நீங்கி, ஞானம் புலப்படும்; நீண்ட ஆயுளும் சகல பேறுகளும் கிடைக்கும். ஏனெனில் வேல் – ஞானசக்தி; மயில் - பிரணவத்தின் வடிவமானது. அண்டங்கள் அனைத்தையும் தனது வடிவமாக கொண்டது. மயில். அதனாலேயே இவ்வுலக வாழ்வு மட்டுமின்றி, மறுமைக்கும் பேறு கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையோடு வேலையும், மயிலையும் போற்றினார் எனலாம். சேவல் நாத வடிவம், சேவலைப் பாடிப் பரவுவதால், பூதப் பிரேத பிசாசுகளும், ஏவல் பில்லி சூனியங்களாலும் வரும் தீவினைகள் நீங்கும். எனவே தான் வேல், மயில், சேவல் விருத்தங்களை அருணகிரிநாதர் அழகுறப் பாடியுள்ளார்.

திருத்தக்கதேவர் முதன் முதலில் விருத்தம் என்னும் யாப்பு வகையை, இலக்கிய உலகில் அறிமுகப் படுத்தினார். ''விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்'' என்னும் இத் தொடர், கம்பன் தன்னுடைய இராமகாதையில் கையாண்டுள்ள சிறப்பினையும், பெருமையினையும் வெளிப்படுத்துவதாகும். அடிதோறும் ஆறுசீர்களும், அதற்கு மேற்பட்ட சீர்களும் பொருந்தியதாய் நான்கு வகைகளையுடையதாய், ஒரே விகற்பம் அமைந்து வருமானால் அதற்குக் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம் என்று பெயர். விருத்தப்பாக்களின் மூலமாக, புலவர் பெருமக்கள் ஓசை ஒழுங்குகளை வெளிப்படுத்தி, பெருமை யுற்று இருக்கின்றனர். அந்த நிலையில் அருணகிரிநாதரும் 12 சீர்களை உடையதான கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்களில் இவ்விருத்தங்களைப் பாடியுள்ளார்.

வேல் விருத்தம்

இப்பகுதி, 10 விருத்தப் பாடல்களால் அமைந்துள்ளது. குமரக் கடவுளின் வேலின் ஆற்றலை விளக்குவனவாய் உள்ளது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குமாரக் கடவுள் விடுத்த வேல், கடலைக் குடித்த வடிவேல், சூரனை அழித்த வீரவேல், செவ்வேட் பரமனது செங்கைவேல், அசுரர்களை அழித்த வேல், எமபயம் தீர்க்கும் கந்தவேல், சுழன்றால் உலகமெல்லாம் சுழலும், அடியார்க்கு அழிவில்லாத ஆனந்தத்தைத் தரக்கூடியது வேல், இந்திரனுக்கு அரசு தந்த வேல், தேவமாதர்கள் பாடிப்பரவும் புகழுடைய வேல், இந்திரன் முதலான தேவர்களுக்குச் சிறை நீக்கிய வேல்,

முனிவர்கள், தேவர்கள், நக்கீரர் போன்றோர் துதித்த வேல். என்றெல்லாம் வேலின் பெருமையை விளக்கியுள்ளார்.

இந்திரன் மலைகளின் சிறகுகளை வச்சிராயுதம் கொண்டு அறுத்தான். கிரௌஞ்ச மலையையும் சூரபன்மனையும் அழித்தது வேல். இந்திரனுக்கு, இந்திர பதவி அளித்தமை. முதலான புராணச் செய்திகளை ஆசிரியர் வெளிப் படுத்து கின்றார்.நெய்தல் நிலத்துப் பெண்கள் நெல்லுடன் முத்தை உலையிலிட்டு விளையாடி மகிழ்வார்கள். உலகில் உள்ள நதிகளில் தலைமையான கங்கை நதியோடு, பிற நதிகளையும் தடையின்றிப் பெருக்கெடுத்து ஓடும்படிச் செய்தலும் இவ்வேலே என்று சிறப்பித்துக் கூறுகின்றார்.

கிரௌஞ்சம் என்னும் ஒரு மலையுடனும், சூரபன்மனுடன் வந்த ஏழுமலைகளுடனும் போர் செய்தது போதாது என்று தேவசேனை, வள்ளி என்ற இருவர்களின் நான்கு தனங் களாகிய மலைகளுடனும் முருகவேள் போர் புரிந்தார் என்பதனை,

..................................அமரர் குயிலுங்,
குகரமலை எயினர்குல மடமயிலும் எனஇருவர்
குயமொடர் புரியுமுருகன்

(பா. 1)

என்று நயம்படக் கூறியுள்ளார்.

மூன்றாவது பாடலில் ஆறுபடை வீடுகளையும் கதிர்காமத்தையும், திருவிடைக் கழியையும், முருகனுடைய தலங்களாகக் குறிப்பிட்டார் அருணகிரிநாதர். மேலும், முருகனைப் போற்றுகின்ற அடியவர்கள் நாவிலும் அறிவிலும் கூட அவன் எழுந்தருளியிருப்பான் என்று கூறுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தானவர் நிணத்தசை அருந்திப் புரந்த வேல்

(பா. 3)

புகழுமவரவர் நாவினில் புந்தியில் அமர்ந்தவன்

(பா. 3)

வேலாயுதம் கொடியவர்க்கு நஞ்சாகவும், அடியவர்க்கு அமுதாகவும் விளங்கும். சூரியன் ஒளியைவிடச் சிறந்த ஞானஒளி உடையது வேல். ஆனால், தவமுனிவர்களுக்குச் சந்திரனைப் போல் குளிர்ந்து இனிமை செய்யக்கூடியது. அடியார்களின் மூலப்பழ வினைகளை நீக்கவல்லது. அகப்பகை, புறப்பகை அழித்து, இந்திராதி தேவர்கட்கும் எட்டாத முத்தி நலத்தை வழங்கக் கூடியது. இத்தகைய அருட்திறத்தால் எல்லா உலகங்களும் போற்றுகின்ற பெருமை யுடையது. எனவேதான் அக்கூரியவேல் ஞான வேலாகவும், வீர வேலாகவும், தாரக மந்திர வேலாகவும், தனி வேலாகவும் போற்றப்படுகின்றது.

ஏழு மரா மரங்களை, இராமனின் அம்பு ஒன்று, ஒரு நொடியில் துளைத்தது என்று இராமாயணம் வியந்து பேசும். அப்படியிருக்க முருகனது கைவேல் ஒரு நொடியில், ஒரு கோடி அண்டங்களையும் எண்ணற்ற குல மலைகளையும், ஊடறுத்துச் செல்லும் ஆற்றலுடையது என்று வேலின் தனிப்பெருமையை அருணகிரியார் ஏழாவது பாடலில் குறிப்பிடுகின்றார்.

அண்டங்கள் ஒரு கோடி ஆயினும் குலகிரி
அநந்தமா யினுமேவினால்
அடையவுரு விப்புறம் போவதல் லதுதங்கல்
அறியாது...

(பாடல் – 7)

இவ்வேல் விருத்தத்தில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்து வருகின்றன. சான்றாக,

வடமொழிச் சொற்கள்		தமிழ்ச்சொற்கள்
செகசிர பகிரதி	-	உலகில் சிறந்த கங்கை
உததி	-	கடல்
நிசிசரர்	-	அரக்கர்கள்
சங்க்ராமனே	-	போர்வீரனே
சதகோடி	-	நூறுகோடி
மனோலயம்	-	மனச்சாந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில் விருத்தம்

தோகை விரித்தாடும் பச்சைமயில், முருகப் பெருமானுக்கு வாகனமாய் அமைந்துள்ளது. சூரன்பன்மனை வேலாயுதம் கொண்டு கூறுபடுத்தினார். அப்பொழுது சூரபதுமன் மயிலாகவும், சேவலாகவும் மாறி நின்றான். கருணையுடைய முருகன் மயிலை வாகனமாகவும், சேவலைத் தனிக் கொடி யாகவும் அருளினான். விரைந்து செல்லும் ஆற்றலை உடையதும் பேரழகு உடையதும், பேரண்டத் தோற்றமுடை யதும், பிரணவப் பொருளின் வடிவமாகவும் திகழக் கூடியது மயில். அந்த மயில் குறித்துப் பாடியுள்ள இவ்விருத்தத்தில் விக்ன விநாயகனின் தம்பியைப் போற்றிக் காப்புச் செய்யுள் ஒன்றும், பத்துப் பாடல்களும், பயன் தரும் பதிகப்பாடல் ஒன்றும் ஆகிய 12 பாடலாகக் கொண்டு (1+10+1=12 பாடல்கள்), இந்நூலைப் பாடியுள்ளார் அருணகிரிநாதர் என்பது குறிப்பிடத் தக்கது. அடிதோறும் 12 சீர்களைப் பெற்று வருகின்றது. சேவல் விருத்தம், வேல் விருத்தம் ஆகியவற்றைக் காட்டிலும் இம்மயில் விருத்தத்தில் மிகுதியான வடசொற்களைக் கை யாண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மயில் விருத்தம், சந்த விருத்தமாகவே அமைந்துள்ளது.

திருத்தணிகைத் தலத்தை மிகுதியாக இவ்விருத்தத்தில் குறிப்பிடுகின்றார். விநாயகப் பெருமான் நாடொறும் தாய் தந்தையரைப் பூசிப்பதற்கு இரத்தினக் கலசத்தைக் கையில் ஏந்தியுள்ளார். எனவே 'கலசகர' என்று போற்றப் படுகின்றார். இந்திரனின் மனைவி சசிதேவியின் திருமாங்கல்யத்துடன் கூடிய நூலைத் தாங்கிக் காத்தவன் முருகன் என்பதை,

"குலிசாயுதத் திந்த்ராணி மங்கல்ய தந்து ரட்சாபரண"

(பா. 1)

என்னும்தொடரால் குறிப்பிடுகின்றார்.

விநாயகரது தம்பியே! உனது சீதளபாதத்தை எனக்கு அருள்வாயாக என்று காப்புச் செய்யுளில் வேண்டிய அருண கிரிநாதர், 'முருகன் ஏறிவருகின்ற மயில் தான், உலகங்களை ஒரு நொடியில் வலம் வந்த மயில், ஆதிசேடன் அஞ்சவும், சூராதி அவுணர் திடுக்கிடவும், செய்து நடனமிடுகின்ற மயில், தணிகை முருகன் மயில்தான் சிவபெருமானும் உமாதேவியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உளம் மகிழ நடனம் புரிகின்ற மயில், கடல்வற்றவும் மலைகள் சிதறவும் பறக்கின்ற மயில், பெண்மயில் தான்இட்ட முட்டை களை அணைக்கின்ற தன்மை போல, எல்லா அண்டங்களையும் தனது வளைந்த சிறகினால் அணைக்க வல்லது முருகனின் மயில்; வாசுகியை எடுத்து உதற வல்ல ஆற்றல் பெற்ற வெற்றி மயில்; உலகெல்லாம் உலாவி உவக்கும் பெருமையுடையது மயில்' என்று பலவாறாக மயிலின் பெருமைகளைப் போற்று கின்றார். இந்த மயில் விருத்தத்தை அன்புடன் ஓதுகின்ற அடியார்கள் சகல பதவிகளையும் மேலான புகழையும், அழியாத முக்தி நலமாகிய வரத்தையும் பெறுவார்கள் என்று நூற்பயனாக அருணகிரிநாதர் தெரிவிக்கின்றார்.

உமாதேவியார் கொண்ட ஊடல் தணியும் பொருட்டு உமாதேவியின் திருவடியில், யோகீஸ்வரராகிய சிவபெருமான் பணிகின்றார். அப்பொழுது அவர் தலையில் இருக்கும் கங்கையாகிய சக்களத்தியும் தேவியின் பாதகமலத்தில் விழுந்தாள் என்பதை அருணகிரிநாதர் நயம்பட

'கவுரி பத்மப்பதங் கமழ்தரும் பாகீரதிச் சடில யோகீச்சுரர்'

(பா. 2)

என்று குறிப்பாக உரைக்கின்றார். செங்கழுநீர் மலர்கள் மிகுதியாக உடையதனால் திருத்தணிக்குக் 'கல்லாரகிரி' (பா. 2) என்றும் முருகப் பெருமானுக்குச் 'செங்கல்வராயர்' என்றும் பெயர் ஏற்பட்டது என்பதை உணர்த்துகின்றார்.

மால் பெருமையுடையவன் எனவே தன்பால் தோன்றிய பிரம்மனுடைய சகோதரி வள்ளிப் பிராட்டியார் என்னும் பொருள்பட அமைந்துள்ளது.

விதியானவன் இளையாள் எனதுளமேவிய வள்ளி நாயகி
மதனேவிய

(திருப்புகழ்)

யானைகள் மூன்று வகைப்படும். காட்டில் பிறந்த யானைகள் வனசரம்; மலைகளில் பிறந்த யானைகள் கிரிசரம்; ஆற்றங் கரைகளில் பிறந்த யானைகள் நதிசரம்.

மூன்றாவது விருத்தத்தில்,

"எறிகவுள் கிரிசரம் பெயரவே"

(பா. 3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் தொடரில் 'கிரிசரம்' என்னும் சொல்லாட்சியைக் கையாளுகிறார். பேய்கள் நடைபேதம், கதிபேதம், தவறித் தாளம் போட்டாலும் அதற்குப் பொருந்தவும், நடராசப் பெருமான் நடனமாடுகின்றாராம்.

நடனத்தில் வல்லுநரான நடராஜப் பெருமானே, மயிலின் நடனத்தைக் கண்டு மகிழ்கின்றார் என்பதை நயம்படக் கூறியுள்ளார்.

வேதாள தாளங்களுக் கிசைய ஆடுவார்
மிக்கப்பிரி யப்பட விடா
விழிபவுரி கவுரிகண் டுளமகிழ விளையாடும்
விஸ்தார நிருத்த மயிலாம்.

(பா. 3)

பெண்மயில் தான் இட்ட முட்டைகளை அணைத்துக் காக்கும். முருகப்பெருமானது மயிலோ எல்லா அண்டங் களையும் தனது சிறகினால் அணைத்துக் காக்கும் பேராற்றல் பெற்றதாக விளங்குகிறது என்பதை,

அண்டங்கள் யாவும் கொடுங் சிறகினால்
அணையும் தனதுபேடை அண்டங்கள் என்னவே
அணைக்கும் கலாப மயிலாம்

(பா. 5)

என்னும் தொடரில் குறிக்கின்றார்.

முருகப் பெருமானது மயில் தனது தோகையை விரித்தாடிய காலத்துப் பேரிருள் சூழ்ந்தது. அதைக்கண்டு யுகமுடிவான, சம்ஹார காலம் வந்து விட்டதோ என்று மாலும், அயனும் அஞ்சினார்கள், அனைத்து உலகங்களும் நடுங்கினவாம். சந்திர சூரியர்கள் ஒடுங்கிக் கொண்டார்கள். இந்திரன் முதலான தேவர்கள் கலக்கம் அடைந்தார்கள் என்று நயம்பட உரைக்கின்றார்.

சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
சகலலோகமு நடுங்கச்
சந்த்ர சூரியரொளித் திந்த்ராதி அமரருஞ்
சஞ்சலப் பட.

(பா. 6)

என்கிறார். மேலும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயர்ந்த சிகரங்களையுடைய பொன்மயமான மேருமலை, வெள்ளிமலை, நீலகிரி என்று சொல்லும்படியும், ஆயிரம் முகங்களாய்ப் பரவி வரும் தெய்வ நதியாகிய கங்கா நதி, யமுனா நதி என்று சொல்லும்படியும் ஒளி வீசி, வெண்ணிலா, வெண்சங்கு என்று சொல்லும் படியும் திருவாசிக்கு (ப்ரள) நிகர் என்றும், எழுதுதற்கு அரிதான சக்கரம் போல் வட்ட வடிவுள்ளது என்றும், உலகம் முழுமையும் பரவி நின்ற மேகத்துக்கு ஒப்பாகும் என்றும், மயிலின் தோகையைச் சிறப்பித்துப் பல உவமைகளை அருணகிரிநாதர் கையாண்டுள்ளார்.

இந்த உவமைகளை 'அனகனென' என்று தொடங்கும் திருப்புகழிலும், 'குடருமலி' எனத் தொடங்கும் திருப் புகழிலும் கையாண்டு இருக்கின்றார்.

"சிகரதம னியமேரு கிரிரசத கிரிநீல
  கிரியெனவு ஆயிரமுகத்
தெய்வநதி காளிந்தி யெனநீழல்இட் டவெண்
  திங்கள்சங் கெனவும் ப்ரபா
நிகரெனவும் எழுதரிய நேமியென உலகடைய
  நின்றமா முகில் என்னவே
நெடியமுது ககனமுக டுறவீசி நிமிருமொரு
  நீலக் கலாபமயிலாம்"

(பா. 9)

ஞானசம்பந்தர் தாம் பாடிய பதிகந்தோறும் கடைக்காப்புச் செய்யுளில் பதிகப் பலனையும் தம் பெயரையும் குறிப்பிடுவது வழக்கம். திருமுருகனே, திருஞானசம்பந்தராக அவதரித்தார் என்று கருதுகின்ற அருணகிரியார் அதேபோல் மயில் விருத்தப் பாடலின் இறுதிப் பாடலில் தன் பெயரையும் குறித்து, பயனையும் தெரிவிக்கின்றார்.

பன்னாளும் அடி பரவும் அருணகிரிநாதன்
  பகர்ந்தஅதி மதுரசித்ரப்
பாடல்தரு மாசறு விருத்தம்ஒரு பத்தும்
  படிப்பவர்கள் ஆதிமறைநூல்
மன்னான் முகம்பெறுவர் அன்னம் ஏறப்பெறுவர்
  வாணிதழு வப்பெறுவரால்
மகரால யம்பெறுவர் உவணம் ஏறப்பெறுவர்
  வாரிச மடந்தையுடன் வாழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்நாய கம்பெறுவர் அயிராவ தம்பெறுவர்
அமுதா சனம்பெறுவர் மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர் பெறுவர்
அழியா வரம்பெறுவரே

(பா 11)

மயில் விருத்தத்தைப் படிக்கக் கூடியவர்கள் பிரம்மபதம் பெறுவார்கள். அதனால் பிரம்மதேவனின் வாகனமான அன்னத்தின் மேலேறிச் சத்தியலோகத்தில் உலாவும் பேறடைவர். கலைமகள் அருள் நிரம்பப் பெறுவர். மகராலயம் எனும் கடலுக்குத் தலைமை பூணும் வருணபதம் பெறுவர். கருட வாகனத்தில் உலாவும் நன்மை பெறுவர். லட்சுமி கடாட்சம் பெறுவர். விஷ்ணுபதம் பெறுவர் . இந்திரனின் யானையான ஐராவதம் ஏறப் பெறுவர். இந்திரபதம் பெறுவர். அமுதம் உணவாகப் பெற்றுமகிழ்வர். ஆயிரம்பிறை தொழும் நிறை ஆயுளைப் பெறுவர். எல்லோராலும் பாராட்டப் படுகின்ற புகழ் பெறுவர். அழியா முத்தி நலமாகிய வரம் பெறுவர் என்று கூறுகின்றார் அருணகிரிநாதர்.

சேவல் விருத்தம்

மயில் விருத்தம், வேல் விருத்தம் போன்று சேவல் விருத்தமும் அடிதோறும் 12 சீர்களைக் கொண்டதாக உள்ளது. இந்நூலில் காப்புப் பாடலுடன் சேர்த்து 12 பாடல்கள் உள்ளன. நாத தத்துவமாகிய சேவலைப் பாட வந்த அருணகிரிநாதர், நாத வடிவமாகிய அம்பிகையை முதலில் நினைவு கூர்கின்றார். அம்பிகையின் மலர் நிறைந்த கூந்தலில் வண்டுகள் இசைப் பாடல்கள் பாடி ரீங்காரம் இடுகின்றன. இவை எல்லாம் நாதமயம். முருகப்பிரானது கொடியாக விளங்கும் சேவல், நாத தத்துவமாகும். பிரணவ மந்திரத்தை ஒலி வடிவில் உணர்த்துவதாகும். ஆன்மாக்களை, ஆணவ இருளினின்றும் கூவித் துயில் எழுப்புவதாகும் என்பதை,

கொந்தார் குழல்வரி வண்டோ லிடுமயில்
கொண்டேழ் இசைமருளக்
குதலை மொழிந்தருள் கவுரி சுந்தரி

(பா. 1)

என்று பாடுகின்றார் அருணகிரிநாதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப் பெருமானுடைய சேவலைப் பாடுவதற்குக் கய முகனைக் கொன்றவரும், பாரதத்தைத் தனது ஒற்றைக் கொம்பால் எழுதியவரும், இராவணன் பெற்ற சிவலிங்கத்தைக் கோகர்ணத்தில் நிலமிசை வைத்தவருமான விநாயக மூர்த்தியைக் காப்புச் செய்யுளில், போற்றித் துணை செய்ய வேண்டுகிறார். முருகனுடைய கொடியாகிய சேவல், அடியார்களின் இடர் களையக் கூடியது; பரகதியைக் காட்டக் கூடியது; இருவினை ஒப்பு வரக் கருணை புரியக் கூடியது; பூதப்பிசாசுகளை அடித்து விலக்கி, உதவி புரியக் கூடியது; சகல பேய்களையும் வெருட்டி ஓட்டும் பேராற்றல் பெற்றது; எமன் அணுகும் போது வேலும் மயிலும் முருகனும் வர, கூவி அருள் புரியக் கூடியது. வேட்டுவர்கள் இடும் பலிக்களத்தில் இலை தழைகளைக் கொத்தி, கூத்தாடிக் கொக்கரிக்கக் கூடியது. இந்திரனுக்கு அரசளித்துத் தேவர் சிறை மீட்டு ஆர்ப்பரித்துக் கூவக் கூடியது. மயிலுக்கு நட்பு பூண்டு பேய்களையும் அசுரர்களையும் கொத்தித் துண்டாக்கும் ஆற்ற லுடையது. கடல் வற்றவும் சேடன் முடி நடுங்கவும், மலைகள் அசையவும், அண்டங்கள் துண்டமாகவும் சேவல் தன் சிறகுகளைக் கொட்டி ஆடக் கூடியது. தேவர்கள் மகிழவும், அறம் தழைக்கவும் சேவல் தம் குரல் காட்டுகின்றது என்று போற்றிப் பாடியுள்ளார்.

சரவணச் சிறுவன்

சிவபெருமானுடைய நெற்றிக்கண் மூலமாகத் தோன்றிய தீப்பொறிகளானது சரவணப் பொய்கையில் ஓர் ஒப்பற்ற தாமரை மலர் மீது ஆறு முகங்களும் 12 தோள்களும் உடையதாய் ஞான சூரியனான முருகப்பெருமான், (சரவணன்) ஒரு குழந்தையாகத் தோற்றமளித்தான் என்பதனைக் கந்த புராணம் விரிவாகக் கூறுகிறது.

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொ ணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடு நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளி னானே"

\- கந்தபுராணம்

அதே போன்று அருணகிரிநாதர் முருகனைச் 'சரவணச் சிறுவன்' என்று குறிப்பிடுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகப் பெருமான் மேருமலையில் பாரதம் எழுதியது, இராவணன் எடுத்து வந்து சிவலிங்கத்தைப் பூமியில் வைத்த விநாயகரது செயலும் (காப்புச் செய்யுள்) பிரம்மன் தலையில் பிரணவப் பொருள் அறியாது மயங்கியதால் குட்டிச் சிறையில் அடைத்தமையும் (பா. 1) சமணர்கள் அஞ்சுமாறு ஞானசம்பந்தர் செய்த செயலும், பாண்டியனுக்கு வெப்புக் காய்ச்சலை ஏற்படுத்தியமையும், முதலான புராணச் செய்திகள் குறிக்கப் படுகின்றன. பேய் பிசாசுகள், பல தீவினைகளைச் செய்யும் என்பதை, ''மிண்டுகள் செய்யும் ஏவற் பிசாசுகள்'' (பா. 2) என்னும் தொடரால் குறிக்கின்றார். முருகனே சம்பந்தராகத் தோற்றம் பெற்றார் என்பதை,

'சிரபுரத் தவதரித்த அமுதத்தினமணிச்
சிவிகை பெற்று இனிய தமிழைச்
சிவன் நயப்புற விரித்துரை செய்ய விற்பனன்'

(பா. 3)

என்னும் தொடரால் குறிக்கின்றார். வேடர்களின் செயல்களை

''அச்சப்படக் குரல்முழக்கிப் பகட்டியலறிக்
கொட்ட மிட்டமரிடும் அற்பக்குற

(பா. 4)

என்னும் தொடரில் குறிப்பிடுகின்றார்.

புகழ் செட்டி

அடியார்களின் வினைகளை வாங்கிக் கொண்டு ஞானத்தை வழங்கும் வியாபாரம் செய்வதனால் முருகனை ''புகழ் செட்டி'' (பா. 4) என்னும் தொடரில் குறிப்பிடுகின்றார்.

நவகோளன்

முருகனே ஐம்பூத வடிவினன், சூரியன் முதலிய 9 கோள்களின் வாழ்நாள்களும் அனைத்தும் அவனே; சேனாதிபதி முருகனே என்பதை

வானீரம் அவனியழல் காலாய் நவக்கிரகம்
வாழ்நாள் அனைத்தும் அவனாம்
சேனா பதித் தலைவன்.

(பா. 5)

என்னும் தொடரால் குறிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரவணபவா - சேவல்

தீராத பிணிகளையும் தீர்க்க வல்லவன் முருகப்பிரான். அவனது சேவல் 'சரவணபவ' என்னும் ஆறெழுத்து மந்திரத்தை ஓதி, பேய்களின் கழுத்தைப் பிடித்து, கொத்தி, விரட்டிச் சென்று வெல்லுமாம்.

பேறான 'சரவண பவா' என்னும் மந்திரம்
பேசியுச் சாடனத்தால்

(பா. 7)

குமரகுருபரனுடைய சேவல், பெருமைவாய்ந்த பைரவர் செல்லும் வழியில் அவருக்கு முன்னும் பின்னும் ஓடி, வெய்யக் கண்களுடன் குறும்புகளைச் செய்யும். மேலும் தனித்த பேய் களையும், கழுகுகளையும், கொலைகளுக்கும், சாவுகளுக்கும், காரணமாய் நிற்கும் கொள்ளிவாய் வெம் பேய்களைத் துரத்தி ஓட்டி அவைகளின் புறக் கழுத்தினைப் பிடித்துக் கொத்தியும், நகத்தின் நுனியால் அழுந்திடப் பிய்த்தும் மகிழ்ந்து குதித்தாடும் என்று பாடுகின்றார் அருனகிரிநாதர்.

வீறான காரிகதி முன்னோடி பின்னோடி
வெங்கட் குறும்புகள் தரும்
விடுபேய்க ளேகழுவன் கொலைசாவு கொள்ளிவாய்
வெம்பேய் களைத்துரத்திப்..........
பிடர்பிடித் துக்கொத்தி லுகநுதியி னானலறப்
பிய்ச்சுக் களித்தாடுமாம்.

(பா. 7)

அறுபடை வீடுகளின் சிறப்பை ஒன்பதாம் பாடலின் பிற்பகுதியில் குறிப்பிடுகின்றார்.

குருமா மணித்திறள் கொழிக்கும் புனற்கடக்
குன்றுதோ றாடல்பழனம்
குலவுபழ முதிர்சோலை ஆவினன் குடிபரங்
குன்றிடம் திருவேரகம்
திரையாழி முத்தைத் தரங்கக்கை சிந்தித்
தெளித்திடுஞ் செந்தினகர்வாழ்
திடமுடைய அடியர்தொழு பழையவன் குலவுற்ற
சேவல் திருத்துவசமே.

என்று சேவலுடன் மயில் நடமிடுவதைப் போலவே ஓசை நயத்துடனே கூறியிருப்பது வியக்கத் தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இலங்கையில் யாழ்ப்பாணத்திற் கருகில் காரைத்தீவு என்னும் ஓர் நகரம் உண்டு. அங்கே அரக்கர்குல இனத்தவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் மார்பைச் சேவல் பிளந்தது என்பதை,

காரையாழிந் நகரர் மாரை பிளந்துசிற
கைக்கொட்டி நின்றாடுமாம்

- (பா. 10)

என்று புதிய செய்தியாக அருணகிரிநாதர் தெரிவிக்கின்றார். அருணகிரிநாதரின் உள்ளக் கோயிலில் என்றும் நீங்காதிருப்பவர் முருகப்பெருமான் என்பதை

"எனதிதய நிலையோன்"

என்னும் தொடரால் குறிப்பிடுகின்றார்.

சேவலின் கூவலால் பிரம்மாதி தேவர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். மலைகளும், 7 கடல்களும் அச்சேவலின் குரல் கேட்டு அசைகின்றன. 14 உலகங்களும் அச்சேவலின் குரலால் மேம்பாடு கொள்கின்றன. அசுரர்கள் மாள்கின்றார்கள். தானம், தவம் பற்றிக் கூறும் அறநூல்கள் செழிக்கின்றன. பேய்கள் அஞ்சுகின்றன என்று சேவலின் குரல் தரும் பயனை விரிவாகக் கடைசிப் பாடலில் தெரிவிக்கின்றார்.

பூவிலயன் வாசவன் முராரிமுநி வேராமரர்
பூசனை செய்வோர்மகிழவே
பூதரமும் எழுகடலும் ஆடஅமு தூறஅநு
போகபதி னாலுலகமும்
தாவுபுகழ் மீறிட நிசாசரர்கள் மாளவரு
தானதவ நூல்தழையவே
தாள்வலிய தானபல பேய்கள் அஞ்சச்சிறகு
கொட்டிக் குரற்பயிலுமாம்
காவுகனி வாழைபுளி மாவொடுயர் தாழைகமு
காடவிகள் பரவு நடனக்
காரணமெய்ஞ் ஞானபரி சீரணவ ராசனக்
கனகமயில் வாகனனடற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவகன் இராசத இலக்கண உமைக்கொரு
  சிகாமணி சரோருகமுகச்
சீதள குமாரகிரு பாகர மனோகரன்
  சேவல் திருத்துவசமே.

(பா. 11)

தனிவேலின் பெருமையையும், மயிலின் மேன்மையை யும், சேவலின் ஆற்றலையும் எடுத்துணர்த்தி, இவைகளை வணங்கினாலேயே முருகனருள் கிட்டும் என்று உலகோர்க்கு நம்பிக்கை ஊட்டியவர், அருணகிரிநாதர் ஒருவரே என்றால் மிகையாகாது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.சந்த இசை

''சந்தப்பாவல பெருமான்'' என்று சிறப்பிக்கப் பெறும் அருணகிரிநாதரின் திருப்புகழ் என்றும் தன்னுடைய செல்வாக்கினைத் தமிழிசை உலகில் ஏற்படுத்தியுள்ளது. பண்ணிசை பொருந்திய தேவாரப் பாடல்களுக்கு அடுத்த நிலையில், திருப்புகழ் ஓர் இசை வடிவமாக எழுந்துள்ளது. தொல்காப்பியம் காட்டும் வண்ணம் முதலாகச் சந்தஇசைமேம்பாடு பெற்றுள்ளது. திருப்புகழ்ப்பாடல்களில் இசைமரபு பாதுகாக்கப் படவேண்டும் என்று காஞ்சிபுரம் நயினாப் பிள்ளை, சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை மற்றும் பலர் போற்றிக் கூறியுள்ளனர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ்ப் பாடல்கள் சந்தப்பாடல் வரிசையில் முன்னணியில் நிற்பவை. தென்னிந்திய இசையின் தனித் தன்மை வெளிப்பாடு உடையவை.

தும்பியின் ஓசையிலிருந்து குழலும், வண்டினங்கள் ஓசையிலிருந்து யாழும், குயிலோசையிலிருந்து பாடலும் அருவியின் ஓசையிலிருந்து முழவும் ஆகத்தமிழிசை வளர்ச்சி கொண்டது எனலாம்.

சங்க காலத்தில், பரிபாடல், இசையமைப்புடன் கூடிய நூலாகும். பெண்பாற் புலவரான காரைக்காலம்மையார் (5ஆம் நூற்றாண்டு) வழங்கிய திருவாலங்காடு மூத்த திருப்பதிகங்கள் இசை உலகில் முக்கியத்துவம் பெறுபவையாகும். பதிக மரபிற்குப் புத்துயிர் ஊட்டிய அம்மையார் நட்ட பாடை, இந்தளம் ஆகிய இரு பண்களில் பாடியுள்ளார். பின்னர் வந்த தேவார மூவரும் பதிக மரபில் பாடல்கள் பாடித் தமிழிசையை வளர்த்தெடுத்தனர். அதேபோல் ஆழ்வார்களில் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களும் இறைவனைப் போற்றிப்பாடி இசைத்தமிழை வளர்த்துள்ளனர். சோழர் காலத்தில் கோயில்களில் பதிகங்கள் பாடிட நிவந்தங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளிக்கப்பட்டன என்ற செய்தியைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. எனவே, தொன்று தொட்டு வந்த தமிழிசை காலந்தோறும் வளர்ச்சிபெற்று வந்துள்ளதை உணர முடிகிறது. இவ்வித இசைப் பின்னணியில் 15ஆம் நூற்றாண்டில் அருணகிரி நாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் சந்தப்பாடல்களாக, தொல்காப்பிய வண்ணங்களின் அடிப்படையிலமைந்த பாடல்களாக எழுந்தன எனலாம்.

சந்தங்கள்

நூலிற்கு அழகு இவை இவை என்ற பத்துள் ஓசையுடைமை ஒன்றாகும். அதனைப் பற்றிக் கூறுவது சந்தம். 'பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை' என்றார் திருநாவுக்கரசர். (திருவேகம்பம் பா. 8) பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத் தமிழிவையும் என்றார் திருஞானசம்பந்தர். (திருவீழிமிழலை பா. 4) ஓசை ஒலியெலாம் நீயே ஆனாய் (திருவையாறு – பா. 1) என்று நாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் போற்றுகின்றார்.

சந்தம் என்பது ஓசைகளை அளக்கின்ற இலக்கணக் கருவி; ஒலிப்பண்புகளை வரையறுத்துக் காட்டுவது; எழுத்தினுடைய வன்மை மென்மைகளை நெறிப்படுத்துவது; ஓசைகளைக் கூறுபடுத்தி இயல் துறையிலும், இசைத் துறையிலும், நாடகத் துறையிலும் உயிர்நிலையாக நின்று உணர்ச்சிகளைப் பெருக்கிக் காட்டுவது; மொழியினுடைய வளத்தையும் புலவனுடைய ஆற்றலையும் ஒரே நேரத்தில் எடுத்துக்காட்டி நிற்பது; ஓசை நயம் வழங்கும் சந்தம் ஓசைகளின் சந்திப்பு ஒலிகள் ஆடுகின்ற அரங்கம் என்று டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் சந்தம் என்பதற்கு விளக்கம் தருகிறார்.

சந்தம், பாட்டிற்குத் தனி அழகு தருவதால் சந்தம் என்ற சொல்லிற்கே அழகு என்று பொருள் கொள்ளலாம்.

''சந்தம்'' என்ற தமிழ்ச்சொல், சொல்லகராதியில் ''அழகு'' ''கவியின் வண்ணம்'' என்னும் பொருள்களில் குறிக்கப் பெற்றுள்ளது. வண்ணம் என்ற சொல் இதற்கு ஒரு சிறப்புப் பெயராகும்.

சந்தத்தின் தோற்றம்

உள்ளத்தில் பொருள் வைத்துப் பாடும் புலவன் புறத்தே அப்பொருளுக்கு வடிவம் கொடுக்கின்றான். அந்த வடிவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓசை அடைந்த சொற்களால் ஆக்கப்படுகின்றது. ஒழுங்கான, வரையறை செய்யப்பெற்ற செம்மையும், சீர்மையும் நிரம்பப் பெற்ற ஓசை, பாட்டிற்கு வடிவம் தருகிறது. ஆகவேதான் தொல்காப்பியச் செய்யுளியலில் முதல் நூற்பாவிற்கு உரை கூறி பேராசிரியர்,

'பா என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்வதற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' என்கிறார்.

சந்தத்திற்கு அடிப்படையாக அமைவன அசைகளாகும். மென்மையுள்ள அசையும் ஒரே அளவாக திரும்பத் திரும்ப வரும்போதும் ஒரே அளவின கால இடைவெளி விட்டு வரும்போதும் ஒரே தன்மையில் வரும்போதும் சந்தம் பிறக்கிறது. இந்த அளவு முறைகள் மாறி வருமானால் ஓசை யிலே முரண்பாடு தோன்றும்.

சந்தம் என்பது ''சந்தஸ்'' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாகவும் கருதப்படும்.

'சந்தம் வண்ணம் ஆமே' – என்பது ஆசிரிய நிகண்டு.

'வண்ணமே சந்தம்' – என்பது சூடாமணி நிகண்டு.

சந்து + அம் என்று பிரித்து சந்து என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்த தமிழ்ச்சொல் என்கிறார் வீ. பா. க. சுந்தரனார் சந்தி, சந்திப்பு, சந்தித்தல் என்பன சந்து என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்து, சேர்தல் என்ற பொருண்மை பெறும். சந்தம் என்பது ஓசைகளின் சந்திப்பதாகவும் ஓசை ஓர் ஒழுங்கான ஒலி எழுத்துகளின் ஒட்டுதல்களாகவும் இருப்பதால் இது தமிழ்ச் சொல்லாகும் என்கிறார் வீ.பா.க. சுந்தரனார்.

சந்தக் குழிப்புகள்

இசைத் தமிழில் ஆளத்தி செய்யுமிடத்து ''தென்னா வென்றும்'' தெனாஎன்றும் அல்லது தென்னாதெனா என்று கட்டியும் செய்யப்படும் இவ்வகைச் சொற்களின் திரிபுகளாகத் தன, தானா என்ற சொற்கள் தற்போது வழக்கில் வந்துள்ளன. இச்சொற்கள் இசைப்பாக்களின் சந்த அமைப்பினை அறிதற்கு உரிய கருவியாக, இசைத்தமிழ்ப் பாடல்களுக்குரிய சந்தக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழிப்புச் சொற்களாக இசையாசிரியர்களால் எடுத்தாளப் பெற்றுள்ளன.

சந்தமும் - வண்ணமும் வேறுபாடு

திருப்புகழ் முதலான இசைப்பாக்கள் சந்தக்குழிப்புகளால் அமைவன. எனவே, வண்ணச் சந்தக்குழிப்புகள் என்று கூறி, அவற்றை வண்ணப் பாடல்கள் வகையில் சேர்த்தனர் சான்றோர். ''பிற்கால இசைப்பாக்களில் வண்ணச் சந்தக் குழிப்புகள் பல உண்டு என்று கூறி'' அவை புதிய வளர்ச்சிக்கு வித்திட்டதைக் கூறுகின்றார் தமிழண்ணல்.

சந்தங்களையும் வண்ணங்களையும் தனித்தனியே எண்ணிப் பார்ப்போரும் உள்ளனர். சந்தப்பாடல்கள் பிற்காலத்தில் ஐந்து வகையாக வளர்ந்தன. அவற்றுள் ஒன்று வண்ணப் பாடல் வண்ண விருத்தங்கள் என்றும், திருப்புகழ்ப் பாடல்கள் என்றும் பெயர் பெற்று அவை சந்தக்குழிப்புகளால் அமைந்து தொங்கல், தாழிசை சேர்ந்து சந்த இலக்கணத்தின்படி அமைவன ஆகும். இதில் சந்தக் குழிப்பு இல்லை என்றால், வண்ணப் பாடலே இல்லை. சந்தமே அடிப்படையாக நின்று வகைகளை வளர்த்தலை வண்ணவிருத்தத்தில் தொங்கல் உண்டு; சந்தவிருத்தத்தில் தொங்கல் இல்லை.

ஒவ்வொரு பாடலிலும் அதனதன் சந்தக்குழிப்பின் முற்பகுதி அமைப்பிலிருந்து மாறுபட்டு அடிகளில் ஈற்றில் 'தன தான' என்றோ 'தந்ததான' என்பது போன்றோ ஓர் அழகிய தனியான சீர் அமையப் பெற்றுள்ளது. இது தங்கப் பதக்கத்திற்கு ஒரு மதாணியைப் போல விளங்குகிறது. இசைமரபில் இது 'தொங்கல்' என வழங்கப்படுகிறது. திருப்புகழ் பாடல்களின் தனிப்பட்ட சிறப்பிற்குத் 'தொங்கல்' என்னும் இவ்வமைப்பே காரணமாகும்.

சந்தங்களின் தொன்மை

சந்த இலக்கணத்திற்கு ஆதாரமாக இருக்கும் தத்த, தாத்த, தந்த, தாந்த, த்ன, தான, தன்ன, தய்ய ஆகிய சந்த மூலச் சொற்கள் தேவாரத்தில் நமக்குத் தெரிகின்றன.

''தென்னாத் தெனாத் தெத்தெனா வென்று பாடி''

''தெத்தென இசைமுரல் சரிதையர்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தென்தென்ன இசைமுரல் சரிதைன்யர்"
"தந்த திந்தத் தட மென்டிருவித்திரன்"

என்பன சான்றுகள்.

நம்மாழ்வாரும் "தென்னா வெண்ணுமென் னம்மான் திருமாலிருஞ் சோலையானே" "தென்னாவென்று வண்டின் னிசை முரல்தரு" என்று பாடியுள்ளார்.

"தேவாரத்திற்கும் திருப்புகழுக்கும் சிலப்பதிகாரம் மூலம். அந்தச் சிலப்பதிகாரத்தின் வழியாகப் பாடல்கள் அமைகின்றன. பண்கள் அமைகின்றன. இசைவடிவங்கள் அமைகின்றன. என்று இசைப் பேரறிஞர் எண்ணுகின்றனர்" என்கிறார் ஆலந்தூர் மோகனரங்கன்.

சிலப்பதிகாரப் பாடல் ஓசை திருமழிசை ஆழ்வாரை ஈர்த்திக்கிறது. "திருச்சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீரத் திருச்சந்த விருத்தம்" என்று திருக்கச்சி நம்பிகள் போற்றுகின்ற வகையில் திருமழிசை ஆழ்வார் திருச்சந்த விருத்தம் பாடினார். இந்நூலில் நூற்றிருபது எழுசீர் விருத்தங்கள் அமைந்துள்ளன. பிற்காலச் சந்தவிருத்தங்களுக்கு எல்லாம் இளங்கோவடிகள் தலைமை ஏற்கிறார் என்பதற்குத் திருமழிசை ஆழ்வார் சான்று. எனவே, சந்தப் பாடல்களுக்கு மூலம் இளங்கோவடிகளே ஆவர்.

அந்தாதி யாப்பு முறையைப் பின்பற்றி அற்புதத் திருவந்தாதியைப் படைத்தளித்தவர் காரைக்கால் அம்மையார். பத்துப் பாடல்கள் தோறும் ஒருசந்தம் அமைத்து நூறு பாடல்களில் பலசந்தங் கண்டொலிக்கச் செய்து பாடுமுறை தோன்றலாயிற்று. இதனைப் பல் சந்தமாலை என்று குறிப்பிடுகின்றனர்.

அருணகிரியார் சந்தம்

'வாக்கிற் கருணகிரி' என்று புகழ்பெற்றவர் அருணகிரிநாதர். அவர் சந்தங்களை வியக்கத் தக்க அளவில் 'வகுப்புகள்' என்னும் பகுதியில் கையாண்டுள்ளார். பல வகுப்புகள் அவரால் பாடப் பெற்றுள்ளன. 1000க்கு மேற்பட்ட சந்தங்களைப் பாடிய அருணகிரிக்குச் சந்தம் ஒரு விந்தையாக இருந்துள்ளது. இதனைச்,

"சந்தபந்த முந்து விந்தை நெஞ் சொலின்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகவேள் பன்னிருதிருமுறை தொகுதி 6 வ.சு. செங்கல்வ ராயப் பிள்ளை உரை. 1952, ப.588) என்று அருணகிரிநாதர் பாடினார். சந்தம் நிறைந்த இவருடைய திருப்புகழ்ப் பாடல்கள் பிற்காலத் திருப்புகழ்ப் பாக்களுக்கு வழிகாட்டியுள்ளன.

''கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுக்குப்பின் எழுந்த திருப் புகழ்ப் பாடல்கள் யாவற்றுக்கும் அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களே வழிகாட்டி'' என்பார். எஸ். சௌந்திரபாண்டியன்.

அருணகிரிநாதர் திருப்பரங்குன்றத்திற்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள முருகனைப் பாடும்போது,

''சந்ததந்தொணி கண்டும் புய லங்கன்சிவ னம்பன்தி
சம்புந்தொழ நின்றுந் தினம் விளையாடும்
கந்தன்குன னென் றன்குரு வென்றுந்தொழும் அன்பன்கவி
கண்டுய்ந்திட அன்றன்பொடு வருவோனே''

என்றுபாடி மெல்லினங்களும் வல்லினங்களும் கலந்த ஒரு கலப்புச் சந்தத்தின் இனிமையை எடுத்துக் காட்டுகின்றார். இப்பாடல்,

தந்தந்தன தந்தந்தன தந்தந்தன தந்தந்தன
தந்தந்ததன தந்தந்தன தனதான....

என்னும் சந்தக் குழிப்பு அமைந்து விளக்குகிறது. இதே வல்லின மெல்லினங்களைத் தலைகீழ் ஆக்கி வேறுவகையாக அமைத்துக் காட்டும் புதுமையை அருணகிரிநாதர் திருச்செந்தூர் பாடலில் மெய்ப்பிக்கின்றார்

''கரிக்கொம்பந் தனித்தங்கங்
குடத்தின்பந் தனத்தின்கண்
கருப்புந்தன் சிவப்புஞ்செம் பொறிதோள்சேர்
கணைக்கும்பண் டுழைக்கும்பங்
களிக்கும்பண் பொழிக்குங் கண்
கழுத்துஞ்சங் கொளிக்கும் பொன் – குழையாட

இந்தப் பாட்டில்,

தனத்தந்தந் தனத்தந்தந் தனத்தந்தந் தனத்தந்தந்
தனத்தந்தந் தனத்தந்தந் தனதான.

என்னும் சந்தக் குழிப்பு அமைந்துள்ளது. நுட்பமான ஒலிகளை எழுப்புகின்ற வகையில் சந்தங்களை மாற்றி மாற்றி அமைக்கின்ற பெருந்திறம் அருணகிரிநாதர் பாடல் முழுவதும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காணலாம். குறிலும் நெடிலும் கலந்த ஒருசித்திர வண்ணத்தைப் படைத்துக் காட்டும் அழகினை,

'தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல் மானார்
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ்சொற் றடிநாயேன்.'

என்னும் பாடலில் காட்டுகின்றார். திருச் செந்தூரில் பாடிய இப்பாட்டில்,

தந்தா னந்தா தந்தா னந்தா
தந்தா னந்தந் தனதான.

என்னும் சந்தக்குழிப்பு அமைந்து ஒலியின்பம் ஊட்டுகிறது. மூவகைச் சீரும் ஈரசைச்சீரும் கலந்தன போன்றவொரு அமைப்பில் சந்தக்குழிப்புப் பொருந்திவரப் பாடிய திறத்தையும் அருணகிரியின் பாடலில் காணமுடிகிறது.

"விதிபோலு முந்த விழியாலு மிந்து
நுதலாலு மொன்றி இளையோர்தம்
விரிவான சிந்தை உருவாகி நொந்து
விறல்வேறு சிந்தை வினையாலே."

என்னும் திருச்செந்தூர் பற்றிய பாடல்

"தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த தனதான."

என்னும் சந்தக் குழிப்பில் நின்று ஒலிக்கிறது.

திருப்புகழில் ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் பாடலின் சந்தக் குழிப்பு காணப்படுகின்றது. இந்தச் சந்தங்களையும், சந்தக் குழிப்புகளையும் அருணகிரிநாதரே தம் பாடல்கள் சிலவற்றில் இயைத்தும் பாடியுள்ளார். எ.டு. 'பனியின் விந்துளி போலவே கருவினுறு' என்ற பாடலின் 5 ஆவது அடியின் முதல் வரி,

"தனன தந்தன தானனா தனதனன"

பனகப் படமிசைந்த என்றபாடலின் 3ஆவது அடி

தனனத் தனனதந்த தனனத் தனன தந்த
தனனத் தனன தந்த – தனதானா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனை அடிப்படையாகக் கொண்டு திருப்புகழ் பதிப்பாசிரியர்கள் ஒவ்வொரு பாடலுக்கும் சந்தக் குழிப்பு அமைத் திருக்கலாம்.

வ.சு. செங்கல்வராயப் பிள்ளையின் ஆய்வின்படி கிடைத்திருக்கின்ற 1307 திருப்புகழ்ப் பாடல்களில் 1008 சந்தங்கள் உள்ளன. இதற்கு 24 சந்தங்கள் அடிப்படையாக உள்ளன. அருணகிரிநாதர் தாம்பாடிய பூதவேதாள வகுப்பில் பல வகையான இராகங்களையும், பண்களையும் குறிப்பிட்டுள்ளார்.

'கொந்து வார் குழல்' என்னும் திருப்புகழில்,

"மதுரித இந்தளாம்ருத வசனமும்"

என்ற வரியில் இந்தளம் என்ற பண்ணையும், 'பாதாளமாதி' என்ற பாடலில் 'சாதாரி தேசி நாமக்ரியை' முதல் என்ற வரியில் பண்சாதாரியையும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே தேவாரப் பாடல்களின் பண் முறையை நன்குணர்ந்தவர் அருணகிரிநாதர் என்றும் கூறலாம்.

சில திருப்புகழ்ப் பாடல்கள் நாட்டியத்திலும் இடம் பெறுகின்றன. அருணகிரிநாதர் முருகப் பெருமானை நடனமாடும் தெய்வமாகவே வருணித்துள்ளார். 'அகரமுமாகி' என்ற திருப்புகழில் "செககண சேகு" 'தகுதிமி தோதி திமியென ஆடு - மயிலோனே ' என்னுமிடத்தில் இதனை உணரலாம். முந்து தமிழ்மாலை என்னும் பாடலில் முருகன் எழுந்தருளியிருக்கும் மயில் வரும் அழகை தாளத்தின் அழகிய கதிக்கேற்ப நடனமாடி வருவதுபோல் பாடியுள்ளார். வில்லிப்புத்தூராருடன் வாதாடி வென்ற பாடல் என்னும் 54ஆம் பாடல் (கந்தரந்தாதி) அருமையான லய சம்பந்தமான சொற்கட்டுக்களாக அமைந்த பாடலாகும்.

பொதுவாகத் திருப்புகழைக் காணும்போது, பெரும்பாலான திருப்புகழ்ப் பாடல்களில் ஒருகுறிப்பிட்ட சந்தம் மூன்றுமுறை ஒரே சீராக மடங்கி வரும் அமைப்பும், தொங்கல் என்னும் தனிச்சீர் கொண்ட அமைப்பும் பெற்று அமைந்துள்ளன எனலாம். வடமொழிக் கலப்பு மிகுதியாக உள்ளது. திருப்புகழுக்கு இதுவே சான்றாக உள்ளது; தமிழில் யாப்பு முறையில் இலக்கண வரையறை செய்யப் பட வில்லை எனலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. முருக பக்தியும் தமிழும்

அருணகிரிநாதரின் பக்தி இலக்கியப் படைப்புகளாகத் திகழ்வன திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு ஆகிய நூல்களாம். அருணகிரிநாதரின் முருகபக்தி, மிகவும் உறுதியானது ஆகும். பல்வேறு தலங்களில் கோயில் கொண்டு அருளும் முருகப்பெருமான் மீது பாடிய துதிப்பாடல்களின் தொகுப்பே "திருப்புகழ்" ஆகும்.

தமிழ்க்கடவுள் என்று போற்றப்படும் முருகப் பெருமானைப் பற்றி அவர் பாடிய பாடல்களில் பக்திச்சுவை நனிததும்ப இருப்பதோடு மட்டுமின்றித் தமிழ் மணமும் சிறக்கக் காணலாம்.

தமிழகத்தில் முருக வழிபாடு

பண்டைத் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. 'அவற்றில் குறிஞ்சி என்பது மலையும், மலை சார்ந்த இடங் களும் என்பர். குறிஞ்சி நிலத்துத் தெய்வம் முருகன். (செவ்வேள் பரமன்). மலைவாழ் மக்கள் மட்டுமின்றித் தமிழகத்தின் பல்வேறு நிலத்து மக்களும் முருகப் பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். "முருகு" என்பதற்கு "அழகு" என்பது பொருள். மணம், இளமை, தெய்வத்தன்மை என்னும் பொருள்களும் உண்டு. எங்கெல்லாம் அழகிருக்கிறதோ இளமை மணங்கமழ்கின்றதோ, அங்கெல்லாம் முருகன் இருப்பதாகக் கருதினர் தமிழ் மக்கள்.

பண்டைத் தமிழ் மக்கள் என்றும் மாறாத இளமை அழகுடையவன் முருகப்பெருமான் என்று கருதினர். சங்க காலத்து நூல்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படை நக்கீரர் பாடியது ஆகும். அந்நூல் சைவத் திருமுறைகளில் ஒன்றாகப் போற்றப்படுவதோடன்றி, சங்கத் தமிழ்நூல்களுள் ஒன்றான பத்துப்பாட்டில் முதலிடம் பெற்றுள்ளது. இதில் முருகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமானின் பெருமையும் அறுபடை வீடுகள்பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் திருமாலையும், செவ்வேளையும் பற்றிய பாடல்கள் உள்ளன.

அருணகிரிநாதரின் முருகபத்தி

இறைவனிடத்தும், பெரியவர்களிடத்தும், அடியார் களிடத்தும் கொள்ளும் அன்பே ''பத்தி'' என்னும் பொருள் படுகின்றது. பண்டை நாளில் அரசபத்தி, குருபத்தி, பதிபத்தி என்பவை பெரியவர்களிடத்து கொண்ட அன்பைப் புலப் படுத்தி நின்றன. அன்பின் முதிர்ச்சியாகிய ஆர்வம், ''பத்தி'' என்னும் பொருளில் அமைகின்றது எனலாம்.

அருணகிரிநாதர் முருகப்பெருமான் அருள் கிடைக்கப் பெற்றவர். அவர் பாடிய பாடல்களின் தொகுப்பாகிய திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், மயில் விருத்தம் முதலிய நூல்கள் முருகனின் புகழ் பாடுபவை யாகவே உள்ளன.

திருப்புகழ் பாடுவோர், திருப்புகழ் படிப்போர், முருக பக்தர்களாகி விடுகின்றனர்: இத்தகைய சக்தி திருப்புகழ் பாடல்களுக்கு இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

முருகனே முதல் தெய்வம் என்பதை அருணகிரிநாதர் தம் நூலில் விளக்குவதிலிருந்து அவருடைய முருகபக்தியை நாம் உணரலாம். முருகனைப் பலவிடங்களில் திருமாலின் மருகன் என்று வைத்துப் பாடி சைவ, வைணவ சமய ஒற்றுமையைச் சமுதாயத்தில் உருவாக்கியவர். வடசொற்கள் மிகுதியாகக் கலந்துள்ள போதிலும், தமிழின் இனிமையோ, பாட்டின் சுவையோ குறைந்து போய்விடவில்லை. முருகபத்தியும் மேம்பட்டுத்தான் காணப்படுகின்றது.

குறிஞ்சிக் கிழவன்

முருகன், தமிழ்நாட்டின் பழம்பெரும் தெய்வம். குறிஞ்சி நில மக்கள் - மலைவாழ் மக்கள் - முருகனையே குல தெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர். எனவே குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வம் முருகன் என்பது தமிழர் கொள்கை. இதனால் முருகனுக்குக் ''குறிஞ்சிக் கிழவன்'' என்ற ஒரு பெயரும் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கந்தர் அலங்காரத்தில் ஒரு பாடல் உண்டு. அப்பாடல் முருகனுடைய பிள்ளைப் பருவத்தைக் குறிக்கும் பாடல். அதில் ''குறிஞ்சிக் கிழவன்'' என்ற தொடரையே அவர் கையாண்டுள்ளார்.

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில் லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே.

(கந். அலங். 5)

என்பது அப்பாடல்.

''இத்தகைய குறிஞ்சிக் கிழவன் மீது அன்பு வைத்தால், இவ்வுலகப் பாசம் - ஆசை - பற்று - விட்டுப் போகும் என்பதோடு மட்டுமல்லாமல் என்றும் அழியாத ஆனந்தத்தைப் பெறலாம். மேலும் உயர்ந்த ஆனந்த வாழ்விலே நிலைத்து வாழலாம்'' என்பதை அடுத்த பாடலிலே அவர் எடுத்தியம்பி யுள்ளார்.

''மெய்யன் பினாய்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மாநந்தந்.....''

(கந்.அலங்.6)

முருகு என்பது தமிழ்ச்சொல். 'முருகு' என்றால் 'அழகு' என்பது பொருள். அழகிய மணம் உண்டு என்றும் மாறாத இளமைத் தன்மையும் உண்டு; தெய்வத்தன்மையும் உண்டு. பண்டைத் தமிழர் இயற்கையழகையே முருகனாக வைத்து வணங்கி வழிபட்டனர் போலும்! அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் பலவும் முருகனையே பாடிப் போற்றுவதாக அமைந்துள்ளன. அவருடைய பாடல்கள் பலவும் புராணங்களில் முருகன் புரிந்த திருவிளையாடல்களையே பாராட்டிப் போற்றுகின்றன.

இயற்கையழகு - முருகன்

இயற்கையழகிலிருந்துதான் முருகன் பிறந்தான் என்ற உணர்வு அவர் பாடல்களில் காணக்கிடக்கின்றன. முருகனை அழகனே என்று பலவிடங்களில் அவர் அழைக்கின்றார்! பாடிப் பரவுகின்றார்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"முதுமலை அழகா! - குருநாதா!"
புதுமாமயில் மீது அணையவரும் - அழகோனே!
"அயிலும் மயிலும் அறமும் நிறமும்
அழகும், உடைய - பெருமானே"

என்பன போன்ற வரிகள் சான்றாகும்!

மலை இயற்கையிலேயே அழகு குடிகொண்டுள்ள இடம்! இத்தகைய அழகிய மலைகளை எல்லாம் அழகுத் தெய்வமாகிய முருகன் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ளான்.

"அழகு திருத்தணி மலையில் நடித்தருள் - பெருமானே!"
"அழகே செறி திருக்கழுகுன்றத்தினில் மேவிய பெருமானே"

என்றெல்லாம் அவர் போற்றியுள்ளார்.

தூய்மையான இடத்திலே அழகு குடிகொண்டிருக்கும். அழுக்கும் குப்பையும் நிறைந்த இடத்திலே அழகு ஏது? கள்ளங்கபடமற்ற அடியார்களின் தூய்மையான உள்ளம் அழகிய இடமாகும் அத்தகைய தூய உள்ளத்தவர் உள்ளத்து இருப்பான் முருகப் பெருமான் என்கிறார் அருணகிரிநாதர்.

"அறம் நின்ற மனத்தவரிடமும் மிகுதவம் உள்ளவரிடமும் நன்மைநிலை பெற்ற நன்னெஞ்சம் உடையவரிடமும் அவர்தம் நல்லுள்ளத்தில் தோன்றுகின்றவனே! செல்வம் நிறைந்த சிக்கல் நகரிலே வாழுகின்ற முருகனே!" - என்று முருகப்பெருமானை விளிக்கின்றார் அருணகிரிநாதர்!

"செம்மனத்தர் மிகுந்த மாதவர்
நன்மை பெற்ற உளத்திலே மலர்
செல்வ சிக்கல் நகர்க்குள் மேவிய பெருமானே!"

முருகன் - வீரன்

முருகனைப் பற்றிய வீரப்புகழையும் பிற சிறப்புகளையும் ஒவ்வொரு பாடலிலும் விவரிக்கிறார் அருணகிரிநாதர்!

"கொடிய சூரன் நடுங்கும்படி வெற்பை இடிக்கும் மயில்மீது ஏறி
நடத்தும் இராவுத்தன் - முருகன்"

என்கிறார்.

பாம்புகளோடு சண்டையிட்டு அடக்குவது என்று மயிலைச் சிறப்பிக்கிறார். கிரௌஞ்சமலை ஆறு துண்டுகளாக விழ வேலை விட்டவன் முருகன் என்று ஓரிடத்திலும், கொடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடிகளையுடைய மலையைக் கூறிட்ட வேலை உடையவன் என்று வேறோரிடத்திலும் பாடுகிறார். முருகன் செஞ்சேவற் கொடியுடையவன்; அரசன்; குமரன்; குகன்; அசுரர்களுக்குப் பகைஞன்; கலக்கமற்றவன்; தீரன்; குணங்களால் உயர்ந்தவன்; மயில்வாகனன் என்றெல்லாம் முருகனைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

தன்னை நொந்து கொள்ளல்

கந்தவேளைக் கண்ணாரக் கண்ட அருணகிரிநாதர் பெருவியப்புற்று, நுண்துளி அரும்பத் தழலது கண்ட மெழுகென உள்ளம் உருகி ஆடிப் பாடிப் பரவிநின்றார். பிறகு தன்னிலை உணர்ந்தார். உள்ளம் வருந்தித் தன்னை நொந்து கொண்டு பேசலானார். ''தார்வேணி எந்தை அருள்பாலா! சாலோகத் தொண்டர் சாமீபத் தொண்டர், சாரூபத் தொண்டர்க்கு அருளும் பெருமானே! உன் திருவடிகளின் ஒடுங்குவதற்கு நான்யார்? உன்னை வணங்குவதற்கு நான்யார்? மகிழ்வோடு உன்னை ஓதுவதற்கு நான்யார்? ''நீ இரங்குவதற்கு நான் யார்? நீ தஞ்சம் அளித்திட நான் யார்? என்றெல்லாம் பலவாறு முருகனின் கருணையை நினைந்து புலம்பி வருந்துகின்றார்.

தானே வளர்ந்து தானே யிருந்த
தார்வேணி யெந்தை யருள்பாலா
சாலோக தொண்டர் சாமீப தொண்டர்
சாரூப தொண்டர் பெருமாளே

(திருப் : 1123)

நான் எவ்வாறு பாடுவேன்? என் உடலில் திடமில்லையே எனக்கு நல்ல குணமில்லையே; நல்ல திறமையில்லையே; அற்புதமான செயலில்லையே; நல்லசெபம் இல்லையே; சொர்க்கத்தில் இடமில்லையே; கைக் கொடை இல்லையே; என் சொல்லுக்கு இயல்பில்லையே முருகா! நற்றமிழால் உன்னைப் பாடிட வேண்டுமானால் இருவினையற்று, இயல்கதியைப் பெற்றிருக்க வேண்டுமே'' என்று அழுது புலம்புகின்றார்.

திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் புதமான
செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க் கமுமீதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடமிலிகைக் கொடையிலிசொற் கியல்பிலிநற் றமிழ்பாட
இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப் பெறவேணும்
(திருப் : 172)

இவ்வாறு அருணகிரிநாதர் அற்புதமாகப் பாடியுள்ள திருப்புகழ் தமிழ் மணம் கமழ்வதாகவும் தமிழுக்கு அணிகலனாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க வொன்றாம்.

பிறதெய்வங்கள்

அருணகிரிநாதர் முருகப்பெருமானுடைய துதியாக அலங்காரத்தைச் செய்தாலும்,இராமனும், கண்ணனும், சிவபெருமானும், உமையும் இடையே வந்து சேருவார்கள். அவருடைய திருவாக்கில் பல தெய்வங்கள் பற்றிய தன்மை வந்து பெருமை கொள்கின்றன. இன்னும் சிவபெருமான், விநாயகர், சக்தி முதலிய பல தெய்வங்களின் பெருமை களையும் திருப்புகழ்ப் பாடல்களிலே காணலாம். திரி விக்கிரமாவதாரம் எடுத்த திருமாலைப் பற்றியும், கடல் அடைத்த இராமபிரான் பற்றிய செய்திகளைக் கூறிடும் அவர், கண்ணபிரானின் காளிங்க நர்த்தனத்தையும் குறிப்பிடுகின்றார். பல இடங்களில் ''மால் மருகன்'' என்று தெரிவிக்கின்றார்.

''...................................... மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே''
(கந். அலங் -15)

........''சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகரஞானா கரசுர பாஸ்கரனே''
(கந். அலங். 21)

''உமையாள் பயந்த இலஞ்சியம்''
(கந். அலங். 22)

''கவியாற் கடலடைத் தோன் மருகோனை''
(கந். அலங். 43)

இலங்காபுரிக்குப் போகைக்கு நீ வழிகாட்டென்று போய்க் கடல் தீக்கொணந்த, வாகைச் சிலைவளைத் தோன் மருகா மயில் வாகனனே!'' என்றெல்லாம் புகழ்ந்து பிறதெய்வங்களைப் பற்றியும் கூறியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியருக்குத் தமிழ் பகர்ந்தவன்!

சிவபெருமானுக்கு ஒப்பானவன் அகத்தியன்; அவன் பொதியமலை முனிவன். அவன் மனம் மகிழும்படி - இரண்டு காதுகளும் குளிரும்படி, இனிமையான தமிழை உபதேசித்தவன் முருகன் என்கிறார்.

"சிவனை நிகர் பொதியவரை
முனிவன் அகம் மகிழ இரு
செவிகுளிர இனிய தமிழ் - பகர்வோனே!"
"குடமுனிவன் கற்க அன்று
தமிழ் செவியில் பகர்ந்த
குமர! குறத்தி நம்பு - பெருமானே!"

முருகனே அகத்தியருக்குத் தமிழை அறிவித்தான் என்ற தமிழர் கொள்கையை அருணகிரிநாதர் அடியொற்றிப் பாடியுள்ளார்!

அகத்தியர்க்கு மட்டுமின்றிச் சிவபெருமானுக்கும் கூடத் தமிழின் உண்மையைப் போதித்தவன் முருகன் தான் என்று பாடுகின்றார்.

"கொன்றைச் சடையர்க்கு
ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் - பகர்வோனே!

என்றும்

"மழுக்கைக் கொண்ட
சங்கர்க்குச் சென்றுவண்
தமிழ்ச் சொல் சந்தம் ஒன்று - அருள்வோனே"

என்றும் குறிப்பிடுகின்றார்.

முருகனை 'ஒப்பற்ற தமிழ்ப்புலவன்' என்றும் "முத்தமிழில் பெரியோனே!" என்றும் "அலகில் தமிழால் உயர் சமர்த்தன்" என்றும் போற்றுகின்ற திறத்தால் அவருடைய முருகபத்தியும், தமிழ்ப் பற்றும் வெளிப்படுகின்றன.

அருணகிரிநாதரின் தமிழ்ப்பற்று

அருணகிரிநாதர் தமிழ்ப்பற்று அளவிட முடியாதது தமிழைத் தெய்வத் தன்மை நிறைந்ததாகவே நினைக்கின்றார். அவருடைய பாடல்களில் வடமொழிச் சொற்கள் ஏராளமாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலந்திருக்கின்றன. அவைகள் தமிழோடு கலந்து தமிழ்த் தன்மையையே பெற்றுவிட்டன எனலாம்.

அருணகிரிநாதர், தனக்குத் தமிழிலே பாடும்படி அருள் செய்தவன் முருகப் பெருமான் என்று கூறுகின்றார்.

"அரிய தமிழ்தான் அளித்த - மயில்வீரா!"

என்கிறார்!

"அடியேன், செந்தமிழ்மொழி நூல்களை நாள்தோறும் ஓதி, தீமையினின்றும் நீங்கி நல்வழியிலே செல்லும்படி அறிவுரைகள், கூறிவருகின்ற உனது சிவந்த கனிபோன்ற வாயினால் ஒரு சொல் அருள்வாயாக!" - என்று ஞானத் தமிழை அருளுமாறு வேண்டுகிறார்.

"இவ்வுலகிலே வளர்ந்து வரும் செம்மொழி செந்தமிழ் மொழியாம். அச்செந்தமிழ்ப் பாடல்களால் உன்னை என்றும் வாழ்த்திப் போற்றிக் கொண்டே இருக்கும் உறுதியான உள்ளத்தை எனக்கு அருள்வாயாக" என்று வேண்டுகிறார்.

"அம்புலி தனக்குள்வளர்
செந்தமிழ் வழுத்தி உனை
அன்பொடு துதிக்க மனம் - அருள்வாயே!"

என்பது அவர்தம் வாக்கு!

வடமொழி அறிஞர்

திருப்புகழிலே பல இடங்களில் வடமொழிச் சொற்களும், தொடர்களும் விரவி வருகின்றன. செந்தமிழால் பாடும் ஆர்வத்தை அருளவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் பாடலிலேயே வட சொற்களை அவர் அடுக்கி வைத்திருக்கிறார்! தமிழ், வடமொழி இரண்டிலும் அவருக்குள்ள ஆற்றலையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றது அப்பாடல் எனலாம்!

"பத்த கணப்ரிய ந்ருத்த நடித்திரு
பகதி நடத்திடு குக பூர்வ
பச்சிம தகரின உத்தர திக்குள
பக்தர்கள் அற்புதம் என ஓத
சித்ர கவித்துவ சத்தமி குத்த
திருப்புகழை"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதில் எத்தனை வடசொற்கள் உருக்குலையாமல் அப்படியே வந்துள்ளன என்பதை நாம் அறியலாம்! திருப்புகழிலும் பிறவற்றிலும் உள்ள பாடல்களைப் பார்க்கும் பொழுது அவர் வடமொழியில் நிரம்பிய அறிவுடையவர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தமிழிலே கலந்திருக்கும் வடமொழிச் சொற்கள், தமிழோடு கலந்து தமிழ்ச் சொற்களாகவே ஆகிவிட்டன. உருவத்தில் - ஓசையில் - எல்லாம் தமிழ் மயமாகவே ஆகிவிட்டன. தமிழ்மக்களுக்குப் புரியாத - தமிழ் மக்களிடையே வழங்காத வட சொற்களையெல்லாம் வேண்டுமென்றே தமிழுக்குள் திணிப்பது தவறு; அது மொழியை வளர்ப்பது ஆகாது. ஆனால், தமிழர்க்குத் தெரிந்த வடசொற்கள் - பேசிப் பழகிய வடசொற்கள் - தமிழுடன் கலந்து வருவது இயல்பு. இந்த இயற்கையைக் கட்டுப்படுத்துவது முடியாத காரியம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதற்கொண்டு தேவார, திவ்ய பிரபந்தப் பாடல்களிலும் வடசொற்கள் உண்டு. அவைகளைக் காட்டிலும், திருப்புகழிலே வட சொற்கள் கொஞ்சம் அதிகம்!

திருப்புகழிலே வடசொற்கள் கலந்திருப்பதனால் பாட்டின்சுவை குறைந்துவிடவில்லை. அவைகள் பக்தியைப் புகட்டும் பாட்டுக்களாகத்தான் விளங்குகின்றன. உள்ளத்தை உருக்கும் ஓசைநயத்துடன் தான் உலவுகின்றன; படிப்போர் மனத்தைப் பரவசமாக்குகின்றன.

அருணகிரிநாதர் முத்தமிழ் அரசு

அருணகிரிநாதர் முத்தமிழ் அரசும் ஆவார். செந்தமிழ் மணம் கமழும் அலங்காரம், அநுபூதி, அந்தாதி என்னும் இயற்றமிழ்ப் பாக்களைப் பாடியுள்ளார். தமது இயற்றமிழ்ப் புலமையை உணர்த்தியுள்ளார். கணக்கில்லாத நுண்ணிய தாள அமைப்புக் களையும், இசை நுணுக்கங்களையும் கொண்டுள்ளனவாய் இசைத் தமிழுக்கே இலக்கியமாய் நன்கு அமைந்தன திருப்புகழ் பாடல்கள். மேலும் ''திருப்புகழ், திருவகுப்பு'' என்னும் வண்ணப் பாக்களைப் பாடித் தமது இசைத் தமிழ்ப் புலமையை வெளிப்படுத்தியுள்ளார். திருப்புகழ்ப் பாக்களுள்ளும் பிற நூல்களிலும் நாடக இயலின் இனிமை பெரிதும் விளங்கப் பாடித் தமது நாடகத் தமிழ்ப்புலமையையும் சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளங்கக் காட்டியுள்ளாராதலின் சுவாமிகளை ''முத்தமிழ்ப் புலவர்'', ''முத்தமிழரசு'' என ஐயமின்றிக் கூறலாம் என்பார் தணிகைமணி. வ.சு. செங்கல்வராயப்பிள்ளை அவர்கள்.

தனிச்சிறப்பு

நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையின் மீது அருணகிரிநாதருக்குப் பெருமதிப்பு உண்டு என்பதை அவருடைய திருப்புகழ்ப்பாடல்களால் நாம் உணரலாம். சிவ பெருமானுக்குச் சிறந்த புகழ்நூல் தேவாரம். முருகப் பெருமானுக்குச் சிறந்த புகழ்நூல் திருப்புகழ் எனில் மிகையாகாது. கந்தர் அந்தாதி நூல். முழுவதிலும் யமக அந்தாதியாக அமைந்துள்ளது. வில்லிப்புத்தூராார் செய்துள்ள உரையைக் கொண்டுதான் கந்தர் அந்தாதி செய்யுள்களுக்கு நாம் பொருள் உணரக் கூடும். அத்தகைய சிறப்புடையது கந்தர் அந்தாதி!

கந்தர் அந்தாதியின் நூறு பாடல்களின் முதல் எழுத்துக்கள் சி, சீ, செ, சே, தி, தீ, தெ, தே - என்னும் எட்டெழுத்துக்களுள் அடங்குவது அற்புதமான தன்மைத்தாகும்.

தமிழில் அமைந்த இருக்குவேதசாரம் என்னும் பெருமையுடையது சம்பந்தரின் தேவாரம் என்கிறார். இதற்கிணையாகக் கூறத்தக்க சந்தப்பாடல்கள் கொண்டது திருப்புகழ் ஆகும்.

''திருப்புகழைக் கற்க, திருப்புகழைக் கேட்க, திருப்புகழை நித்தம் செபிக்க, திருப்புகழை அர்ச்சிக்க, முத்தி எளிதாகும். கூற்றை வென்று கெர்ச்சிக்கலாமே'' என்பது திருப்புகழின் பெருமையை உணர்த்துகின்றது!

''கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? - பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமா? கானமயில் - வீரன்
திருப்புகழைக் கேட்கும் செவி?''

என்னும் தொடர் திருப்புகழின் மேன்மையை உணர்த்துவதாகும்.

தமிழ்க்கடவுளாம் முருகனையே குருவாகக் கொண்ட அருணகிரிநாதரின் தமிழ்ப்பற்றும், முருகபத்தியும் அளவிடற்கரியவை ஆகும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5.சமயம்

சமயம் என்ற சொல் 'சமையம்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. 'சமையம்' என்ற சொல்லுக்குக் 'கடமை உணர்ச்சி' என்று ஆங்கில அகராதி விளக்கம் தருகிறது. 'சமைத்தல்' என்ற தொழிற் பெயரின் பொருள் 'பக்குவப் படுத்தல்' என்பதாகும். நாம் உண்ணும் உணவினை உண்பதற்குத் தக்கவாறு பல்வேறு வகையான காய்கறிகளைப் பக்குவப்படுத்தி அளிப்பதுபோல, மனிதனைத் தீய பண்புகளிலிருந்து நீக்கி நற்பண்புகளுக்கு உட்படுத்திடும் சாதன அமைப்பே சமயம் என்று உணரப்படுகிறது.

சமயம், மனிதனை நெறிப்படுத்த வல்லது; முறைப் படுத்தக் கூடியது. சமய வாழ்க்கையில் புலன்கள் தூய்மை கொள்ளும்; பொறிகள் இன்ப வைப்புகளாக மாறும். இதயம் விரிவடையும்; ஈர அன்பு பெருகி வளரும்; வேறுபாடுகள் மறையும்; ஒருமைப்பாடு தோன்றும். இதுவே சமயத்தின் விளைவும் பயனும் ஆகும்.

இந்து சமயம்

மனிதனை நெறிப்படுத்தத் தோன்றிய சமயங்கள் பலவாகும். இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம், கிறித்துவ சமயம், இஸ்லாமிய சமயம் முதலிய சமயங்கள் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் இந்து சமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. மனித வாழ்க்கை முழுமை பெறுவதற்கும் நிறை நலம் பெறுவதற்கும் சமயம் உதவக் கூடியதாய் உள்ளது. இந்து சமயம் அறுவகைச் சமயங்களாக விரிந்து அவைகளின் வழிபாட்டு நெறிகளை உள்ளடக்கியதாகும். கணபதி வழிபாடு காணாபத்யம், முருக வழிபாடு - கௌமாரம், சிவன் வழிபாடு - சைவம், சக்தி வழிபாடு - சாக்தம், திருமால் வழிபாடு - வைணவம், சூரிய வழிபாடு - சௌரம் எனப்படும். ஆனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலப்போக்கில் இவை சைவம், வைணவம் என்ற இரண்டில் அடங்குவதாக அமைந்துள்ளன.

சைவ சித்தாந்தம்

உலகில் தோன்றிய இறைக் கோட்பாடுகள் எத்தனையோ? அவை யாவும் இறைவனைப் பற்றிக் கூற நினைத்தும், இறையை உணர்த்தாது நின்றன எத்தனை எத்தனையோ! மாறாக அவை ஒழுக்கத்தையும், அன்பின் சிறப்பையும், தொழில் செய்யும் முறையையும், ஆடம்பரச் செய்கைகளையும் அளவு அறுத்துக் கூறின. காலம் மாறினாலும், யுகங்கள் மாறினாலும், முன்னைப் பழமைக்கும் பழைமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் இருப்பது சைவ சித்தாந்தம். சைவத்துள் கௌமாரமும் உள்ளடங்கியதாக அமைந்துவிட்டது. அருணகிரிநாதர், 'செவ்வேளாகிய முருகப் பெருமானையே சிவனாகத் தெளிந்து வழிபட்ட சைவ சமயத்தவர்' என்பது நன்கு தெளியப்படும் என்பது வெள்ளைவாரணாரின் கருத்தாம்.

குறிப்பாக, சங்க காலத்திற்குப் பின் சமய உணர்வே பல்வேறு இலக்கியங்களைப் படைக்கத் தூண்டியது. காலப் போக்கில் இவைகளைப் பக்தி இலக்கியங்கள் என்று வழங்கினர்.

சமயச் சிந்தனைகளில் அற உணர்வும், தத்துவ ஆராய்ச்சியும், முக்கிய இடம் பெற்றதாயினும், வழிபாட்டு முறைகளே பக்தி இலக்கியம் உருப்பெற்று வளர்ந்ததற்கு முக்கிய காரணம் எனலாம்.

வேதம் தொடர்பான பல செய்திகளைச் சைவத் திருமுறைகளும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

சுருங்கக் கூறின், சிவ வழிபாடும் திருமால் வழிபாடும் மேலோங்கி இருந்தாலும், பக்தி இயக்க காலத்தில், முருக வழிபாடும் இருந்திருக்கிறது. 'முருக நாயனார்' என்ற பெயருடையவரும் இருந்திருக்கின்றார். திருச்செங்காட்டங் குடியில், சீராளதேவனைச் சிவபெருமானுக்குத் திருஅமுதெனப் பிள்ளைக் கறியமுது செய்து வழிபட்ட திருத் தொண்டரான சிறுத்தொண்ட நாயனாருக்கு அருள்பாலிக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போது, இறைவன் முருகக் கடவுளுடன் வந்து அருள் செய்தான் என்று பெரிய புராணம் தெரிவிக்கின்றது. 'கந்தபுராணம்' முருகன் பெருமையைத் தெளிவுற விளக்கக் கூடிய நூலாகக் 'கச்சியப்ப சிவாச்சாரியாரால்' எழுதப்பட்டது. ஆக, காலந் தோறும் 'முருக வழிபாடு' என்பது தமிழ்நாட்டில் மேலோங்கி இருந்துள்ளது எனலாம். தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அருணகிரிநாதர் சைவ சமயக் கருத்துகளையும் உள்ளடக்கி இந்து சமய வளர்ச்சியில் தம் பங்கினை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த்தெய்வம் - முருகன்

தமிழ்மொழிக்கு இலக்கணம் செய்தவர் - தமிழை வளர்த்தவர் - அகத்தியர் என்பது தமிழர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பரம்பரையான செய்தியாகும். தமிழ் முனிவன் என்ற சொல் அகத்தியரையே தெரிவிக்கும். 'அகத்தியருக்குத் தமிழைப் போதித்தவர் முருகப் பெருமானே ஆவார்' என்கிறார் அருணகிரிநாதர்.

''சிவனை நிகர் பொதியவரை
முனிவன் அகம் மகிழ் இரு
செவி குளிர இனியதமிழ் - பகர்வோனே''

''குடமுனிவன் கற்க அன்று
தமிழ்செவி யில் பகர்ந்த
குமர! குறத்தி நம்பு - பெருமானே''

என்னும் திருப்புகழ்த் தொடர்கள் முருகனே அகத்தியருக்கு தமிழ் அறிவித்தான் என்று தெரிவிக்கின்றன.

முருகனை ஒப்பற்ற தமிழ்ப்புலவன் என்று போற்றிடும் அருணகிரிநாதர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் சிறந்தவன் என்கிறார்.

''மதித்த முத்தமிழில் - பெரியோனே''
''அலகில் தமிழால் உயர் சமர்த்தனே!''
''முத்தமிழ் -வித்வ வினோதா!''

என்றெல்லாம் பாராட்டும் தன்மையிலிருந்து முருகன் தமிழ்த் தெய்வம், தமிழர்களின் தெய்வம் என்பதை நிலைநாட்டு கின்றார் அருணகிரிநாதர் எனலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்து மதத்தில் ஈடுபாடு

மக்கள் வாழும் காலத்தை மூன்று பிரிவாகப் பிரித்து விடலாம். குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், கிழப் பருவம் என்பனவே அந்த மூன்று நிலைகள். இவ்வாறு மூன்றாகப் பிரிப்பது ஆண்களுக்கு மட்டுமின்றிப் பெண்களுக்கும் பொருந்தும். அருணகிரிநாதர் மக்கள் வாழ்வை இவ்வாறு மூன்று பிரிவுகளில் அமைத்தே பல பாடல் களையும் பாடியிருக்கிறார். ஒரே பாடலில் கூட முப்பருவ நிகழ்ச்சிகளைப் பற்றியும் அவர் கூறியுள்ளார்.

சில பாடல்களில் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளையும், சில பாடல்களில் வாலிபப் பருவ விளையாட்டைப் பற்றியும், சில பாடல்களில் முதுமைப் பருவ நிலையைப் பற்றியும் அவர் பாடியிருக்கிறார். வாலிபப் பருவத்தைப் பற்றி அருணகிரிநாதர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

வாலிப முறுக்கால் - இளமைத் திமிரால் - அவர்கள் காமத்திற்கு இரையாகிக் கெட்டு அலைவதைப் பற்றி மிகுதியாகப் பாடியுள்ளார்.

"அவனிதனி லேபி றந்து, மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து பதினாறாய்
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற னடிசேராய்!
(திருப். 130)

என்னும் பழநித் திருப்புகழ் தொடர்களின் மூலம், குமரன் ஆன பின், காமத்திற்கு ஆட்பட்டுப் பாழாய்த் திரிந்தேன் என வருந்து வதோடு மட்டுமின்றி அவர், மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறார்.

"சிவபுராணங்கள், ஆகமங்கள், மிகவும் சிறந்த வேதங்கள் இவைகளை ஓதிக் கொண்டிருக்கும் அன்பர்களின் திருவடிகளை எண்ணிப் போற்றுவது வாலிபர்களின் கடமையாகும். இத்தகைய நல்லொழுக்க நெறியில் நிற்கும் வாலிபர்களால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனித சமூகம் நன்மையடையும்'' என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுவதிலிருந்து இந்துமதக் கருத்துகள் பற்றியும் சிவபுராணங்கள், ஆகமங்கள், வேதக் கருத்துகள் பற்றியும் அவர் தெரிவித்துள்ளார்.

முருக பக்தி

பலர், தமக்குப் பிடித்தமான பல தெய்வங்களை வழிபடு கின்றனர். தாம் வழிபடும் தெய்வங்களைப் பற்றியே அவர்கள் போற்றிப் புகழ்வார்கள்; கண்கண்ட தெய்வம் என்றும் கொண்டாடுவார்கள்; எல்லாம் வல்ல தெய்வம் என்றும் இயம்புவார்கள்; அத்தெய்வத்தின் தோற்றத்தையும் செயல்களையும் நினைத்து நினைத்துச் சொல்லிச் சொல்லி உள்ளம் உருகுவார்கள். இது பக்தர்களின் பண்பு. முருகனிடம் அளவு கடந்த அன்புள்ளம் கொண்ட அருணகிரிநாதர், பல பாடல்களில் தம்முடைய முருக பக்தியை வெளிப் படுத்துவதோடு முருகனின் அருட்செயல்களான திருவிளை யாடல்களையும் பாராட்டிப் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் போற்றிடும் சன்மார்க்க நெறி

முருகன் அருளைப் பெறுவதற்கு எளிய வழியாக ஒன்றைக் கூறுகின்றார் அருணகிரிநாதர். பொதுவாக இறைவன் அருளைப் பெற விரும்புவோர் எல்லோர்க்கும் ஏற்றதாகவும், பலருக்கும் பயன்படுவதாகவும் உயர்ந்த உரையாகத் தெரிவிக்கின்றார்.

முதலாவதாக, ''மனத்தைப் பொறிவழிச் செல்லாமல் தடுக்க வேண்டும்; அதாவது கண், காது முதலிய பொறிகளை அவ்வவ்வற்றின் வழிச் செலுத்தாமல், மனத்தைக் கட்டுப் படுத்தி ஆள வேண்டும்.

அடுத்தபடியாக, சினமின்றிப் பொறுமையுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். மூன்றாவதாக, ஏழ்மையுற்றவருக்கு நம்மால் இயன்ற அளவு உதவியை மறுக்காமல் செய்ய வேண்டும். அதாவது தானம் புரிதல் வேண்டும். நான்காவதாக மௌனமுடன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். பயனற்ற சொற்களைக் கூறாமல் கூடியவரையில் மௌனமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இந்த நான்கு பண்புகளையும் பின்பற்றினால் முருகன் அருள் தானாகவே கிடைக்கும். அவன் திருவருளுக்காகத் தவம் கிடக்க வேண்டியதில்லை'' இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மையை ஒரு செய்யுளில் அருணகிரிநாதர் எடுத்துரைக்கின்றார்.

"தடுங்கோள் மனத்தை; விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவை வேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே"

(கந். அலங். 16)

உலகினருக்கு அறிவுரை கூறும் முறையில் உலக வாழ்வில் திளைத்துத் திகைப்போர்க்கு உய்யும் நெறியை உரைக்கும் செய்யுள் இதுவாகும். மேலே கூறிய மனத்தை அடக்கி ஆளுதல், கோபத்தைக் கைவிடுதல், தானம் புரிதல், மௌனமாக இருத்தல் நான்கும் சன்மார்க்க நெறியாகும்.

ஊழ்வினை

இறைவனை வணங்குகின்றவர்களிடந்தான் இரக்கம் இருக்கும். அவர்கள்தாம் மற்றவர்கள் படும் துன்பத்தைக் கண்டு மனம் இரங்குவார்கள். துன்புறுகின்றவர்களின் துயரத்தைப் போக்கத் துணிவார்கள். தம்மால் இயன்ற உதவியைச் செய்யப் பின்வாங்க மாட்டார்கள். இது அருணகிரிநாதரின் கருத்தாகும்.

முருகனிடம் அன்பு கொண்டவர்கள் தான் தமது செல்வத்தின் பயனையும் அனுபவிப்பார்கள். சிலர் செல்வத்தை மிகுதியாகப் பெற்றிருந்தும், பஞ்சப்பாட்டுப் பாடுவதை உலகில் பார்க்கலாம். அதற்குக் காரணம் அவர்களுடைய ஊழ்வினைதான் என்கிறார் அருணகிரிநாதர்.

"கோழிக் கொடியான் அடிப்பணி யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி காள்! உங்கள் வல்வினைநோய்
ஊழின் பெருவலி உண்ண வொட் டாது; உங்கள் அத்தம் எலாம்
ஆழப் புதைத்து வைத்தால் வரு போதும் அடிப்பிறகே".

(கந். அலங். 20)

என்னும் கந்தலங்காரப் பாட்டில் மேற்கூறிய கருத்தைத் தெரிவிக்கின்றார். நீங்கள் எவ்வளவுதான் உழைத்துச் சேர்த்தாலும் 'முருகப்பெருமானை வணங்கி வாழாது போனால், வலிமை பொருந்திய வினைத்துன்பம் என்னும் ஊழ்வினையிலிருந்து மீள முடியாது என்று தெளிவுபடக் கூறுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப்பெருமான் அருள் பெற்றால் ஊழ்வினையையும் வெல்லாம் என்பதை,

"நாளென் செயும் வினைதானென் செயும் எனைநாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயும் குமரேசரிரு
தாளுஞ்சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும் தோளும்
கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே"

(கந்த. அலங். 38)

என்னும் கந்தரலங்காரப் பாடலின் மூலம் விளக்குகின்றார். மேலும், "அவன் கால் பட்டழிந்தது இங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே" (கந். அலங். 40) என்றும் உறுதிப்பட, முருகன் அருளால் ஊழ்வினையையும் மாற்றிவிட முடியும் என்னும் நம்பிக்கையை ஊட்டுகின்றார்.

தான், யார் என்று உணர்தல்

தானே உணர்ந்து, தானே அறிந்து, தானே மகிழ்ந்து அருள் ஊறி நீத்தாய் போல் பரிந்து, தேனோடு உகந்து தானே தழைந்து, சிவமாகித் தானே வளர்ந்து, தானே இருந்த, தார்வேணி எந்தை பாலா அருள்வாயே! சாலோகத் தொண்டர், சாரூபத் தொண்டர், சாமீபத்தொண்டர்க்கு அருளும் பெருமானே! உன் திருவடிகளில் ஒடுங்குவதற்கு நான் யார்? மகிழ்வோடு உன்னை ஓதுவதற்கு நான் யார்? நீ தஞ்சமளித்திட நான் யார்? கடைநாயேன் அல்லவா? என்று கதறி அழுதவர் அருணகிரிநாதர். "திருப்புகழ் பாடுக" என்றும், "முத்தி" என்ற சொல்லுடன் பாடத் தொடங்குக என்றும் அருளாசி வழங்கினான் முருகப் பெருமான். அது முதற்கொண்டு அவர் பாடிய அருட்பாடல்கள் பலவாம். அனுபூதி பெற்ற அருட்செல்வர் அருணகிரிநாதர் மனிதன் கற்க வேண்டிய கல்வி மெய்ஞ்ஞானக் கல்வி என்பதை "மெய்ம்மை குன்றாமொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்" (கந்த. அலங். 70) என்கிறார்.

இறைவனைப் பற்றிய அருணகிரிநாதரின் கருத்துகள்

இறைவன் உருவாகவும், அரூபமாகவும் இருக்கின்றான். அவனை உளன் என்றும் கூறுவர்; இலன் என்றும் கூறுவர். மலரும் அவனே, மணமும் அவனே; மணியும் அவனே; ஒளியும் அவனே; கருவும் அவனே; உயிரும் அவனே; கதியும் அவனே; விதியும் அவனே; என்று அருணகிரிநாதர் கீழ்வரும் பாடலில் தெரிவிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

(கந். அநு.51)

மேலும், இறைவனைப் பற்றிய இரகசியங்களை, நூல்களை வாசித்தும் அறிய முடியாது; ஆலயங்களில் பூசித்தும் அறிய முடியாது. அது வாய் விட்டுப் பேச ஒண்ணாதது. நெஞ்சில் மாசுடையோர்க்குத் தோன்ற ஒண்ணாதது; நேசங்களுக்கும் காண இயலாதது; மாயைக்குச் சூழ ஒண்ணாதது; விந்துநாத ஓசைக்குத் தூரமானது. ஆகாயத்திற்கு முடிவானது; உலகத்திற்கு ஆதியானது இத்தகைய பரம ரகசியமான பரம்பொருளை மெய்ஞ்ஞான உபதேசம் பெற்று சிவயோகத்தைச் சேர்வதால் மட்டுமே அறிய முடியும் என்று திருச்சிராப்பள்ளித் திருப்புகழில் அவர் தெரிவிக்கின்றார்.

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேறொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன்.

(திருப். 341)

"வேதங்களுக்கு எல்லாம் எல்லையாக 'ஒரு பொருள்' இருக்கின்றது. அதுவே யுக இறுதிக்கு அதிபதி. அறிவுஊறி, ஞானக் கண்ணால் அந்த ஒளிதிகழ் உருவத்தை நோக்க அருள் புரிவாய் முருகா" என்ற பாடலில் வேண்டுகின்றார்.

யுகஇறு திகளிலு மிறுதிய வொருபொருள்
உள்ளக்க ணோக்குமறிவூறி
ஒளிதிக ழுருவுரு வெனுமறை யிறுதியி
லுள்ளத்தை நோக்க அருள்வாயே.

(திருப். 318)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் அந்த ஒன்றுதான் ஆண், பெண் என்ற பேதங்களையும் சத்துவ, தாமத, ராஜத முக்குணங்களையும், நான்கு வேதங்களையும் ஐம்புலங்களையும் ஆறு ஆதார நிலைகளையும், பசு - பாசம் என்ற நாதங்களையும், பல்லுயிர்களையும் படைத்து, அந்தமில் சொரூபானந்தமாய் நிற்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொல்லைமுதல் தானொன்று மெல்லியிரு பேதங்கள்
சொல்லுகுண மூவந்த மெனவாகி
துய்யசதுர் வேதங்கள் வெய்யபுல னோரைந்து
தொய்யுபொரு ளாறங்க மெனமேவும்
பல்லபல நாதங்கள் அல்கபசு பாசங்கள்
பல்குதமிழ் தானொன்றி யிசையாகிப்
பல்லுயிரு மாயந்த மில்லசொரு பானந்த
மௌவமுற வேநின்ற தருள்வாயே.

(திருப். 397)

பிறப்பு இறப்பு அற்றவன் இறைவன்

இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. சிவபெருமானைப் ''பிறவா யாக்கை பெரியோன்'' என்று சிலப்பதிகாரம் உணர்த்தும். பிறப்பிலிப் பெம்மானாகிய சிவபெருமானே முழு முதற்கடவுள் என்பதை அருணகிரிநாதரும் தெரிவித்துள்ளார்.

''பிறப்பிலிக் குணர்த்து சித்த உற்ற நெல் பெருக்கு வைப் பெருக்கும் மெய்த் திருத்தணியப் பெருமானே (திருப். 295) என்னும் (திருத்தணித் திருப்புகழ்) தொடரில் 'பிறப்பிலி' என்று சிவபெருமானைக் குறிக்கின்றார். பிறப்பில்லாதபோது இறப்பும் இல்லை. எனவே அவனே தலைவனும் முதல்வனும் ஆவான்.

''பெம்மான் முருகன் பிறவா னிறவான்''

(கந். அநு. 12)

என்பது கந்தரனுபூதி. இதன் வழி முருகனும் சிவனும் ஒன்றே என்று கண்டு கொண்டவர் அருணகிரிநாதர் என்பதை ஒருவாறு உணரலாம்.

''மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேல் வினையும் செய்யும்
ஆதலான் இவை இலாதான் அறிந்து அருள்செய்வனன்றே''
என்பது சித்தியார் பாடல்.

''சிவன் ஒருவனே வினைவயத்தன் ஆதலின்றி அந்தந்த தேவரிடமாக நின்று உயிர்கட்கு அவற்றை அறிந்து கூட்ட வல்லன், ஏனைத் தேவர் அது செய்ய மாட்டார் என்பது தானே போதரும்'' என்று சிவஞான முனிவர் தமது உரையில் இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் என்று தெளிவு பெறக் கூறுகின்றார்.

''பிறப்பில் பெருமானைப் பின்தார் சடையானை
மறப்பில்லார் கண்டீர் மையல் தீர்வாரே''

என்றும் திருஞானசம்பந்தரும் கூறுகிறார்.

''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி'' என்கிறார் மாணிக்கவாசகரும் ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவன் இறைவன் அதே போழ்தில் 'வெகுகோடி நாம சம்பு குமாரன்' அத்தகைய இறைவனுக்கு உருவமளிக்கிறார் அருணகிரிநாதர்.

உடலினுள்ளும், உயிரினுள்ளும், உணர்ச்சியுள்ளும் ஐம்பூதத் தினுள்ளும், ஒளியினுள்ளும், நால்வேதத்தின் உச்சியுள்ளும், யோகியார் உள்ளும் துன்பம் கடந்த நிலையில் உள்ளதுமான சிவச் சொரூபத்தை அடைய, வழிசொல் என்று வேண்டும்போது,

''மேவாத தனி ஞானச்
சுடரினூடு நால்வேத முடியினுடும் ஊடர்டு
துரிய வாகுலாதீத சிவரூபம்''

என்று குறிக்கின்றார்.

''எல்லாமாக இறைவன் விளங்கினாலும், ஐந்து இந்திரியங்கள் வென்று, ஒன்றும் அன்பர் அங்கம் பொருந்தும் அழகன், முருகன்'' என்பது அருணகிரிநாதரின் உள்ளக்கிடக்கை.

உயிரினது இயல்பு

உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது. சத்தாகிய பதியைச் சேர்ந்தால் சத்தாகும். அசத்தாகிய பாசத்தைச் சேர்ந்தால் அசத்தாகும். அருணகிரிநாதர் பொன்பொருள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சதமென்றும், சொந்தம் பந்தம் என்றும் சந்ததம் பந்தத் தொடராலே சஞ்சலத்தோடும் மடமாதர், மகவாசை சொந்தம் என்றும் இவ்உடமையைக் சுமந்து கொண்டு உழல்கின்றேன் என்று வருந்துகின்றார்.

''உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரம் ஆம் யோனி பேதம்'' என்பார் திருஞானசம்பந்தர் (1-132-4) குமரகுருபரரும் தம் கலிவெண்பாவில், ''ஈரிரண்டு தோற்றத்து எழு பிறப்புள் யோனி என்பான் ஆரவந்த நான்கு நூறாயிரத்துள் - சென்மத்து உழல'' என்பார்.

உயிரின் யோனிபேதம் பற்றித் திருப்புகழில் குறிப்பிடும் அருணகிரிநாதர், மேலும், ஒரு படி மேலே சென்று, கழுகு, நரி, எலி, புலி, எமன், பிரமன் ஆகியோரும் அயர்ந்து விட்டனர் என்று சிதம்பரம் திருப்புகழில் குறிப்பிட்டுள்ளார்.

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மென துயி ருடலு
மினி யுடல் விடுக முடியாது.
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
(திருப். 598)

''வதன சரோருகம்'' என்னும் திருப்புகழ்ப் பாடலில் (671) 'நூறாயிரபேதம் சாதம் (பிறப்பு) ஒழிந்தவா தான்'' என்கிறார்.

வினைக்கொள்கை

ஆன்மாக்களுக்கு இருவினைக் கொள்கை முதல்வன் ஆணையால் அமைந்து வரும். முற்பிறவிகளில் ஈட்டப்பட்டு மாயையில் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களே இருவினை எனப்படும்.

வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்று மூன்று வகைப்படும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் நெல்லுக்கு முளை, தவிடு, உமி போல உயிரைப் பந்தப்படுத்தியும், பந்தத்திற்குக் காரணமாயும் அமைகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வினை என்றும் இருவினை என்றும் மும்மலம் என்றும் அருணகிரிநாதர் தம் பாடல்களில் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இருவினை புனைந்து ஞான விழிமுனை திறந்து
நோயின் இருவினை இடைந்துபோக மலமுட
இருளற விளங்கி ஆறுமுகமொடு கலந்து பேதம்
மிலையென இரண்டு பேரும் அழகான
பரிமள சுகந்த வீதமயமென மகிழ்ந்து தேவர்
பணிய விண் மடந்தை பாத மலர்தூவப்
பரிவுகொட நந்த கோடி முநிவர்கள் புகழ்ந்து பாட
பருமயிலுடன் குலாவி வரவேணும்'

(திருப். 235)

''இருவினைக ளீட்டு மிழவுபடு கூட்டை
யெடுமெடென வீட்டி வனைவோரும்

(திருப். 1201)

''இருவினைப் பிறவிக்கடல்''

(திருப். 942)

''இருவினை அஞ்ச மலவகை மங்க மயிலேறி
வரவேணும்''

(திருப். 507)

என்னும் திருப்புகழ் பாடல்களில் வினை பற்றிக் கூறுகிறார்.

இறைவன் திருவடியைப் பெற்றால் இருவினைகளும், மும்மலங்களும் கெட்டொழியும், நெஞ்சம் வலிவொடு பொலிவுறும் அதற்கு நாம் இறைவனது திருவைந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். அவ்வாறு ஓதினால் பேதமில்லை என்று திருஞானசம்பந்தரும் கூறுகின்றார்.

இரண்டறக் கலந்து இருக்கும் நிலையை அடையலாம். இதனை அருணகிரிநாதர்.

''இருவினைமும் மலமுமற இறைவி யொடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்''

என்று 'அறுகுநுனி' என்ற பாடலில் கூறுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, அவைகட்கு அப்பாலுள்ள அனுபூதியாகிய சாயுச்சிய நிலையை அடியேன் எப்போது பெறுவனோ என்று கந்தர் அனுபூதியில் அருணகிரிநாதர்.

"ஆறாறையு நீத்ததன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமா றுளதோ "

(கந். அநு. 47)

என்று குறிப்பிட்டுள்ளார்.

சுருங்கக்கூறின் அருணகிரிநாதர் தனக்கு எல்லாமே முருகப் பெருமான் என்று கொண்டிருந்தவர். அவர் முருகனையும், சிவபெருமானையும் வேறுவேறாகக் கருதாமல் ஒன்றாகவே கருதியவர். அதனாலேயே அவருடைய பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துகள் மிகுந்து காணப்படுகின்றன. மேலும், சைவமும் கௌமாரமும் (குமரனே, முழு முதற் கடவுள் எனும் கொள்கையில் வழிபாடு செய்தல்) ஒன்றே என்பதையும் கௌமாரம் சைவத்தில் அடக்கம் என்பதையும் உள்ளவாறு உணரலாம். அருணகிரிநாதர் தம் பாடல்களில் இராமாயணம், மகாபாரதம் பற்றிய குறிப்புகளையும் ஆங்காங்கே குறிப்பிட்டு 'மால் மருகோன்' என்று தெரிவிப்பதிலிருந்து சைவ வைணவ பேதமின்றி இந்து மதக் கோட்பாடு உடையவராக விளங்கினார் என்பதை அறிய முடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6.தத்துவம்

பிறவிப் பெருங்கடலில் சிக்குண்டு, துன்பம் என்னும் அலைகளில் அகப்பட்டு, கரையேற வழியேதுமின்றி மயங்கிடும் மக்கட் சமுதாயத்திற்கு அருணகிரிநாதர் பிறவித் துயரை ஒழிப்பதற்கும், இறையருளைப் பெற்று நற்கதி அடைவதற்கும் பல கருத்துகளை எடுத்துக் கூறுகிறார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள் களையும் அருணகிரிநாதர் நன்கு விளக்கியுள்ளார்.

ஈதலே அறம்:

'ஈதலே அறம்' என்பது அருணகிரிநாதரின் எண்ணம். 'அறம் செய விரும்பு' என்பது தமிழ் மூதாட்டியின் அருட்கருத்து. ஈதலின் மேன்மையையும், இன்றியமையாமையையும் அருணகிரிநாதர் தம் நூல்களில் தெளிவுபடக் கூறியுள்ளார்.

"தினையள வேனும் பங்கிட்டு உண்ணுங்கள்,
பசியுற்றவருக்குப் பகிர்ந்து கொடுக்க இசையுங்கள்
அவருக்கு ஒருபிடி அன்னமேனும் அளியுங்கள்
இல்லையென்று சொல்லிட நாணம் கொள்ளுங்கள்
நொய்யில் பிளவளவேனும் தானமளியுங்கள்"

இதுவே நம் பாவவினை நீங்கும் வழி என்று கூறி ஈதலின் சிறப்பை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தினையளவு பங்கிட்டுண்கை

(திருப் 17)

பசியுற் றவருக் கமுதைப் பகிர்தற்கிசை

(திருப் 249)

இல்லை யென நாணி உள்ளதின் எள்ளின்
அளவேனும் பகிராரை

(திருப் 666)

பசியில் வருமவர்க்கு கசன மொரு பிடிப் படையாதே

(திருப் 1675)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவிடி னார்ப்பத மெனினும் ஏற்பவர் தாழாதீயேன்

(திருப் 1062)

இரவோருக் கேது மித்தனை தானமிடாதவர் ஏழ்
நர குழல்வாரே

(திருப் 149)

"தான மென்று மிடுங்கோள்"

(கந். அலங். 16)

நொய்யில் பிளவள வேனும் பகிர்மின்கள்

(கந். அலங்.18)

கரவா திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே

(கந்தர் அநுபூதி 7)

என்னும் தொடர்கள் ஈதலின் சிறப்பை விளக்கும் அமுதமொழிகளாம்.

பொருள்

எது பொருள்? எது மெய்ப் பொருள்? என்று அருணகிரி தெளிவுறக் கூறுகின்றார். பொருளாவது சண்முகனே என்று கூறும் அழகு பாராட்டுக்குரியது.

"வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே"

(கந்தர் அநுபூதி - 3)

என்று கூறும் தன்மை உன்னற்பாலது! அதனால் மூவாசையும் தாமேஅறும், இறப்பு நீங்கும் என்றும் கூறுகின்றார்.

மணிவாசகர் எடுத்தோதிய பொருளின் தன்மையை அருணகிரிநாதர் விரிவாக எடுத்து விளக்குகிறார். மணிவாசகர் பொருளை விளக்குமிடத்து,

"விண்ணவரும் அறியாத விழுப்பொருள் இப்பொருள்"

"உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம் போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள்"
என்றார் அருணகிரிநாதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சிவமான தொலைவிலாப் பொருள்"

(திருப். 1063)

"கலை கொடு சுட்டாத் தீப்பொருள்"

(திருப். 1152)

"பரசமய ஒருகோடி குருடர் தெரி வரியதொரு பொருள்"

(திருப். 1097)

என்று கூறியுள்ளார். மேலும்,

"அறிவை அறிவது பொருள்"

(திருப். 1152)

"அவ்வறிவே இறைவன் திருமேனி"

(திருப். 1097)

என்றும் தெளிவுபடக் கூறியுள்ளார்.

மேலும் எதிர்மறை நிலையில்,

"பாணிக்குட் படாது, சாதகர் காணாச் சற்றொணாது,
வாதிகள் பாஷிக்கத் தகாது பாதக பஞ்ச பூத பாசத்திற் படாது
வேறொரு பாயத்திற் புகாது பாவனை பாஷிக்கப் பெறாது
வாதனை நெஞ்சமான ஏணிக்கு எட்டொணாது
மீதுயர் சேணுக்குச் சமான நூல்வழி ஏறிப் பற்றொணாது
நாடினர் தங்களாலும் ஏதுச் செம்பொணாததோர் பொருள்"

என்றும் கூறியுள்ளார். இப்பொருளை எய்தும் வழி மிகவும் அரியதாதலின் "அரிய பொருளே" என்பர் ஆன்றோர்.

"இந்தப் பரம்பொருள் தோற்றம் இறுதி இல்லாதது கலைகளுக்கு வேண்டுமாயின் உண்மை அன்புடன் அடைய வேண்டுமாயின் உண்மை அன்புடன் இறைவன் திருவருளைப் பரவ வேண்டும், பந்தபாசங்கள் நீங்க வேண்டும். உலகியல் தன்மைகள் விலக வேண்டும். உரை, உணர்வு, செயல் மூன்றும் அடங்கி மும்மலங்களும் நீங்கிட வேண்டும். இருவினை அகலல் வேண்டும். யான், எனது என்ற ஆணவம் நீங்குதல் வேண்டும். பின்னரே அப்பரம்பொருள் கிடைக்கும்" என்பார் அருணகிரிநாதர். (திருப். 511)

இப்பாடுபட்டு கிடைத்த பொருளே மூன்றாவதாகிய இன்பத்துக்குச் சாதனமாகும் என்பார். இந்த இன்பம் தான் உண்மை இன்பம் என்பார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்பம்

"எங்குமில்லாததோர் இன்பம்", "ஆராத இன்பம்", "ஆற்றா இன்பம்" என்று ஆன்றோர் போற்றிடும் பேரின்பம் என்பதை அருணகிரிநாதர் "பரமானந்த சாகரம்" என்னும் சொற்றொடரால் குறித்திடுகின்றார். இவ்வின்பத்தின் அளவு அன்பின் அளவினதாம் என்கிறார்.

"மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் துனிப்ர மாநந்தந்..."

(கந். அலங். 6)

வீடு

மேற்கூறிய பரமானந்த வெள்ளம் கிடைக்கப் பெறின் நான்காவதாகிய வீடு கிடைத்ததாகும் என்பார் அருணகிரிநாதர்.

"மெய் வீடு பரமசுக சிந்து"

(திருப் 501)

"அஞ்சுவித பூத முங்கரண நாலு
மந்திபகல் யாது மறியாத
அந்தநடு வாதி யொன்றுமில தான
அந்த வொரு வீடு பெறுமாறு"

(திருப் 758)

"மாமாயை இடை புகாது ஆனாத
சுக மகோததி பரம ஞானவீடு"

(திருப் 1002)

என்னும் தொடர்களால் அவர் குறிப்பிடுகின்றார்.

முருகனே முழுமுதற் கடவுள்

காலையில் எழுந்ததும் சொல்ல வேண்டியதாகவும், திருநீறிடும் போதும் கூற வேண்டியதாகவும், உணவு உண்பதற்கு முன்னும் படுப்பதற்குச் செல்லும் முன்பும், நோய் வராதிருக்கவும், தனிவழி நடக்கும் போதும் முருகனின் நாமத்தை உச்சரித்திடுதல் வேண்டும் என்பதை ஆங்காங்கே கூறியுள்ளார்.

மனக்கலக்கம் உண்டாயின் அதனைப் போக்கவல்ல ஆற்றல் முருகனுக்கு உண்டு என்பதை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஆபத்தில் அஞ் சல் என்ற பெருமாளே"

(திருப் 233)

"இதயந் தனிலிருந்து க்ருபையாகி
இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே"

(திருப் 1201)

என்றும் கூறுகின்றார்.

முருகப் பெருமான் அருள் இருக்க நாளும், கோளும் இடர்ப்படுத்த முயன்றாலும், அவை துன்புறுத்த இயலாது என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார் அருணகிரிநாதர்.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசஇரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே

(கந். அலங். 38)

இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் நலம் கிடைத்திடச் செய்வது முருகன் அருள் என்பதைப் பின்வருமாறு

"அமரர் சிறை மீட்ட பெருமா ளே! இகபர சௌபாக்யம்
அருள்வாயே"

கடம்பமாலை தரித்தவனைச் சரண் புகுந்தவர்க்குப் பயன் கிட்டும். வீண் போகாது என்பதைத் திருப்புகழில்

"வேந்தா! கடம்பு புனைந்தருள் சேந்தா! சரண் சரண்
என்பது வீண் போம தொன்றல என்பதை யுணராதோ"

(திருப். 1887)

என்று தெரிவிக்கிறார்.

"காட்டில் குறத்தி பிரான் பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டில் புகுதல் மிக எளிதே"

(கந். அலங். 85)

என்றும் கந்தரலங்காரத்தில் தெரிவிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"முகமா றுடைக்குரு நாதன் சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே"

(கந். அலங்.-71)

என்று எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான முக்தி நெறிக்கு வழியாக முருகன் சொன்ன கருத்தை மனத்தில் இருத்தல் வேண்டும் என்பார்.

உண்மை வாழ்வு

இவ்வுலக வாழ்வு நிலையற்றது; அழியக் கூடியது; நாம் பார்க்கும் பொருள்கள் எல்லாம் நிலைத்திருப்பவை அல்ல; கண்ணால் காணும் பொருள்கள் எல்லாம் அத்தனையும் அழிந்து போய்விடக் கூடியவையே; ஆகவே, ஒன்றையும் உண்மை யானது என்று நம்பாதே; நினைக்காதே, எல்லாவற்றையும் பொய்மையானவையே என்று கருது என்றெல்லாம் கூறுவோர் இவ்வுலகில் உண்டு. இக்கருத்து முழுமையும் அப்படியே ஏற்கக் கூடியதல்ல.

நாம் பார்க்கும் இம்மண்ணுலகம் பொய்யல்லவே. இவ் வுலகில் உள்ள மலைகள், காடுகள், ஆறுகள் பொய் யானவை யல்ல. இவையெல்லாம் கண்ணில் காணலாகும் உண்மைப் பொருள்களே ஆகும்.

நாம் வாழ்வது பொய்யல்ல. வாழ்விலே நாம் இன்ப துன்பங்களை நுகர்வதும் பொய்யல்ல. அப்படியிருந்தும் அறிஞர்கள் இவ்வுலகம் பொய்யானது என்று சொல்லி யிருக்கிறார்கள்! இவ்வுலகவாழ்வாவது மாயம்; நிலையற்றது பொய்யானது என்றெல்லாம் கூறியுள்ளார்களே! ஏன்? எப்படி?

நாம் காண்பவை அனைத்தும் நிலைத்திருப்பவையல்ல இன்றிருப்பவை என்றோ ஒருநாள் ஏன் நாளையே மாறிவிடும் அழிந்துவிடும். கடல், மலை, ஆறு, காடு முதலியவை கூட மாறிவிடுகின்றன, மாறியிருக்கின்றன என்பது சரித்திரம் கண்ட உண்மை. எனவே தான் அறிஞர்கள் இவ்வுலகம் மாயா உலகம் என்றும், அழியக் கூடியதும் என்பதால் நிலையற்றது என்னும் கருத்தில் பொய்யானது என்றனர்.

பிறருக்கு உதவிசெய்து, அன்புகாட்டி, கருணை உள்ளத் தோடும், பற்று பாசம் முதலியவற்றோடும் வாழ்ந்து, மனித நேயத்தை வளர்த்தனர். மேலும் மக்கட் சமுதாயம் மனிதத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்மையோடு வாழ்தல் வேண்டும்; சமுதாய நல்லெண்ணத்தோடும் உலகவாழ்வின் நிலையற்ற தன்மையை எடுத்துச் சொல்லி, இவையெல்லாம் நிலையானது என்று புரிந்து கொள்ள வழிவகை கூறினர் ஆன்றோர்.

இக்கருத்தை நன்கு உணர்ந்தவர் அருணகிரிநாதர்.

"மெய்யே எனவெவ் வினை வாழ்வை உகந்து
ஐயோ அடியேன் அலையத் தகுமோ.
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயில் ஏறிய சேவகனே"

(கந்.அநு. 25)

என்று பாடியுள்ளார்.

இவ்வுலக வாழ்வே மெய்யென்று நம்பினாலும், அழியாத இன்ப வாழ்வு நிலைத்தது என்று நினைத்தாலும், நம் உள்ளம் நல்ல வழியில் நிற்காது. ஏதாவது கொடுமைகளைச் செய்யத் தூண்டும் என்னும் கருத்தில்,

"பாழ்வாழ்வு வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே"

(கந்.அநு. 31)

என்றும் கந்தரனுபூதியில் கூறுகின்றார்.

இறைவனை நம்புகின்றவர்கள் தீமை புரிந்திட அஞ்சுவார்கள்; இறைவன் அருள் வழங்குவதை நினைந்து பிறரிடம் கருணை காட்டுவார்கள்; கொடுமைகள் புரிந்திடத் துணிய மாட்டார்கள். உலக வாழ்வின் நிலையின்மையை மறக்க மாட்டார்கள். எனவே, தெய்வசிந்தை வேண்டும் என வலியுறுத்துகின்றார் அருணகிரிநாதர்.

"கலை கற்கினும் என்? கவிபாடினும் என்?
....
மலை காட்டி என்று அருள்வாயே" (கந்.அநு.32)

திருப்புகழ், கந்தரலங்காரம் முதலான நூல்களைக் காட்டிலும் கந்தரனுபூதியில் அவர்பாடிய பாடல்கள் அனைத்துமே அனுபூதி நிலையில் அவர் பாடியதால் அக்கருத்துகள் தத்துவங்களாக மிளிர்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகன் உபதேசித்தது

"பகுத்தறிவாகிய ஒளியின் மூலம்தான் உண்மையான அறிவு - ஞானம் உண்டாகும். உண்மை ஞானம் உண்டானால் தான் அன்பு, அருள் என்னும் குணங்கள் பிறக்கும். அன்புள்ள இடத்தில் தான் மகிழ்ச்சி, ஆனந்தம் பிறக்கும். இத்தகைய நிலையை அடைந்தவர்கள் எங்கும் ஈசனைக் காண்பார்கள். அவனை அருவ நிலையில் வெட்ட வெளியில் காண்பார்கள்"- என்ற இந்த உண்மையை முருகன் தனக்கு உபதேசித்ததாகக் கூறுகின்றார் அருணகிரிநாதர்! முருகன் தனக்கு உபதேசித்த உண்மையை - முருகன் திருவருளால் தான் உணர்ந்த உண்மையை,

"ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியேத்
தெளிய விளம்பிய வா!முக மாறுடைத் தேசிகனே.

(கந். அலங் : 8)

என்ற பாடல் மூலம் கூறுகின்றார். மேலும், அடுத்த பாடலில், வள்ளிமணாளன் தனக்கு உபதேசித்தது எது என்றும், எத்தகையது என்றும் கூறுகின்றார்.

தேனென்று பாகென் றுவமிக் கொணாமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே. (கந். அலங். 9)

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமு லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே

(கந். அலங். 85)

இரண்டு பாடல்களும் கந்தர் அலங்காரத்திலுள்ள பாடல்களாகும்.

இவ்விரு பாடல்கள் மூலம் நாம் ஓர் உண்மையை உணர முடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''முருகனை அருணகிரிநாதர் வழிபடு தெய்வமாகக் கொண்டார்; உள்ளத்தை ஒருமுகப் படுத்தும் கருவியாகவும் கருதினார். அவ்வாறு மனத்தை அடக்கி ஒருமுகப்படுத்தி உண்மைப் பொருளை ஆராய்ந்து உணர்ந்தார்'' என்பதே அவ்வுண்மை.

அருணகிரிநாதர் கண்ட உண்மைப் பொருள் முருகனாயினும் அக்கடவுள் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பரம் பொருள் ஆகும். அப்பரம் பொருளை இன்னதென்று குறித்துக் காட்ட முடியாது. வெறும் வெட்ட வெளியாக இருப்பது. ஆனால், பகுத்தறிவு என்னும் ஒளிவிளக்கைக் கொண்டு உண்மையான ஞானம் பெறலாம். அந்த உண்மை ஞானத்தின் தன்மையாகிய அன்பு, அந்த அன்பின் மூலம் உண்டாகும் ஆனந்தம் இவற்றால் அப்பரம்பொருளை அறியமுடியும் என்பதே அருணகிரிநாதரின் கருத்தாகும்.

அறிவு - அன்பு - ஆனந்தம் என்ற மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பானவை. இத்தொடர்பே உயர்ந்த பரம்பொருளை அறிந்துகொள்ள வழிகாட்டுவன'' எனலாம். இத்தகைய தத்துவக் கருத்துகளனைத்தும் நூல்களில் ஆங்காங்கே பல பாடல்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

பெறுதற்கரிய மனிதப் பிறவியை வீணாக்கக் கூடாது. வீணாக முதிர்ச்சியடைந்து மனிதப்பிறவி நீங்கிடும் முன் நல்ல செயல்களைச் செய்து முருகனின் திருவருளைப் பெற்றிட வேண்டும். உய்வு பெறுதல் வேண்டும்'' என்று அருணகிரிநாதர் அழகுறச் சொல்லிச் சென்றுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7.சமுதாயம்

“அம்மா! பெரிதே உலகம்” என்று வியந்தார் ஒருபுலவர். ஆம் உண்மை தான்! உலகம் பெரியது தான்! எத்தனையோ வகையான மக்கள் வாழ்கின்றனர். மதத்தாலும், இனத்தாலும், மொழியாலும் பல்வேறு வகைப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். காலத்தாலும், வாழும் இடத்தாலும், சூழ்நிலைகளாலும் கூட மக்கள் வாழ்வு வேறுபடுகின்றது! மனிதன் மனிதனாக வாழ்ந்திட வேண்டும்! மனிதப் பண்புடன் வாழ்ந்திட வேண்டும். தனி மனித வாழ்வு பண்புடையதாக இருத்தல் வேண்டும். “பண்புடையார் பட்டுண்டு உலகம்” என்பார் வள்ளுவப் பெருந்தகை. மனிதப்பண்பு மக்களை, மாக்களிட மிருந்து வேறுபடுத்திவிடும். அறிவின் துணைகொண்டு மக்கள் தங்களை மாக்களின் நிலையினின்றும் விடுவித்துக் கொண்டு, வாழ்ந்திடல் வேண்டும். உலக வாழ்வின் இயல்பை உணர்ந்தால்தான் – அறிந்தால்தான் மக்கள் நல்வழியிலே நடப்பார்கள். மனிதத் தன்மையுடன் நடந்து கொள்வார்கள். தனி மனித வாழ்வு சிறந்திடின், கூட்டு வாழ்க்கையான மனித சமுதாய வாழ்வும் சிறந்திடும் என்ற எண்ணம் கொண்டவர் அருணகிரிநாதர். எனவே, தனி வாழ்வின் மேம்பாட்டிற்கும், மக்கட் சமுதாயத்திற்கும் அவர் பல நீதிகளை – கருத்துகளைத் தம் நூலில் அறிவுரைகளாகப் படைத்தளித்துள்ளார். அவருடைய அருட்பாடல்களிலே இத்தகைய இயற்கை உண்மைகளும் நீதிகளும் கூடக் காணக்கிடக்கின்றன. அக்கருத்துகளைத் தொகுத்துத் தனிமனித வாழ்வு, சமுதாயச் சிந்தனைகள் என்று எண்ணமிட்டுக் காணலாம்.

உலக வாழ்வு நிலையற்றது

“இவ்வுலக வாழ்வு நிலையற்றது; அழியக் கூடியது. நாம் பார்க்கும் பொருள்கள் எல்லாம் நிலைத்திருப்பவையல்ல; கண்ணால் காண்பவையெல்லாம் ஒருநாள் அழியக் கூடியவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகவே, ஒன்றையும் உண்மையென்று நம்புவதற்கு இல்லை. அனைத்தும் பொய் என்பதைத் தெரிந்து கொள்'' இதுஒரு சாரார் கூற்று.

''இவ்வுலகிலே நாம் பார்க்கும் பொருள்கள் பொய்யல்ல; நடமாடும் விலங்குகள் பொய்யல்ல; வானத்திலே பறந்து திரியும் பறவைகள் பொய்யல்ல; பல்வேறு பணிகளைச் செய்திடும் மக்கள் பொய்யல்ல; மலைகள் பொய்யல்ல; ஆறுகள், நீர்நிலைகள் பொய்யல்ல'' எனவே, இவைகளைச் பொய்யென்றால் யாரால் நம்ப முடியும்?'' என்று கருத்துத் தெரிவிப்போர் ஒரு சாரார்.

நாம் வாழ்வது பொய்யல்ல; வாழ்விலே இன்ப துன்பங்களை நுகர்கின்றோம். அப்படியிருந்தும் சான்றோர்கள் இவ்வுலகைப் பொய்யென்று ஏன் சொன்னார்கள்? இவ்வுலக வாழ்வு நிலையற்றது – பயனற்றது – மாயையாகும் என்று ஏன் சொன்னார்கள்? ஆன்றோர்களும், ஞானிகளும், அறிவுள்ளோர் களும் இவ்வாறு சொல்லக் காரணம் என்ன? இவை யாவும் சிந்திக்கத் தக்கவை.

உலகம் – மாயை

நாம் காணும் பொருள்களும், மிருகங்களும், பறவை களும் ஒருநாள் பிறக்கின்றன. பின்னொரு நாளில் அழிந்து இறந்து போகின்றன. மக்கள் பிறக்கின்றனர்; இறக்கின்றனர். மலைகள், ஆறுகள், நீர்நிலைகள் மாற்றம் கொண்டுள்ளன. மலை கடலாகவும் , கடல் மலையாகவும், நாடு காடாகவும், காடு நாடாகவும் மாறியுள்ளன. இந்தக் கருத்தினை – உண்மையினை அடிப்படையாகக் கொண்டுதான் ஆன்றோர்கள் இவ்வுலகம் மாயை – பொய் என்று கூறி மக்களை நல்வழிப்படுத்திட விழைந்துள்ளனர்.

உலக வாழ்வு நிலையானது; உலக இன்பம் அழியாதது. நாம் அடையும் சுகம் நிலைத்திடும் என்ற எண்ணம் மேலோங் கினால், மனிதன் தன்னலம் கொண்டு வாழ்ந்திடுவான். பிறருக்கு உதவி செய்து வாழ்ந்திட வேண்டும் என்ற எண்ணமின்றி வாழ்ந்திடுவான். பிறருக்கு உதவி செய்து வாழ்வதே மனிதப் பண்புடன் பொருந்தி வாழ்வதாகும். அத்தகைய எண்ணம் மேலோங்கிட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனிதப் பண்பு வேண்டும்

மக்களிடம் மனிதப் பண்பு இல்லையெனில், மனித சமுதாயமே சீர் குலைந்திடும். மனித வாழ்வுக்கும் மிருக வாழ்வுக்கும் எவ்வித வேற்றுமையும் இல்லாது போய்விடும். மனிதனை மனிதன் அடித்துத்தின்னும் காட்டுமிராண்டிகளாகத் தான் காலம் காலமாக வாழ்ந்து கொண்டிருப்பர். இத்தகைய நிலை மாறிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டுதான் அருளாளர்களும், ஆன்றோர்களும் - அறிவுடையோர்களும் - நம் முன்னோர்களும் உலக வாழ்வின் நிலையற்ற தன்மையை எடுத்துரைத்தனர்.

உலகம் நிலையற்றது என்பதை உணர்ந்தால் மக்கள் உண்மை இன்பம் இது என ஆராய்ந்து நாடி நேர்மையுடன் வாழ்வார்கள். பேராசையின்றி, போட்டி பொறாமையின்றி உதவி செய்து வாழ்வாங்கு வாழ்ந்திடுவார்கள் இதனை நன்குணர்ந்தவர் அருணகிரிநாதர்!

"மெய்யே எனவெவ் வினை வாழ் வைஉகந்து
ஐயோ அடியேன் அலையத் தகுமோ?
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய்! மயில்ஏ றியசே வகனே"

(பா. 25)

என்று கந்தரனுபூதியில் அவர் குறித்துள்ளார்.

இவ்வுலக வாழ்வை நிலையானது, மெய்யானது என்று நம்பினால், உள்ளம் நல்வழியில் நிற்காமல் பல கொடுமை களைச் செய்தாவது இன்பத்தை அடைய முயலும் என்பதை உணர்ந்த அருணகிரிநாதர்

பாழ்வாழ் வெனும் இப்படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வா ன்வைசெய் தனதாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வா கனனே

(பா. 31)

என்னும் கந்தரனுபூதிச் செய்யுளில் பாடியுள்ளார்.

இறைவனை நம்புகிறவர்கள் தீமைகள் செய்வதற்கு அஞ்சுவர். இறைவன் தன் அன்பர்களுக்கு அருள் செய்வான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று நம்புகின்ற அடியார்கள் பிறருக்கு என வாழ்வார்கள். இறைவன் தீயோரை ஒறுத்திடுவான்; நல்லோரை உய்வித்திடுவான் என்ற நம்பிக்கை கொண்ட அருணகிரிநாதர்,

"கலை கற்கினும் என்! கவி பாடினும்என்?
நிலை கற்கினும் என்? நினைவித்து உணராக்
கொலை கற்றிடுவோர் கொடுவஞ்சகமாய்
மலைகட்டற என்று அருள்வாங்கு"

(பா. 32)

என்று கந்தரனுபூதியிலே தெரிவித்துள்ளார். இப்படி, உலக வாழ்வின் உண்மையை உணர்ந்து, வாழ்கின்ற மக்கள் நல்வழியிலே மனிதத் தன்மையுடன் வாழ்வர் என்றும், அவ்வாழ்வே உண்மை வாழ்வு என்றும் அருணகிரியார் தெரிவிக்கின்றார்.

விலைமாதர் பற்றிய செய்திகள்

வேசையர் தொடர்பால் விளையும் தீமைகளைப் பற்றி அவர் மிகுதியாகக் கூறியுள்ளார். வேசையர்க்கு 'விலைமாதர்' என்றொரு பெயரும் உண்டு. அவர்கள் யார் தங்களுக்குப் பொருள் மிகுதியாகத் தருகிறார்களோ, அவர்களிடம் அன்பு காட்டுவதுபோல் நடிக்கிறார்கள். ஆனால் அந்த நடிப்பு நீண்டகாலம் நீடிக்காது.

வஞ்சகர்களிலே மிகவும் கொடுமையானவர்கள் வேசையர்கள். வறுமை காரணமாக வேசித் தொழிலை மேற்கொண்டிருக்கிறவர்களுக்கு வழுக்கி விழுந்த மக்களுக்கு – மனிதத் தன்மையையே விடுத்துப் பணம் பறிக்கும் வித்தையிலே தேர்ச்சி பெற்று வாழ்வு மேற்கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே – கணிகையர் விலைமகளிர் – பொதுமகளிர் என்பவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். விலைமாதரைப் பற்றிச் சேக்கிழார் தம் நூலில் 'பதியிலார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

வேசையர்கள் கூட்டுறவைப் பற்றியும் அதனால் வரும் அல்லல்களைப் பற்றியும் திருக்குறள் முதலான பல நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன. ஒழுக்கக் கேட்டில் – தீயொழுக்கத்தில் வேசையர் ஒழுக்கம் ஒன்று என்று அறநூல்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிவிக்கின்றன. ஆயினும் இத்தீமையைப் பற்றித் திருப்புகழ் விரிவாக எடுத்துரைக்கின்றது.

தன் அனுபவமாகப் பாடியது

திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதர் ஆரம்பத்தில் பெரும் காமுகர் என வாழ்ந்தார். விலைமாதர் தொடர்பையே விரும்பித் திரிந்தார். அதனால் காலப்போக்கில் உளநோயும், உடல் நோயும் பெற்றார்; பிறகு அத்தீயொழுக்கத்தை வெறுக்க லானார். முருகனிடம் அன்பு மேற்கொண்டு அடியவரானார். எனவே, தன் அனுபவ நிகழ்ச்சிகளை உளங்கொண்டு பாடியுள்ளார் எனலாம். அவர் முருகனிடம் தன்னை உய்விக்க வேண்டுமென விரும்பி முறையிடுகின்றார். தன்னை முன்னிலைப்படுத்திப் பாடும் திருப்பரங்குன்றத்துத் திருப்புகழிலே,

"வடத்தை மிஞ்சிய புளகித வனமுலை
தனைத் திறந்து, எதிர்வரும் இளைஞர்கள் உயிர்
மயக்கி, ஐங்கனனை மதனனை ஒரு அருமையினாலே
வருத்தி வஞ்சக நினைவொடு, மெலமெல
நகைத்து, நண்பொடு 'வரும்இரும்' எனஉரை
வழுத்தி, அங்கவரொடு சருவியும் உடல்–தொடு போதே
விடத்தை வென்றிடு படைவிழி கொடும் உளம்
மருட்டி, வண்பொருள் கவர் பொழுதினில் மயல்
விருப்பெனும் படி மடிமிசையினில் விழுதொழில்தானே
விளைத்திடும் பலகணிகையர் தமதுரையால்
மனத்தை நம்பிய சிறியனை, வெறியனை
விரைப்பதந்தனில் அருள்பெற நினைகுவது உளதோதான்"

என்று வேசையரின் தன்மையை விளக்கமுறத் தெரிவித்துள்ளார். விலைமாதர் உறவால் பொருள் இழப்பு நேரிடும்; செல்வம் சீர்கெடும் என்று கூறி இளைஞர்களுக்கு எச்சரிக்கை தருவதாக அறிவுரை பகர்வது போன்று பாடியிருக்கின்றார்.

விலைமாதர் உறவால் ஏற்படும் இழிநிலை

பரத்தையர் இன்பத்தை நம்பி – அறிவிழந்து திரிவோரை புத்திமதி கூறித் திருத்திட விழைகிறார் அருணகிரிநாதர்.

பொருள் போனபின், மானம் அழிந்தபின் விலைமாதர்கள் கைவிட்டபின்தான் அத் தீயவர்கள் அவர்களை வெறுக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வசைமொழிகளைக் கூறிப் பேசுவார்கள் என்று தீயோர் இயல்பைத் தெளிவாகக் கூறியுள்ளார். பரத்தையர்களைப் பற்றி வசைமொழிகளை அடுக்கிக் கூறி வைவார்கள். இது இவ்வுலக மக்களில் தீயோரின் இயல்பு.

திருப்புகழ்ப் பாடல்களிலே அருணகிரிநாதர் விலைமாதர் களைப் பற்றிக் கூறுவன எல்லாம் வெறும் கற்பனையல்ல. தாம் அனுபவித்த – கண்ணாற் கண்ட – உண்மையை அப்படியே உரைப்பன எனலாம். வேசையர் மீது உண்டாகும் ஆசையிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டுமென முருகனிடம் முறையிடும் பாங்கில் அவர் பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றிலிருந்து வேசையர் மீதுள்ள ஆசையினால் மக்கள் எவ்வாறு சீரழிவர் என்பதையும், அங்ஙனம் காம வேட்கை யின்றி முருகன் அருளால் உய்யும் திறம் பற்றியும் தெரிவிக்கும் செய்திகள் இன்றைய காலகட்டத்திலும் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துகளே.

பரத்தையர்களின் ஈனச்செயல்களையெல்லாம் கூறி, அவர் களைப் பற்றி வசைமொழிகளை அடுக்கிக் கூறுகிறார் அருணகிரிநாதர். அடக்கமுடியாத ஆத்திரமும், வேதனையும் மேலிடக் கூறுகின்றார்.

"மலைபோல் விளங்கும் முலையின்மேல் உள்ள ஆடையை நழுவ விடுவார்கள், பிறகு எடுத்துப் போடுவார்கள்; வாலிபர்களின் உள்ளங்களை இழுப்பதற்கே இப்படிச் செய்வார்கள். இவ்வாறு வஞ்சக நாடகம் நடிக்கும் காமிகள்; அசட்டுத் தனமுள்ளவர்கள்; தம்மை அணைவோர்க்குத் தீமை தரும் நோய்கள் பலவும் அப்பிக் கொண்டிருக்கின்ற உடம்பு உள்ளவர்கள். தந்திரத்தினால், அன்புள்ளவர்களுடன் மணம் புரிந்து கொள்வதற்கு இசைவதுபோல் நடிப்பர்; அவர்கள் பொருளைக் கவர்ந்தவுடன் நழுவி விடுவார்கள்; உடம்பு முழுவதும் நாற்றமடிக்கும் நோயினர்; ஏமாற்றுவதற்காக, நயமான மொழி பேசுகின்றவர்கள்; படுக்கைகளின்மேல் மனம் உருகியவர்கள்போல் நடித்துத் தழுவிக்கொள்வார்கள்.

தம்மை விரும்புவோர் பொருள் கொடுக்கும் காரணமாக, அன்பில்லாமல் அவர்களுடன் காமம் மேற்கொண்டு அவர்களுடன் காமப்போர் புரிவர்; அவரைவிட அதிகமாகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணம் கொடுக்கின்றவருடன், அவரைப் பழைய அன்பன் எனப் பாராட்டி அவர் இன்பம் அடையும்படி தழுவிக் கொள்ளுகின்றவர்கள்.

தங்கள் கண்பார்வையை அம்புபோல்விடுத்து, தம்மை விரும்புவோர் செயல்களையெல்லாம் கவரும் திருடிகள்; இவர்களை நினைத்து மயங்காதபடி, நன்மையடையும் கதியைப் பெறும்வகையை எனக்கு உபதேசம் செய்வதற்காக முருகா! நீ மயிலின்மீது ஏறிவந்து அருள் செய்ய வேண்டும்; இத்தகையதொரு நாளை நான் எதிர்பார்க்கிறேன் என்று குன்றுதோறாடல் என்னும் தலைப்பின்கீழ் உள்ள பாடலில் குறிப்பிடுகின்றார்.

கிரிஉலாவிய முலைமிசை துகில்இரு

....

மாமயில் மிசைவர நினைவதும் ஒருநாளே

விலைமாதர் பற்றி அருணகிரிநாதர் கூறும் வசைமொழிகள்

''வஞ்சகமே உருவானவர்கள்; வஞ்சகத்திலே முழு சமர்த்தர்கள்; ஓயாத தந்திர சாலிகள்; பிறர் மனத்தைக் கவரப் பசப்பு வார்த்தைபேசும் மனப்பசப்பிகள்; தம்மை அணுகியவர்களின் வாழ்நாளைப் பிளந்து அழிக்கும் விழிகளையுடைய கடைப்பட்டவர்கள். தவநெறியில் நிற்கும் முனிவர்களையும்கூட, காம மயக்கத்துக்கு ஆட்படுத்திடும் கொடியவர்கள்; உள்ளத்தில் அன்பில்லாமல் பொருள் படைத்தவர்களைக் கண்டால் அன்புடையவர்கள்போல் நடித்துப் பொருளைக் கவரும் தன்மையுடையவர்கள். மிகுந்த மோகத்தையும், காமத்தையும் மேலிடச் செய்யும் தந்திரசாலிகள்; நன்றி கெட்டவர்கள்; போதை தரும்பானம் அருந்தக் கூடியவர்கள்; கர்வம் பிடித்தவர்கள்; பழிபாவம் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவர்கள்; இத்தகைய விலை மாதர்களின் உறவு ஒருநாளும் நல்லது ஆகாது'' என்று அருணகிரிநாதர் தெரிவித்துள்ளார்.

''மாயா சொரூப முழுச்ச மத்திகள்
ஓயா வுபாய மனக்க நக்கினய்
வாணாளை யீரும் விழிக்க டைச்சிகள் முனிவோரும்
மாலாகி வாட நகைத்து ருக்கிகள்
ஏகாச மீது தனத்தி றப்ஞ்பிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரீ ரிரீரென் முழுப்பு ரட்டிகள்
ஆயாத வாசை யெழுப்பு மெத்திகள் வெகுமோகம்
ஈயாத போதி லறப்பி ணக்கிகள்
ஆவேச நீருண் மதப்பொ றிச்சிகள்
ஆமா றெணாத திருட்டு மட்டைகள் பழிபாவம்
கோமாள மான குறிக்க முத்திகள்
ஆசார வீன விலைத்த னத்திய
குறவாமே
(திருப். 361)

என்பது பாடல்.

"காமக் காரிகள்; க்ரீடா பீடிகள்; நானா மோடிகள்; மாயா ரூபிகள். பொல்லாத மூதேவிகள்; ஓயா மாரிகள்; பேய் நீர் உண்ணிகள்; மாபாவிகள்; விடமிகள்; கபடிகள்; படிறிகள்; தூர்த்திகள்'' என்றெல்லாம் விலைமாதர் பற்றிக் கடிந் துரைத்துள்ளார்.

பரத்தையர் மோக வலையில் வீழும் மக்களுக்கு அறிவூட்டவே, இவ்வாறு பாடியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

ஆபாசத்தை (இழிசெயல்களை) எடுத்துக்காட்டுவது அருணகிரிநாதரின் நோக்கமல்ல. காமத்தால் விளையும் துன்பங்களை எடுத்துச் சொல்வது காமவெறியை ஊட்டுவது ஆகாது; தீயொழுக்கம்இன்னது என்பதை எடுத்துரைப்பது தீமையைப் போற்றுவது ஆகாது. மாறாக, மாதர் மயக்கால், காமத்தால் விலைமாதரால் - ஏற்படும் தீமைகளை வலியுறுத்திப் பாடுவதனால் மக்களிடம் தீயொழுக்க நெறிநின்று விலகி, தெய்வ பக்தி மேலோங்கி வாழ்வாங்கு வாழ்ந்திட வழிகாணுகின்றார் அருணகிரிநாதர் எனலாம்.

மக்கள் முப்பருவம்

இவ்வுலக மக்களை மூன்று பிரிவாகப் பிரித்து விடலாம். பொதுவாக மக்கள் வாழ்வு மூன்று பருவத்தில் அடங்கிவிடும். அவை குழந்தைப்பருவம், வாலிபப் பருவம், வயோதிகப் பருவம் என்பனவாகும். ஆண்கள், பெண்கள் என்ற இரு பாலார்க்கும் இப்பருவங்கள் பொருந்துவனவேயாகும்.

சில பாடல்களில் குழந்தைப் பருவத்தை மட்டுமே, இன்னஞ்சில பாடல்களில் வாலிபப் பருவத்தை மட்டுமே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றுமுள்ள சில பாடல்களில் கிழப்பருவத்தை மட்டுமே பாடும் வல்லமை படைத்த அருணகிரிநாதர் சில பாடல்களில் முப்பருவ நிலைகளைப் பற்றியும் பாடியுள்ளார்.

இளமைப் பருவத்தில் காமத்திற்கு இரையாகி வருந்தும் தீயோரைப் பற்றிய பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

''இந்த உலகிலே மனித உருவம் எடுத்துப் பிறந்தேன்; சிறுகுழந்தையாக நடக்கத் தெரியாமல் தவழ்ந்தேன்; பின் என் பெற்றோர் கண்டு மகிழ அழகாக நடந்தேன்; குழந்தைப்பருவம் கடந்து இளைஞன் ஆனேன் – பிறகு மழலைமொழி பேசினேன்; திருத்தமற்ற குதலைச் சொற்கள் கூறி அனைவரையும் மகிழச் செய்தேன். இவ்வாறு சிறந்த வகையிலே வளர்ந்த நான் இளமைப்பருவத்தைக் கடந்து பதினாறு வயது வாலிபன் ஆனேன். அதாவது குமரன் ஆனேன். குமரன் ஆனபிறகு சிவ புராணங்கள் ஆகமங்கள் வேதங்கள் என்னும் இவைகளை ஓதும் அன்பர்களின் திருவடிகளை எண்ணிப் பார்க்கவில்லை. தெய்வத்தின்பால் அன்புடைய அடியார்களை நான் போற்ற வில்லை என வருந்துகிறார். பெண்ணாசை மிகுந்து, காம வேட்கைகொண்டு கவலை மேலிட்டுத் திரிந்து வாழ்ந்தேன்'' என்று வருந்துவதாக ஒரு பாடலில் குறிப்பிடும் அருணகிரி நாதர், முதுமையின் இயல்பை மற்றொரு பாடலில் காட்டு கின்றார்.

திருச்செந்தூர் திருப்புகழ் பாடலில், தொந்திசரிய என்று தொடங்கும் பாடல் தன்னை வயது மிகுந்த கிழப்பருவம் உடையவராகக் கருதிக் கொண்டு பாடுகின்றார்.

''வயிறோ மடிந்து சுருங்கிச் சரிந்துவிட்டது. மயிர் வெண்ணிறம் பொருந்திய நரைபெற்று விட்டது. பற்கள் ஆட்டம் கண்டுவிட்டன. நிமிர்ந்து நிற்கவோ, உட்காரவோ, நடக்கவோ முடியவில்லை. முதுகு கூன் விழுந்துவிட்டது. வாயைச் சரியாக மூடமுடியவில்லை. நடை தளர்ந்து விட்டது. தடியை ஊன்றிக்கொண்டு நடக்க வேண்டியதாக உள்ளது. தள்ளாடித் தள்ளாடி நடப்பதைக் கண்டு, பருவமங்கையர்கள் சிரிக்கின்றனர்; இப்படி நடக்கும் கிழவன் யார் என்று கேட்டுப் பரிகசிக்கின்றனர். இருமல் ஒருபுறம். நினைப்பதைச் சொல்ல முடியாமல், உரைகள் குழறுகின்றன. விழிகள் பார்வை மங்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விட்டன. காதுகள் ஓசையைச் சரிவரக் கேட்க முடியாதபடி ஆகிவிட்டன. நோய் வந்துவிட்டது. மருத்துவர் என் உடம்பைப் பார்த்துத் தரும் மருந்தும் எனக்கு ஆறுதல் அளிக்க வில்லை. இள மைந்தர்கள் குடும்பக் கணக்கு பற்றிக் கேட் கின்றனர். உடைமை என்ன? கடன் எவ்வளவு என்று வினவு கின்றனர். எனக்குச் சாகும் காலத்தில் கூட மனச்சாந்தி இல்லையே. மனைவி மிகுந்த துக்கத்துடன் அழுது புலம்பு கின்றாள். யமதூதர்கள் என் எதிரில் நின்று உயிரைக்கவர விரும்பி நிற்கின்றனர். இப்படி எனது உயிர் போகும்போது, நீ மயிலின்மீது ஏறிவந்து என்னைக் காப்பற்ற வேண்டும்'' என்று வேண்டுகின்றார்.

இதிலிருந்து ''அரிதானது மனிதப் பிறவி. அப்பிறவியை வீணடிக்கக்கூடாது. அப்பிறவி ஒரு காலத்தே அழியக் கூடியது. மூப்பாகி இறப்பதற்குள் காலம் கடத்திடாமல் நற்செயல்களைச் செய்து இறையருள் பெறவேண்டும்'' என்னும் கருத்தை உள்ளத் தில் தெள்ளத் தெளிவாகப் பதியும் வண்ணம் எடுத்துரைக்கின்றனர்.

சமுதாயம் பற்றிய சிந்தனைகள்

சமுதாய ஒழுங்கு, சமுதாயக் கட்டுப்பாடு, சமுதாய நீதி என்பவை எக்காலத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. 'காலத்திற்குக் காலம் மாறுதல் ஏற்படும். மனித சமுதாய வளர்ச்சியை அறிவோர் இதனை உணர்வார்கள். ஒரு காலத்தில் புலால் உண்பது – கள்ளுண்பது போன்ற செயல்கள் மக்களின் இயல்பான வாழ்க்கையில் இணைந்து தீய செயல்கள் அல்ல என்று கருதப்பட்டன. நாகரிகம் – பண்பாடு வளர வளர, காலப்போக்கில் அவை பாவச் செயல்களாகவும், தீய செயல்களாகவும் கருதப்படும் நிலையாயின. நீதிநூல்களில் இவை போன்றவை மாபாதகச் செயல்களாகக் கருதப்பட்டு, கண்டிக்கப்பட்டன. இவைகளை நீக்கி வாழ்வதுதான் ஒழுக்கம், அறிவுடைமை – பண்பட்ட செயல்பாடுடைய வாழ்க்கை என்று கருதப்படலாயிற்று.

ஒரு காலத்தில் செல்வச் சீமானாக, சுக போக போக்கிய முடன் வாழ்ந்தவர்களைக் கண்டு முன்வினைப் பயனான புண்ணிய பலன் அனுபவிக்கின்றனர் என்றனர். இன்றைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலையில் உழைத்துச் சம்பாதித்துப் பொருள் வளம் கொள்ளலாம் என்று கருதுகின்றனர். உழைப்பவர்களே சமுதாயத்தில் சிறந்தவர்கள்; சமுதாய ஊழியர்கள்; உழைக்காத வர்கள் சமுதாயத் துரோகிகள் என்று கருதப்படலாயினர். அடுத்து சமுதாய நன்மைக்காகவே பொருள் சேர்த்து அதனைப் பயன்படுத்துதல் வேண்டும். பொருளைக் குவித்து வைத்துக் கொண்டிருப்பவன் தேசத்துரோகி – சமுதாயத் துரோகி என்று கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. நம் நாட்டில் , எந்தெந்தக் காலத்தில் எவை எவை சமுதாய ஒழுங்குகளாகப் போற்றப் பட்டன என்பதைத் தமிழ் இலக்கியங்கள் நன்கு தெளிவுற எடுத்துரைக்கின்றன. அருணகிரிநாதரும் தம் கால நிலையை நன்கு படம்பிடித்துக் காட்டியுள்ளார். அவர் கூறும் ஒழுக்கங்களும், நீதிகளும் அவர் காலத்தில் நம் நாட்டு அறிஞர்களால் போற்றப்பட்டன. மேலும் ஒப்புக் கொள்ளப் பட்டன எனலாம்.

நரகத்தில் ஆழ்வோர் யார்?

அருணகிரிநாதர் தம் கால நிலையை எடுத்துரைக்கும் தன்மையில், தீவினை புரிவோர் நரகினைச் சென்று அடைவோர் என்கின்றார் அவர்களை அவர் பட்டியலிட்டுப் பாடியுள்ளார்.

"ஓது வித்தவர் கூலிகொ டாதவர்
மாத வர்க்கதி பாதக மானவர்
ஊச லிற்கன லாயெரி காளையர் மறையோர்கள்
ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்
ஆர்த னக்குமு தாசின தாரிகள்
ஓடி யுத்தம ரூதிய நாடின ரிரவோரும்
கேது மித்தனை தானமி டாதவர்
பூத லத்தினி லோரம தானவர்
ஈசர் விஷ்ணுவை சேவைசெய் சோர்தமை
யிகழ்வோர்கள்
ஏக சித்ததி யானமி லாதவர்
மோக முற்றிடு போகிற முறினர்
ஈன ரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே
என்று பாடியுள்ளார்.

தீவினையாளர்களை – ஒழுக்கமற்றவர்களை 'குண்டர்கள்'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று குறிப்பிடும் அருணகிரிநாதர் அத்தகையோரையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

தோழமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள்க டிந்த குண்டர்கள் பெரியோரைத்
தூஷண நிந்தைப கர்ந்த குண்டர்க
ளீவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளுறவென்பதொ ழிந்த குண்டர்கள் தொலையாமல்
வாழ்நி னைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மானவ கந்தைமி குந்து குண்டர்கள் வலையாலே
மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் சொங்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதைந மன்றன்வ ருந்தி டுங்குழி விழுவாரே

மற்றொரு பாட்டிலே ஒழுக்கங்கெட்டவர்களைத் துட்டர்கள் என்றே குறிப்பிடுகின்றார்.

ஆசார வீனக் குதர்க்க துட்டர்கள்
மாதாபி தாவைப் பழித்த துட்டர்கள்
ஆமாவி னூரனைச் செகுத்த துட்டர்கள் பரதாரம்
ஆகாதெ னாமற் பொசித்த துட்டர்கள்
நானவு பாயச் சரித்ர துட்டர்க
ளாவேச நீரைக் குடித்த துட்டர்கள் தமியோர்சொங்
கூசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்க ளாசைப் பிதற்று துட்டர்கள்
கோலால வாள்விற் செருக்கு துட்டர்கள் குருசேவை
கூடாத பாவத் தவத்த துட்டர்கள்
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்
கோமள நாயிற் கடைப் பிறப்பினி லுழல்வாரே

மேலே கூறிய பாடலில் கூறப்பட்டுள்ள தன்மையில் உள்ளவர்கள், இக்காலத்தும் துட்டர்களாகவே மக்களால் கருதப்படுகின்றவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மனித சமுதாயத்தைத் திருத்தும் கருத்துடையவர் என்னும் தன்மைக்கேற்ப அருணகிரிநாதர், இத்தகைய கருத்துகளைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறியுள்ளார். இதனால் அக்காலச் சமுதாய நிலையையும் நாம் உணரமுடிகின்றது.

முருகபக்தியில் திளைத்த அருணகிரிநாதர் வெறும் பக்தியால் மட்டும் இறைவனின் அருளைப் பெறமுடியாது. ஒழுக்கமும் ஈரநெஞ்சமும் இருந்தாலன்றி இறையருளைப் பெற இயலாது என்று கூறியுள்ளார். பக்தியும், ஒழுக்கமும் சமுதாயத் திலுள்ள மக்கள் அனைவருக்கும் இரு கண்கள் ஆகும் என்று தெளிவுபடுத்தியுள்ளார். உண்மை ஞானம் பெற்றவர்கள் சாவுக்கும் அஞ்சாது வாழ்வர். காலனையும் எதிர்த்து நிற்கும் வல்லமை உடையவர் ஆவர்.

ஒழுக்க நெறியிலே உறுதியாக நடக்க விரும்புவோர் முதலில் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வார்கள். உள்ளத்திலே தீய எண்ணங்கள் தோன்ற இடம் கொடுக்க மாட்டார்கள். பிறருக்குக் கெடுதி வரும் சொற்களைப் பிறர் மனம் புண்படப் பேச மாட்டார்கள். நல்ல சொற்களையே பேசுவர்; நற்செயல்களையே புரிவர். மனம், மொழி, மெய் மூன்றையும் தூய்மையாக வைத்துக் கொள்வர். தம்மளவில் குற்றமற்றவர்களாக வாழ்கின்றவர்களே உயர்ந்தவர்கள்; சிறந்தவர்கள் ஆவர். இல்லறமே நல்லறம் என்ற கோட் பாடுடையார் அருணகிரிநாதர்; 'முருகனே வள்ளி மணாளன்' என்பார்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. இலக்கியத் திறன்

"வாக்கிற்கு அருணகிரி" என்னும் தனிப்பாடல் தொடர் அருணகிரிநாதரைப் பக்தியிலக்கியப் படைப்பாளிகளில் ஒருவராக உணர்த்துகின்றது. அவர் 16,000 பாடல்கள் பாடியதாகக் கூறப்படும் திருப்புகழ் சிறந்த நூலாகும். கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவகுப்பு, திருவெழு கூற்றிருக்கை என்னும் பனுவல்களையும் அவர் பாடியுள்ளார். மேலும் சந்தப்பாக்களை மிகுதியாகப் பாடியவர் அருணகிரி நாதர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியம்

"இலக்கு+இயம்=இலக்கியம்" ஒரு குறிக்கோளை நயம்பட உரைத்தலே இலக்கியம் என்பர். சங்ககாலத்திய இலக்கியங்கள் அகம், புறம் பற்றியவை. காப்பிய காலத்தில் ஒரு கதையமைப்பைக் கொண்டு பல்வேறு கருத்துகளை எடுத்துப் புலவர்கள் விளக்கியுள்ளனர். பக்தியிலக்கியம், அடிப்படையில் பக்தியை மையமாகக் கொண்டு விளங்குவன. சமயச்சார்பான இலக்கியங்கள் இவ்வகையின. அருணகிரிநாதரின் படைப்புகள் கூட முருகனின் பெருமையையும், முருகபத்தியையும் வளர்ப்பனவாக உள்ளதால் பக்தியிலக்கியத்தின் பாற்படு வதாகக் காணப்படுகின்றன; கருதப்படுகின்றன.

"ஓர் இலக்கியம் இவ்விவ்வாறு அமைதல் வேண்டும் என்ற விதிமுறைகளிலிருந்தும், இலக்கியத்தின் பரப்பினை ஆழ்ந்து பல் கோண நிலையில் பார்த்து அறிவனவற்றிலிருந்து சில கோட்பாடுகளை உணரவும், கொள்கைகளை உருவாக்கவும் முடியும்" விதிமுறைகள் இலக்கண நூற்களிலேயே அமைதல் பெரும்பான்மை. சிறுபான்மையாக இலக்கியக்கர்த்தாக்கள் நேரடியாகப் பொருண்மைச் சிறுகூறாகவும் அவ்வாறன்றி வெளியீட்டு நிலையில் வருணனை, உவமை வாயிலாகவும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைமொழி வழியாகவும், அவ்வக்காலத்தில் சமுதாயத்தில் அல்லது தம்மையொத்த புலவர் மத்தியில் அல்லது தம் கருத்தில் நிலவுகின்ற சில விதிமுறைகளை உணர்ந்தும், உணராதும், புகுத்த வேண்டுமெனக் கருதியோ, கருதாதோ தருகின்றனர். இந்நிலையில் விதிமுறைகளை இலக்கியத்திலும் காணலாம் என்பது தெளிவுறுகின்றது. அருணகிரிநாதரைப் பொறுத்த மட்டில் அவர் பாடல்களில் இந்நிலை பெருகி அமைகின்றது'' என்பார் ச.வே. சுப்பிரமணியன்.

தமிழிலக்கிய வரலாற்றில் சந்தக் குழிப்பின் உச்சநிலையைக் காட்டி, தாளத்தோடு பாடலைப் பாடுகின்ற நிலையில் பக்தி இலக்கியத்தைச் சமுதாயத்திற்குத் தந்தவர் அருணகிரிநாதர். இலக்கியம் பற்றிய உணர்வு அவருக்கு மிகுதியாக இருந்தது. பலகோணங்களில் அதுபற்றிய சிந்தனை அவரிடம் விரிகின்றது.

ஓர் இலக்கியம் எழுந்த காலம், சூழல், நோக்கம் என்பன வற்றைக் கொண்டு பார்ப்பது ஒருவகை; மற்றும் அதனை ஆக்குகின்ற பொருண்மை, வடிவம், வெளியீடு, ஆகியவை பற்றிக் காண்பது இன்னொருவகை; எவ்வாறு நோக்கினும் அருணகிரிநாதரின் படைப்புகள் சிறந்த இலக்கியங்களாகவே காணப்படுகின்றன.

இலக்கியம் பற்றிய சிந்தனை

இலக்கியம் தொடர்பான சொற்களும், இலக்கியக் கர்த்தாக் களைக் குறிக்கும் சொற்களும் மிகப்பலவாக அமைந்தன. அவை பெரும்பாலும் பொதுவாகவும், குறிப்பாகவும், அமைந்தன எனலாம். மிகப்பொதுமையுடன், அகப்பொருள் இலக்கணம், இலக்கியம், இயல், இயலிசை, நாடகம் என்பன கையாளப் பட்டன. பா, பாட்டு, கவிதை, கவி, கதை, பிரபந்தம் என்னும் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. ஆசுகவி, மதுரகவி, அதிமதுர சித்திரகவி, நாற்கவி, சந்தம், சிந்து, பனுவல் என்பனவும் உள்ளன. சங்கத் தமிழ், சங்கப்பாடல், பழமொழி, கவிமாலை, முத்துதமிழ் மாலை, செஞ்சொற் புனைமாலை, செந்தமிழ் சொல் பாவின் மாலை, அமிர்தகவி தொடை, செஞ்சொல் வகை, வண்டமிழ்ச் சொற்சந்தம் என்னும் தொடர்களை அவர் கையாண்டுள்ளார். கவியின் வண்மை, மென்மைகளை, நன்மை நயங்களை விளக்கி உணர்ந்த அவர், பெருங்கவி, விருதுகவி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெருடுகவி, இழியுங்கவி, புன்கவி என்னும் தொடர்களால் கவிதைகளைக் குறித்துள்ளனர். கவிராஜா சிங்கம், கவிப்புலவன், பாவலர், நாவலர், மிக்கபுலவோர், நாற்கவிராஜன் என்றுபல புலவர்களால் சிறப்பிக்கப் படுகின்றார்.

இக்குறிப்புகளின் வாயிலாக அவர் கவிதைபற்றிய எத்தகைய எண்ணம், (நினைப்பு) கொண்டிருந்தார் என்பதை உணரமுடிகிறது. கவிதை இலக்கியம் என்பது இயலிசை, நாடக உணர்வோடு அமைய வேண்டும்; நாற்கவி நயம் பொருந்தியிருக்க வேண்டும்; சொற்செட்டு தேவை; ஓசை நயம், பொருட் செறிவு, தமிழியல்பு, புதுமை கொண்டு இலங்க வேண்டும் என்பன குறிப்பிடத்தக்க கருத்துகள் ஆகும்.

நாற்கவிராஜன்

அருணகிரிநாதர் வரகவியாகவும், முருகன் அருள்பெற்ற கவியாகவும் விளங்கினார். மேலும், நால்வகைக் கவியிலும் ஆற்றல் பொருந்தியவராக இருந்தார் எனலாம். மிகுதியான திருப்புகழ்ப் பாக்களைப் (16,000) பாடியமையால் ''வித்தாரகவிஞர்'' எனலாம். ஓசையின்பம் பொருந்திய பாக்களைப் பாடியுள்ளமையால் மதுரகவியாவார். பல வகையான சித்திர கவிகளைப் படைத்தளித்தமையால் சித்திரகவி என்று போற்றும் பெருமைக்குரியவர் ஆவார். திருப்புகழ், கந்தரந்தாதி முதலியவற்றைப் பாடியமையால் 'ஆசுகவி' என்னும் பெருமைக் குரியவராவார்.

ஆசுகவி:

அருணகிரிநாதரே தம் நூலில் ''நான் ஆசு பாடியாடி நாடொறும்'' (1129) என்று குறிப்பிட்டுள்ளார்.

சித்திரகவி:

ஒரு திருப்புகழில் பிறிதொரு திருப்புகழ் மறைந்துவரும் பாடல்கள் உள்ளன. (சான்று 173, 319, 476)

ஒரே எழுத்துவர்க்கத்தில் - தகர எழுத்துவர்க்கத்தில் சொற்கள் அமைந்துள்ள பாடல் ஒருவகைச் சித்திர கவியாம்.

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தித்திதா
திதத்தத்தத் தித்தத் திதித்தித்த தேதுத்து தித்திதத்தா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத் தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதீ தொத்ததே.

(கந்தர் அந்தாதி - 54)

வல்லோசையே மிக்குவரும் பாடல்கள் ஒருவகை (திருப்புகழ் 474, 477)

புனமடந் தைக்குத் தக்க புயத்தன்
குமரனென் றெத்திப் பத்தர் துதிக்கும்
பொருளை நெஞ்சத்துக் கற்பனைமுற்றும் பிறிதேதும்
புகலுமென் பத்தெட் டெட்டியல் தத்வம்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொதுவையென் றொக்கத் தக்கதொ ரத்தந் தனைநாளும்

(திருப். 474)

அற்றைக் கிரைதேடி - அத்தத் திருமாசை
பற்றித் தவியாத - பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா - வெற்பைத் தொளைசீலா
கற்றுற் றுணர்போதா - கச்சிப் பெருமாளே

(திருப். 477)

மெல்லோசை,இடையெடுத்து ஓசையை மிக்குவரும் பாடல்களும் உள்ளன.

செஞ்ச டாடவி மீமிச கங்கை மாமதி தாதகி
திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே
செண்ப காடவி நீடிய துங்க மாமதிள் சூழ்தரு
செந்தில் மாநகர் மேவிய பெருமாளே.

(திருப். 72)

அத்த னன்னை யில்லம் வைத்த சொன்னம் வெள்ளி
அத்தை நண்ணு செல்வ ருடனாகி
அத்து பண்ணு கல்வி சுற்ற மென்னு மல்ல
லற்று நின்னை வல்ல படிபாடி

(திருப். 644)

மருமலர் மணக்கும் வாச நிறைதரு தருக்கள் சூழும்
வயல்புடை கிடக்கு நீல மலர் வாவி
வளமுறு தடத்தி னோடு சரஸ்வதி நதிக்கண் வீறு
வயிரவி வனத்தில் மேவு பெருமாளே

(திருப். 665)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதுரகவி

மதுரகவிகளுக்கு உதாரணமாகக் கீழ்க்காணும் பாடல்களைக் குறிப்பிடலாம். திருப்புகழில்,

குன்றுங் குன்றுஞ் செண்டுங் கன்றும்
படிவளர் முலையினில் ம்ருகமத மெழுகியர்
இந்துஞ் சந்தந் தங்குந் தண்செங்
கமலமு மெனவொளிர் தருமுக வநிதையர்
கொஞ்சுங் கெஞ்சுஞ் செஞ்சும் வஞ்சஞ்
சமரச முறவொரு தொழில்வினை புரிபவர் விரகாலும்

(திரு: 190)

கடலைச் சிறைவைத் துமலர்ப் பொழிலிற்
ப்ரமரத் தையுடற் பொறியிட் டுமடுக்
கமலத் தைமலர்த் திவிடத் தையிரப் பவணுரணாக்
கருதிச் சருவிக் கயிலை கயமுட்
படுவித் துழையைக் கவனத் தடைசிக்
கணையைக் கடைவித் துவடுத் தனையுப் பினின்மேவி

(திருப் : 118)

புவனத் தொருபொற் றொடிசிற் றுதரக்
கருவிற் பவமுற் றுவிதிப் படியிற்
புணர்துக் கசுகப் பயில்வுற் றுமரித் திடிலாவி

புரியட் டகமிட் டதுகட் டியிறுக்
கடிகுத் தெனஅச் சம்விளைத் தலறப்
புரள்வித் துவருத் திமணற் சொரிவித் தனனூடே

(திருப் : 338)

காய மாய வீடு மீறிய கூடு நந்து
புற்பு தந்த னிற்கு ரம்பை கொண்டுநாளுங்
காசி லாசை தேடி வாழ்வினை நாடி யிந்த்ரி
யப்ர மந்த டித்த லைந்து சிந்தைவேறாய்

(திருப் : 637)

கந்த வார்குழல் கோதி மாலை யைப்பு னைந்து
மஞ்ச ளாலா காக மேனி யிற்றி மிர்ந்து
கண்ட மாலைக ளான ஆணிமுத்த ணிந்து தெருவூடே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்ட பேரையெ லாம வாவி னிற்கொ ணர்ந்து
வண்ப யோதர பார மேரு வைத்தி றந்து
கண்களாகியகூர வேலைவிட்டெறிந்து விலைகூறி

(திருப் : 894)

அருணகிரிநாதர் முத்தமிழ் அரசு

செந்தமிழ் மணம் கமழும் அலங்காரம், அந்தாதி, அநுபூதி என்னும் இயற்றமிழ்ப் பாக்களை அவர் பாடியுள்ளார். கணக்கில்லாத நுண்ணியதான தாள அமைப்புகளையும், இசை நுணுக்கங்களையும் கொண்டுள்ளதால் இசைத் தமிழுக்கே இலக்கியங்களாய்த் திகழக் கூடிய திருப்புகழ் மற்றும் திருவகுப்பு என்பனவற்றையும் அவர் பாடியுள்ளார். திருப் புகழ்ப் பாக்களுள்ளும் பிறவற்றிலும் நாடக இயலின் இனிமை புலப்படுமாறும் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாகச் சில,

"அடா அடா நீ மயக்கமேது சொலாய் சொலாய்
வாரம் வைத்த பாதம் இதோ இதோ"

(441)

"அந்தோ! மனமே! நமதாக்கையை நம்பாதே"

(330)

"பட்டிக் கடாவில் வருமந்தகா உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்..."

(கந். அலங். 64)

"ஞானச் சுடர் வடிவாள் கண்டாயடா! அந்தகா!
வந்துயர் சற்றென் கைக்கு எட்டவே"

(கந்தர் அலங்காரம் 25)

அருணகிரிநாதர் மேலும் சந்தக்கவித் தலைவராக ஞானசம்பந்தப் பெருமானைத் தமக்குக் குருமூர்த்தியாகக் கொண்டு பாடிப்பெருமை கொண்டுள்ளார். அவர் ஓர் இசைஞானி, வரகவியாதலின், முருகவேளின் தண்டையொலி, சதங்கை ஒலி, கிண்கிணி ஒலி, சிலம்பு ஒலி யினின்றே சந்த கீத இலக்கண நுணுக்கங்களை எல்லாம் அறிந்தனர் எனலாம்.

"இசைத்திடும் சந்தபேதம் ஒலித்திடும் தண்டைசூடும்
இணைப் பதம்" (திருப் 15)
'சதங்கை தரு கீதம்' (திருப் 204)
"நாதகீத கிண்கிணி" (திரு 236, 100)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிண்கிணிச் சிறுகீதம் (திருப் 107)
இனிய நாத சிலம்பு (திருப் 23)

தண்டை ஒலி, கிண்கிணி ஒலி, சதங்கை ஒலி, நூபுர ஒலியினின்றும் கீத இலக்கணங்கள் மாத்திரமன்று, மறைக் கோடிக்கணக்கானவை உணர்ந்து மகிழ்ந்தனர்.

''இனமுறை விதங்கள் கொஞ்சிய சிறுதங்காக, கிண்கிணி இலகு தண்டையம் புண்டரீகம்'' (1219)

நாத சதகோடி மறை ஒலிடும் நூபுரம் (703) என்கின்றார்.

கவித்திறம்

ஓர் ஆசிரியருடைய (கவிஞருடைய) கவித்திறம் சாலச் சிறந்தது எனக் கூற வேண்டுமானால், அவரிடம் பிற ஆசிரியர்கள் காண்பதற்கு அரிதான சிறந்த இலக்கணங்கள் காணப்பட வேண்டும். அங்ஙனம் இருப்பதைக் கண்டுதான் ஒரு கவியின் பெயர் இவ்வுலகில் பொலிவுடன் திகழும் என்பதில் ஐயம் இல்லை. எ.கா: கம்பராமாயணத்திலுள்ள ஆழ்ந்த பொருள், அரிய உவமானங்கள், தண்ணெனச் செல்லும் நடை, இடத்துக் கேற்ற நடையமைப்பு, கருத்தோட்டம், முதலியவை களைக் கண்டே 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்னும் போற்றுதற்குரியரானார். அருணகிரிநாதரின் திருப்புகழ் முதலிய இலக்கியங்களில் ஆழ்ந்த பொருளமைப்பு, பொருளுக்கேற்ற சந்த அமைப்பு, தடைபடா நடை,இசைக்கும் தாளத்துக்கும் பொருந்தியதாய் இலக்கியம் இருப்பதால் 'வாக்கிற்கு அருணகிரி' என்னும் சிறப்பு அவருக்கு அமைந்தது எனலாம்.

பொருள் நயம்

பொருண்மைக் கோட்பாடு பற்றிய எண்ணங்கள் அருணகிரி நாதருக்கு மிகவும் தெளிவாக இருந்தன. தன் விருப்பம் கூறும் முகமாகவும், தன் காலத்தில் புன்கவிகளின் இழிநிலையைச் சாடும் நிலையிலும் தம் கருத்துகளை அவர் வெளிப் படுத்தியுள்ளார்.

''யாமோதிய கல்வியு மெம்மறிவுந்
தாமேபெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீ ரினியே''

(கந். அநு. 17)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பது கந்தரனுபூதித் தொடர். இதன்மூலம் அவர் நல்ல தமிழில் இறைவன் புகழ்பாட விரும்பினார் என்பது தெளிவாகிறது. முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நிலையில் அவனைப் பாடுவதையே விரும்பினார்; வேண்டினார்; அதையே தம் வாழ்வின் நோக்கமாகவும் அமைத்துக் கொண்டார் எனலாம்.

"துணைச் செம்பொன் பதத்து இன்புற்று
எனக்கு என்று அப் பொருள் தங்கத்
தொடுக்கும் சொல் தமிழ்தந்து இப்படி யாள்வாய்"

என்னும் திருப்புகழ் பாடலிலும்,

"சிகராத்திரி கூறிட்ட வேலும் செஞ்சேவலும்
செந்தமிழாற் பகர்ஆர்வம்"

என்னும் கந்தர் அலங்காரத் தொடராலும் அவருடைய எண்ணம் புலனாகிறது.

இன்னதைப் பாட வேண்டும் என்பது போன்றே, சிலவற்றைப் பாடு பொருளாகக் கொண்டு பாடக்கூடாது என்ற உணர்வும் அருணகிரிநாதருக்கு உண்டு. பெண்ணாசை மீதூர வழிப்பிறழ்ந்த ஆடவரைத் தலைவராக்கி அவர்மனம் மகிழப்பெருமைமிக்க பெண்மையை இழித்துக் கீழுணர்வு மேலோங்க இயற்றிய காமவுணர்வு செறிந்த பாடற்பெருக்கை அவர் கண்டிக்கிறார். பொதுப் பெண்டிரை வருணித்துப் பாடியமையை அவர் வெகுண்டு வெறித்துள்ளார்.

புலவர் நிலையில் மட்டுமின்றி, ஒருசுவைஞன் என்ற நிலையிலும் கந்தர் கவி கற்பதே தகுதியாகவும், இறையடியார் என்னும் நிலையில் அதுவே உய்வு பெற ஒரே வழி என்னும் கொள்கையிலும் அவர் உறுதிப்பட இருந்தார்.

குன்றெறிந்தோன் கவி கேட்டு உருகி
இழியும் கவி கற்றிடா திருப்பீர் -

(*கந் அலங்காரம் 56*)

என்றும்,

'அழித்துப் பிறக்க வொட்டா அயில் வேலவன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்'

(*கந்தர் அலங்காரம் - 2*)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும் கூறித் தெரிவிக்கின்றார். தம்முடைய கந்தர் அலங்காரத்தில், அலங்கார நூலின் ஒரு பாடலைப் படித்தவரும் கூட, எமன் வரினும் அஞ்சத் தேவையில்லை என நூலின் பயனைக் கூறுகின்றார்.

முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன் முருகனாவான் என்பதைக் கந்தரலங்காரத்தில் (பாடல் 22) கூறிய அவர் தமிழ்க்கவியால் இறையருளை ஈட்ட இயலும் என்னும் உணர்வுடன் திகழ்ந்தார்.

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமிங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே

(கந்தஅலங்: 22)

திருவகுப்புப் பாடல்களில், தம்மையுணர்ந்தார் அம் முருகனுக்கே அடிமைப்பட்டு, அவன் அடிகட்குப் பாமாலை புனைந்து சூடுகின்றனர் என்பார்.

பொதுநிலையில் அருணகிரிநாதரின் கருத்து இவ்வாறு இருக்க, இவர் இயற்றிய பாடல்களிலிருந்து இன்னும் சில கருத்துகள் புலனாகின்றன.

தன்னுணர்ச்சிப் பாடல்கள் அமைந்துள்ளமையால், தன்னிலை கூறும் பொருண்மையாக அமைந்தனவோ என எண்ணத் தோன்றுகிறது. முந்துதமிழ் நூலறிவும் மிக்கு இருந்த அருணகிரிநாதர் தாம் இறையுணர்வுக் கவியாக விளங்கினார் எனில் மிகையில்லை எனலாம்.

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்த மொடுநீடு பாடிப் பாடி வாழ்ந்த அவர்
பாக் கருவாக - பாடு பொருளாக அமைந்த முருகனே
தம் ஏட்டை விரும்பி ஆசியளித் தமையை
''தாவடி ஓட்டு மயிலினம் தேவர் தலையினும் என்
பாவடி ஏட்டிலும் பட்டதன்றோ''

(கந். அலங். 15)

என்று கூறியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடிவம்

ஓர் இலக்கியம் சதுரப்பாடுடையதாக அமைய, அதன் பொருள் மட்டும் ஆழமுடைத்தாக இருப்பதோடன்றி, அதன் வடிவம், கற்பனை, உணர்ச்சி முதலியனவும் சிறப்புற அமைந்திடல் வேண்டும். இன்ன வகையான யாப்பின் அமைப்பில் இலக்கியம் அமைய வேண்டும் என அருணகிரிநாதர் வெளிப்படுத்தவில்லை. ஆனால், அவர் இலக்கியங்களைப் பார்க்கும் போது, கந்தர் அநுபூதி – சந்தக்கவி விருத்தங்களால் ஆகியது; திருப்புகழும், திருவகுப்பும் சந்தப் பாக்களால் ஆகியவை; கந்தர் அலங்காரமும், கந்தர் அந்தாதியும் கட்டளைக் கலித்துறையாம். மயில்வேல் ஆகிய விருத்தங்கள் ஆசிரிய விருத்தம். எழுகூற்றிருக்கை இணைக் குறள் ஆசிரியப்பா ஆகும். இப்படிப்பல வகையான யாப்பு வடிவங்களை அவர் கையாண்டுள்ளார்.

தூது, நான்மணிமாலை, கோவை, உலா, மடல், சிந்து, பரணி, கலம்பகம், என்ற சொல்லாட்சிகளைக் காணுமிடத்து அவருக்கு அவ்வகையான இலக்கிய வடிவங்களைப் பற்றிய அறிவு இருந்தது எனலாம். அகஸ்தியர், சங்கப் புலவர், சம்பந்தர், சுந்தரர், சேரமான் பெருமாள், நக்கீரர் போன்ற புலவர்களைக் குறிப்பதிலிருந்து, இலக்கியங்கள் பற்றிய அறிவு கொண்டவராக அவர் இருந்தார் என்பது புலனாகின்றது.

ஆதி பாரதம் என்ற பெருங்கதை, ஆதியுலா, ஆரம், பழமொழி, திருப்புகழ், ஞானநூல், காவியநூல், சிவகலைகள், ஆகமங்கள், சிவாகமங்கள், மறை, ஆரணம், மனுநூல், மதனூல் முதலானவற்றை நூல்களாகவும், இலக்கியங்களாகவும் அவர் குறிக்கின்றார்.

நாற்கவிராசராக விளங்கிய அருணகிரிநாதரின் நயமிக்க பாடற் செல்வாக்கின் காரணமாகப் பிற்காலத்திலும் வண்ண விருத்தங்கள், சந்தப் பாக்கள் பல தோன்றலாயின. சிற்றம்பல வாணர் வண்ணம், அண்ணாமலையார் வண்ணம், முகமதியப் புலவர் காசிம் அவர்களின் ஞானத் திருப்புகழ் முதலியன குறிப்பிடத்தக்கன.

அருணகிரிநாதரின் பாடல்கள் பலவும், அடியெதுகை பெறுவதும், கலைகளும், குழிப்புகளும், தம்முன் மோனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெறுவதும், திருவகுப்பில் கலைகளும் குழிப்பும் ஒரே விதமாக முடிவதும் குறிப்பிடத்தக்கவை.

செய்யுள் நடை

கவிஞன் (புலவன்) தன் எண்ணங்களைப் பொருத்தமான வடிவத்தில் வெளியிடுவதில் சில தனித்த தன்மைகள் அமையும். அருணகிரிநாதர் ஏதேனும் அப்படி இன்னதன்மையில் தான் வெளியிட்டு இருப்பதாகத் தெரிவித்துள்ளாரோ? எனில் இல்லை எனலாம். ஆனால் அவர் தம் கருத்துகளைத் தமக்கே உரிய தனித் தன்மையில் வெளியிடாமலும் இல்லை, தமிழ் மொழிக்கு அவர் தந்திருக்கும் அடைமொழிகளை நோக்கும் போது (முத்தமிழ், இசைத் தமிழ், தண்டமிழ், வண்டமிழ்) அவருக்குத் தமிழ் மொழித் தெளிவும் இருந்திருக்கிறது என்பதை அத்தொடர்கள் தெரிவிக்கின்றன.

'பாடி' என்றும், 'சந்தம்' என்றும் குறிப்பிடும் சொற்களை நோக்கும் போது இசைத்தமிழ் பற்றிய தெளிந்த சிந்தனை புலனாகின்றது.

அவருடைய பாடல்கள் பெரும்பாலும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்துள்ளன. தன்னைப் பற்றிப் பல பாடல்களில் இழித்துப் பேசி, இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடியுள்ளார். இவ்வெளியீட்டு முறை அவருடைய கவிதைகளுக்கு ஏற்றம் தந்துள்ளது எனலாம். நாடகப் பாங்குடையனவாகச் சில பாடல்களைப் பாடியுள்ளார். அதுவும் யமனைத் தன் எதிரியாகவே அழைத்துப் பேசுவதாகக் கந்தரலங்காரப் பாடல் ஒன்று காணப்படுகின்றது.

"தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாடவெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாய டாவந்த காவந்து பார்சற்றென் கைக் கெட்டவே."

(கந். அலங். 25)

அருணகிரிநாதரின் செய்யுள் நடை அவருக்கென்றே தனித்தன்மையாக அமைந்தது எனலாம். அந்நடைக்கு இணை அவருக்கு முன்னும் இல்லை; பின்னும் இல்லை. அவர் பாடியனவாகக் கருதப்படும் 16,000 திருப்புகழ்ப் பாக்களில் இப்போது கிடைப்பன 1307 பாடல்களே. இப்பாடல்களில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைந்துள்ள சந்தவகை 1008. சந்தக் குழிப்புக்குத் தமிழிலக்கியத்தில் ஒரு முழுமையான எடுத்துக் காட்டாக அமைவது அருணகிரிநாதரின் பாடல்களே. தொல்காப்பியம் கூறும் வண்ணங்கள் பலவும் இவர் பாடலில் இருப்பதாகத் தெரிகின்றது. அருணகிரிநாதரைப் பின்பற்றியே வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பல சந்தப்பாக்களைப் பாடினார் என்பதையும் நாம் அறிய முடிகிறது. தமிழ் மக்கள் ஏனைய தமிழ் இலக்கியங்களைப் படித்துச் சுவைப்பது போன்று தானே சுவைக்காமல், பாடிச்சுவைக்கின்ற நிலையை அருணகிரிநாதரின் பாடல்களில் நாம் காணலாம்.

இந்தச் சந்தங்கள் 1008ம் தம்முள் பல பாகுபாடுகள் கொண்டுள்ளன. சில சந்தங்கள் வல்லோசையே மிக்கு நிற்கும்.

"தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தத்தத் தத்தத் தனதானா"

என்னும் சந்தத்ததைக் கூறலாம்.

தமிழிலக்கிய புலவர்களில் மிகுதியான ஒலிக்குறிப்புச் சொற் களையும், எழுத்துக்களையும் பயன்படுத்தி வெற்றிபெற்றவர் அருணகிரிநாதர் ஆவார். இது இவருக்கு உரிய தனித்தன்மை எனலாம்.

மக்கள் வாழ்வில் அன்றாடம் பயன்படுத்திய வடமொழிச் சொற்கள் பலவற்றைத் தம் பாடல்களில் அவர் பயன்படுத்தி யுள்ளார். தமிழ்ச் சொற்களும் வடசொற்களும் முத்தும் பவளமும் போல் இணைக்கப்பட்டு அழகுபெற அமைந் திருப்பதைக் காணலாம். அவர் ஓசை நயத்தைக் கூட்ட வட சொற்களைக் கலந்துள்ளார். சில அடிகள் வடசொற்களால் அமைந்தவையும் உண்டு.

சரண ப்ரதாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரண க்ருபாகர ஞானாகர சுர பாஸ்கரனே

(கந். அலங். 21)

மெல்லோசை மிகுந்த அடிகளாகவே சில அடிகள் அமைந்துள்ளன.

ஐந்திந் த்ரியங்கள் வென்றொன்று மன்பர்
அங்கம் பொருந்தும் அடிகோனே

(திருப் 1237)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தந்தந் தனந்த தந்தந் தனந்த
தந்தந் தனந்த தன தானா"

என்னும் சந்த அமைப்பில் அமைந்துள்ளது.

அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களுள் மிகச் சிறிய பாடல்களும் உள. மிகப்பெரிய பாடல்களும் உள. ஒரே திருப்புகழில் சில பாகங்களை நீக்கிட எஞ்சியபாகம் பிறிதொரு பாடலாக மாறும் படி பாடியிருக்கிறார். தலத்தின் பெயருக்கு ஏற்பவும் சந்தம் எடுத்துப் பாடியுள்ளார். 'விருத்தாசலம்' என்னும் தலத்துக்குப் பாட 'குடத்தாமரை' எனவும், 'மதுராந்தகத்து' என முடிக்க வேண்டிய வழி 'சயிலாங்கனைக்கு' எனவும் எடுத்துப் பாடியுள்ளார்.

சொற்கள் பயன்பாடு

அருணகிரிநாதர் சொற்களைக் கையாளுவதில் சில இடங்களில் தனக்கே உரித்தான தன்மையில் புதுமைகளைப் புகுத்தியுள்ளார்.

மரணயாத்திரையை, "ஒருவர் வருக அரிய பயணம்" என்னும் தொடரால் குறிக்கின்றார். 'கடல்' என்பதை "ஒற்றைப் பகழித் தூணி" என்னும் தொடரால் தெரிவிக்கின்றார். வேசியரைக் 'கப்பரை கைக் கொள வைப்பவர்" என்றும், 'கஞ்சுளி யுந் தடியீந்த போவெனச் சொல்பவர்" என்றும் குறிக்கின்றார்.

சொற்பயிற்சி - சொல்லாட்சி காரணமாகப் பல பொருள் தென்படும் சிலேடையமைப்பு, கீழ்க்கண்ட பாடலில் காணலாம்.

கழல் பணிய வினை கழல்பணி மையணி
கழல் பணிய வருள் மயில் வீரா
கமலை திருமரு கமலை நிருதரு
கமலை தொளை செய்த கதிர்வேலா
பழனி மலைவரு பழநி மலைதரு
பழநி மலைமுரு கவிசாகா

(திருப்புகழ் - 177)

கந்தரந்தாதி பாடல்களும் சொற்களைப் பலவிதமாகப் பிரித்துப் பொருள் கொள்ளும் நிலையில் அமைந்து தனித் தன்மை காட்டுவனவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின் கீழ்
தெளிதரு முத்தமி ழாநித்தர் சேவித்து நின்றதென்னாள்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்விதனைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வே ளிருப்பச் செவிகுனித்தே

(கந். அந்: 25)

சொற்பின்வரு நிலை போன்று அமைந்து பொருள் நயமிலங்க அமைந்த அடிகளும் உள்ளன.

"இலங்கையி லிலங்கிய இலங்களுள் இலங்கருள் இலெங்கணும்
இலங்கென முறையோதி இருங்கலை குரங்கு"

(திருப்புகழ் 704)

இவ்வாறு, இலங்கா தகனத்தை (இலங்கை எரியூண்டு) அழிந்ததைப் பற்றிக் கூறி வந்தவர், 'இலங்கை மாநகரில் இலங்குகின்ற (விளங்குகின்ற) வீடுகளுள் எந்தெந்த இல்லத்தில், அருள் விளங்கவில்லையோ அங்கெல்லாம் தீயே! நீ இலங்குக, எனத் தீயை ஏவின குரங்கு, என்று அநுமாரை வர்ணிக்கின்றார்.

வருணனை

இயற்கையோடு - இறையோடு இணைந்த வாழ்வே அவரது வாழ்வு. எனினும் அவர் பாடல்களில் நீண்ட செறிந்த இயற்கை வருணனைகள் அமைந்தில; குறுகிய கவினுற அமைந்தவையே உள.

நாளிகேரம் வருக்கை பழுத்துதிர்
சோலை சூழ் பழநிப் பதியில்

(திருப்புகழ் 152)

படைக்கும் காட்சியைப் படிப்போர் கண்முன் கொண்டு நிறுத்தும் ஆற்றல்மிகு வருணனைகள் பல அருணகிரிநாதரின் பாடல்களில் அமைந்துள்ளன எனலாம். பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிலைகளின் வருணனை பொருத்தமான சான்றாகும்.

"அறுகு நுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆகமாகி யோர் பாலரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுனுருலி யவருடைய
ஆயி தாதையார் மாயமோகமாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமை மினி வருமையிட மொளுமொளென உடல்வளர
ஆளு மேளமாய் வாலரூபமாய் அவரொடு பெரியோராய்''

(திருப். 862)

மூப்புப் பருவத்தையும் இறுதி நாளையும் வருணிக்கும் தன்மை குறிப்பிடத்தக்க தொன்றாம்.

"முனை யழிந்தது; மட்டி குலைந்தது;
வயது சென்றது; வாய்ப்பல் உதிர்ந்தது;
முதுகு வெஞ்சிலை காட்டி வளைந்தது; ப்ரபையான
முகம் இழிந்தது; நோக்கும் இருண்டது;
இருமல் வந்தது; தூக்கம் ஒழிந்தது;
மொழி தளர்ந்தது; நாக்கு விழுந்தது... பலநோயும்

(திருப். 1073)

வினைமுற்றுக்களால் இயன்ற பாடலாகவும், நடை நயமிக்கதாகவும் அமைந்துள்ளது மேற்கூறிய பாடல். இப்பாடல்கள் மூலம் அவருடைய கவிதைகளில் சிறப்பான நிலையில் வருணனை அமையப் பெற்றிருப்பதனை உணரலாம்.

உவமைகள்

உவமையை எளிமையாகவும் பொருத்தமாகவும் கையாளும் திறம் அருணகிரிநாதரிடம் காணலாம். உயிர்போகும் இறுதி நேரத்தில் கையில் எத்துணைப் பெருஞ்செல்வம் இருப்பினும், அது பயனின்றியே கழியும் எனும் கருத்தை, 'வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறு நிழல்போல்' (கந்தர் அலங்காரம் 18) எனச் செவ்விய உவமையைத் தருகின்றார். அரன் விழி நெருப்புக்கு இரையாகி உருவிழந்த மன்மதனின் உருவமின்மை இவ்விடைக்கு உவமையாகக் கையாளப் படுகின்றது (திருப் 1184)

வேலோ சேவலோ எனக் கருதும் ஐய உவமையாட்சி இவ்வாறே தனிச் சிறப்புடன் அமைகின்றது. உடல் வீட்டிற்கு ஒப்பாக உருக்காட்டும் காட்சியும் இவ்வாறு உள்ளதேயாகும்.

"தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா வெழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார் கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்''

(கந். அலங்காரம் 44)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண்களின் இடையை நூல், துடி, கொடி இவைகளுக்குச் சாதாரணமாகப் புலவர்கள் உவமையாகக் கொண்டு விளக்குவர். அருணகிரிநாதரோ (1184) பெண்ணின் இடையை 'மதன தநுநிகர் இடை' என்கிறார். மன்மதனின் உடம்பு கண்ணுக்குப் புலப்படாதது.' எனவே, அவன் கைக் கரும்புவில்லும் கண்ணுக்குப் புலப்படாததாக உள்ளது என்று விளக்கமுற உவமை செய்துள்ளார். பிறிதோர் இடத்தில், 'வேதா வானோன் எழுதினானிலையோ' (150) என்கிறார். கூந்தலை வருணிக்கும் போது, 'மாதர் மனது போல் கருகின குழல்' (1065) என்கிறார்.

'குயில் போலும் மொழி, கயல் மீன் போலும் விழி, பவளம் போலும் இதழ், வில்லைப் போன்ற நுதல், சந்திரன் போன்ற முகம், இளநகை, மேகம் போன்ற கூந்தல், மலையன்னதனம், கொடியன்ன இடை, பிடியன்ன நடை இவைகளைத் தம்முடையதாகக் கொண்ட குறமகள் கணவோனே' என்று முருகனை அழைப்பதில்தான் எத்தகைய அழகு மிளிர்கின்றது.

"குயில்மொழிக் கயல்விழித் தகிரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் தினநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப் புணர்வோனே"

(திருப்.672)

என்பது பாடல் வரிகள்.

ஒப்பீடு

மணிவாசகரது கனிவு, சம்பந்தப் பெருமானது தாக்கு, அப்பரது சொல் உறுதி, சுந்தரரது நயம், நக்கீரரது நோக்கு இவை பலவற்றையும் அருணகிரிநாதரின் பாடல்களில் ஆங்காங்கே காணலாம்.

மணிவாசகர்

"ஆமாறுஉன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருக்கேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்"

என்று உள்ளம் கனியப் பாடுவார். இக்கனிவினை

"உனைத் தினந் தொழுதிலன்; உனதியல்பினை
உரைத்திலன், பலமலர் கொண்டுன் அடியிணை
உறப் பணிந்திலன்"

என்றும் அருணகிரிநாதரின் பாடல் வரிகளில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வேயுறு தோளிபங்கன்'

என்னும் சம்பந்தப் பெருமானின் கோளறு பதிகத்தின் ஆணை உரையை (தாக்கை) அருணகிரிநாதரின் நாளென் செயும் என்னும் கந்தரலங்காரப் பதிகத்தில் (38)

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்மகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே

(கந். அலங்: 38)

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக் சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே

(கந். அந்: 48)

காணமுடிகிறது.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை மஞ்சோம்"

என்னும் அப்பரின் சொல்லுறுதியை

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்கு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே

(கந். அலங்: 21)

என்னும் பாடலில் காணமுடிகிறது.

சுந்தரர் பாடல் நயம் மிக்கது. ''மற்றைக் கண் தான் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதிரே'' என்னும் தொடர் போல்,

'பாழ் வாழ்வெனும் இப் படுமாயையிலே வீழ்வா
யென என்னை விதித்தனையே...
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே''

(கந்தரனுபூதி 31)

என்னும் தொடர்களில் அவர் விரித்துரைத்துள்ளார்.

திருமுருகாற்றுப் படையில், 'அகில் சுமந்து, ஆரமுழு முதலுருட்டி... இழுமென இழிதரும் அருவி எனவரும் நக்கீரர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாக்கு, அருவியின் ஓட்டத்தை நம்முடைய மனக்கண்முன் கொண்டு வந்து காட்டாநிற்கும். அதுபோல,

வழவழவென உமிழுமது கொழகொழவென ஒழுகி விழ

(திருப்புகழ் 802)

என்னும் அருணகிரிநாதரின் வாக்கு முதுமைப் பருவத்தின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இதுவே நோக்கு என்னும் நயம். படிப்பவரின் மனக்கண் முன்னர்ப் படிக்கும் நிகழ்ச்சி அவர் நேரில் காண்பது போல அவருக்குப் புலப்பட வைத்தல் 'நோக்கு' என்னும் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகும் தன்மைத்து ஆகும்.

முத்தமிழ் வித்தகராம் அருணகிரிநாதரின் பாடல்கள் நாடக நயமும், இசையின்பமும், இயல்செருக்கும் பொருந்தி, எண்சுவையும் கொண்டு எளிமை, இனிமை, ஆழமுடைமை, பெற்று விளங்குகின்றன. எளிதில் புரிந்துகொள்ள இயலாக் கடுநடைக் கவிதைகளும் உள. தமிழியல்போடு, வடசொல் கலந்து, அவர்காலச் சூழலை வெளிக் காட்டுவனவாகவும் உள்ளன.

சந்தக்குழிப்பின் உச்சநிலையை எட்டி, கவிதையின் புற நிலையமைப்பில் ஒரு திருப்புமுனையைத் (மையத்தைத்) தோற்றுவித்தன. இறைவன், இலக்கியம், இன்தமிழ் மூன்றும் கலந்த ஒரு கலவைத் தன்மையே அவருடைய கவிதைக் கோட்பாடு எனலாம். முருகனைப் பாடுவதே அவர்தம் முதல் நோக்கம். இனிமையான சந்தத்தில் ஓசைநயம் பொருந்திய கவிதைகளைப் படைத்தால் அவைசிறக்கும் என்பது அவருடைய திண்ணிய எண்ணம் எனலாம். தமக்கு முன்னிருந்த இலக்கியங்களைக் கற்றுணர்ந்து முற்றறிவின் முதிர்ச்சி யுடையவராய் தம் பாடல்களை அவர் படைத்தளித்தார் எனலாம். அவருடைய பாடல்கள், தாயுமானவர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் போன்றவர்கள் பின்பற்றும் தன்மையிலும் அமைந்தன என்றால் மிகையாகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. சிறப்புச் செய்திகள்

அருணகிரிநாதர் முருகப்பிரானது பழைய வழியடிமை என்பதைத் தமது நூலில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார்.

'பழைய நினது வழியடிமை'

– திருப். 1127.

'என்றனை வழிவழி யன்புசெய்
தொண்டு கொண்டருள் பெருமானே'

(திருப். 358)

'முடியவழி வழியடிமை எனும் உரிமை' (சீர்பாத வகுப்பு) என்னும் தொடர்கள் சான்றாகக் கொள்ளலாம். திருப்புகழ் நூல் முழுமையும் பார்த்தால், சிவபெருமானுக்கு உபதேசித்த பெருமை, திருமாலின் பெருமை, சூர சம்ஹார வெற்றி என்னும் மூன்று செய்திகள் மிகுதியாகக் காணப்படும். வேசையர் மயக்கினின்றும் தம்மை என்றும் காத்தருள வேண்டும் என்னும் விண்ணப்பமே அருணைப்பதித் திருப் புகழில் மிகுதியாகக் காணப்படும். மேலும், பெண்ணாசையே நீக்கற்கு அரிய ஆசை; ஆதலின், அதை ஒழித்து வாழ்தல் வேண்டும் என்னும் கருத்தைப் பல இடங்களில் வற்புறுத்தி யுள்ளார். பெருங்கருணை காரணமாகவே, அருணகிரிநாதர் வேசையர் இன்பத்தின் தீமைகளை விரிவாகவும் அழுத்தமாகவும் பன்முறை எடுத்துக் கூறுகின்றார். "விடமும் அமுதமும்" (பாடல் 516) என்ற பாடல் பெண்கள் உருவம் நாம் எவ்வண்ணம் உணருதல் வேண்டும் என்னும் உணர்ச்சியை ஊட்டவல்லது.

தலவிசேடம், தலத்துச்சுவாமி தேவி, ஆகியோரது பெயர் கூறிப்பாடல் அமைத்துப் பாடியுள்ளார். அருக்கார் (534) என்று தொடங்கும் பாட்லில் வள்ளியம்மையைத் திருடின முருகர் தேவியைத் தம் தோளில் வைத்து ஒளித்து ஓடினதாகக் கூறப்பட்டுள்ளது நயமிக்கதாகும். 742 ஆம் பாடலில் தேவியின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவருளால் சம்பந்தப் பெருமான் தேவாரப் பாக்களை அருளியதும், ஆற்று வெள்ளம் பெருகி வருதலைப் பறை அறிவித்து முன்னதாகத் தெரிவிக்கும் மக்களின் வழக்கமும் குறிக்கப்பட்டுள்ளன.

அருணகிரிநாதருக்கு விசேட வித்தைகளை முருகப் பெருமான் அருள்செய்த தலங்களுள் திருவிடைக் கழியும் ஒன்றாகும்.

"அருணையில் இடைக்கழியில் உரககிரியில் புவியில்
அழகிய செருத்தணியில் வாழ்கற்ப காடவியில்
அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியென இமைப்பொழுதில் வாழ்வித்த வேதியினும்"
– வேடிச்சிகாவலனே!"

என்னும் திருவகுப்பில் பாடியுள்ளார்.

ஸ்ரீமுஷ்ணத்து ஆதிவராகப் பெருமானையும் தமது பதிகத்தில் குறித்துள்ளார் (764, 765) அதில், திருமால் அமுதம் பங்கிட்டபோது சிவபக்தர்க்கு இவ்வமுதைப் பகிர்வேன் என்று பகிர்ந்து கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ள செய்தி குறிப்பிடத் தக்கதொன்றாகும். வேதாரண்யத்தில் இராவணனைக் கொன்ற வீரஹத்தி நீங்க ஸ்ரீ அருள் பெற்ற தலமாதலின் ஸ்ரீராமர் சரிதம் வேதாரணியப் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது. முத்தியருள் திருவாஞ்சியம் என்னும் பெருமை கொண்ட திருவாஞ்சியத்தைப் பாடுகையில், வடவேங்கடத்தில் திருமால் உறைகின்றான் என்ற குறிப்பை "உலகீன்ற பச்சையுமை ய(ண்)ணன் வடவேங்கடத்தில் உறைபவன்" என்னும் தொடரால் குறிக்கின்றார். தஞ்சையம்பதி பதிகத்தில் கண்ணபிரான் தேவலோகத்துப் பாரிஜாத மரத்தைப் பூமியில் கொணர்ந்த லீலையையும் குறித்துப் பாடியுள்ளார். இதனால் இவர் சைவ வைணவ பேதமின்றிப் பாடியுள்ளார் எனலாம். சுவாமி மலையில் பாடியருளியது திருவெழுகூற்றிருக்கைச் செய்யுள ஆகும். முருகவேளை "கல்வி கரை கண்ட புலவோன்" என்னும் (320 பதிகம்) தொடரால் குறிக்கின்றார்; அத்தொடர் வியக்கத்தக்கது. இதனால், "சகலகலா வல்லபமூர்த்தி" என முருகவேளுக்கு ஒரு பெயர் வந்தது. தணிகைத் திருப்புகழ்களில் ஒன்றான "சினத்தவர் முடிக்கும்" (263) என்னும் பாடல் நினைத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் பேராற்றல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருந்திய திருப்புகழ். ஆதலால் 'வீர ஜயத் திருப்புகழ்' என்று பாராட்டப்பெறும். இருமல் நோயைக் குறிக்கும் அருணகிரி நாதர், 'எலும்பு குலுக்கி விடும் இருமல்' என்னும் தொடரால் குறிக்கின்றார். உள்ளதை உள்ளபடியே எடுத்துக்காட்டும் திறம் வியக்கத்தக்கது ஆகும்.

திருப்புகழ், அனுபூதி, அலங்காரம் என்னும் நூல்களில் பெண்கள் மயக்கினின்றும் என்னை விலக்கிக் காத்தருள் எனக் கேட்டுக் கொண்ட தன்மை, திருவகுப்பில் கிடையாது. எம பயம் என்ற குறிப்பும் இல்லை எனலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறைவுரை

முருகப்பெருமானையே பரம்பொருளாகக் கொண்டு வழிபட்டுப் பேறு பெற்ற தவராச யோகியாவார் அருணகிரிநாதர். தோத்திரங்களைச் சந்தப்பாவினால் மழை போல் பொழிந்தவர். இவர் திருவண்ணாமலையில் தோன்றி கன்ம வசத்தால் விலைமாதரோடு கூடிச் சிற்றின்பத்துறையில் மூழ்கி, கைப்பொருள் இழந்து, வறுமையுற்று, பிணி வாய்ப்பட்டு மிகவும் நொந்து போனார். உலகத் துன்பமும், தம் இழிநிலையையும் பொறுக்காமல் உயிரைவிடத் துணிந்தார். இந்நிலையில் முருகப்பெருமான் உயிர் போகாமல் காத்து அருள் செய்தார்.

வாழ்க்கையின் பிற்பகுதியில் தலங்கள்தோறும் சென்று முருகனின் புகழ்பாடி முக்தியடைந்ததுமாகிய வரலாறு காணப்படுகிறது.

பிரபுட தேவராயன் என்னும் மன்னனுக்காக அருணகிரி நாதர் வேண்டியபடி முருகன் மயில் மீதினில் வந்து ஆடிய நடன ஒலி அனைவருடைய காதினிலும் கேட்கக் காட்சி கொடுத்தருளினார். அனைவரும் அற்புதம் அற்புதம் என வியந்தனர். பழனியில் பல காலம் தங்கி அருள் கனிந்து பல பாடல்களைப் பாடியுள்ளார்.

வில்லிபுத்தூராரிடம் வாது செய்து வென்று அருள் செய்தார் அருணகிரிநாதர் என்பது, நாடறிந்தது. இது இருவர் புலமைக்கும் இழுக்கு என்று கருதுவோரும் உள். இருப்பினும், பின்வந்த நூலாசிரியர் பலரும் இதனை உரைத்திருக்கிறார்கள். கந்தப்ப தேசிகர் செய்த தணிகையுலாவில் பின்வருமாறு பாடுகின்றார்.

...அக்கினிதான்
வில்லிபுத்தூ ரன்செவியின் மேலரி வான்பூட்டி
வல்லபத்தின் வாது சென்று வந்ததுகாண்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செங்கோட்டை - கவிராச பண்டாரத்தையா திருமலை முருகன் பிள்ளைத் தமிழில் பின்வருமாறு கூறுகிறார்.

எதிரும் புலவன் வில்லி தொழ
எந்தை யுனக்கந் தாதி சொலி
ஏழைப் புலவர் செவிக் குருத்தோடு
எறியும் கருவி பறித் தெறிந்தே

இவை சிந்திக்கத் தக்கவையாகும்.

எப்படியாயினும், அருணகிரிநாதர் ஒரு தெய்வப்புலவர். பண்டைய திருமுறையாசிரியர் மரபில் வைத்துப் போற்றத் தக்க சான்றோர் என்பதில் தடையில்லை. நூற்றாண்டுகள் தோறும் சான்றோர்கள் தோன்றி இம்மண்ணுலக மக்கள் உய்யும் பொருட்டு அருட்பாடல்கள் பாடி, பக்தியை வளர்த்துள்ளனர். அத்தகைய தக்கார்களில் அருட்குரவர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் அருணகிரிநாதர். அவரின் பாடல்கள் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு முருக பக்தியை நாட்டில் வளர்த்துள்ளன.

இவருக்கு வடமொழியும் தமிழ்மொழியும் ''நான்முந்தி நீ முந்தி'' என்று சொற்களைத் தந்து உதவின. பாமர மக்களுடைய சொற்களை இவர் எடுத்துச் சொல்லியதும், இலக்கிய நயம் சந்த நயம் தோன்றப் பாடியதும் மக்களின் உள்ளத்தை ஈர்த்தன.

இவருடைய தமிழ்வளம், சொல்வன்மை, தொடைநயம், சந்தப் பொழிவு, கற்பனைத் திறம், இதயக் கனிவு, பக்திப் பெருக்கு முதலிய கவிதைப் பண்புகளைப் பாராட்டாதவர் இல்லை.

தாயுமானவர் பல இடங்களில் இவரைப் பாராட்டியுள்ளார்.

''கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன
எந்தை யருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ?''

என்று கந்தரனுபூதி நூலையும் பாராட்டி மகிழ்கின்றார்!

திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் ''அருணகிரி நாதன் அனுபவம் நாயேற்குக் கருணை பொழி போரூரா காட்டு'' என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொட்டிக் கலைச் சுப்பிரமணிய முனிவர்

"அற்புதத் திருப்புகழ், அருணகிரி நாதர் சொல் புலமையுறு சித்ரச் சந்தப்ரவாகமும்..." என்று பாராட்டுகின்றார். இலக்கண விளக்கம் எடுத்தியம்பிய வைத்தியநாத தேசிகர் "கொண்ட லெனச் சந்தத் தமிழ் மாரி பெய் கொற்றவன் அருணகிரிக் கோமான்" என்றார்.

அந்தகக் கவி வீரராகவ முதலியார்,

"அருணகிரிநாதன் திருப்புகழ் சந்ததம் புகழ்ந்து உய்யலாம்" என்பார்.

சிதம்பர முனிவர் தாம் செய்த க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில் 'அருணகிரி நாதர் கடலென மகிழ்ந்து பாடும் திருப்புகழ்' என்று பாராட்டியுள்ளார். இலஞ்சியுலா, திருமலைப்பிள்ளைத் தமிழ் என்பனவும் இவருடைய புகழைப் போற்றுகின்றன.

புலவர் புராணம் பாடிய தண்டபாணி சுவாமிகள் அருணகிரி நாதர் சரித்திரத்தை 82 பாடலாய்ப் பாடியுள்ளார்.

திருப்புகழைக் கேட்கத் திருப்புகழைக் கற்கத் திருப்புகழை நித்தந்
தியானிக்கத் - திருப்புகழை உற்றிருந்து கேட்பாருக் குற்ற
வினையிரண்டும் அற்றிருக்கத் தானே யறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருணகிரிநாதர்: இவர் முருகப்பெருமானே அடி எடுத்துக் கொடுக்க முருகன் புகழைத் திருப்புகழாகப் பாடலானார் என்று கூறப்படுகிறது. அவர் பாடியுள்ளவை கந்தர் அந்தாதி, கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம் என்பன. சந்தப்பாவல பெருமான் என்று போற்றப்படும் அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள் முருகப் பெருமானின் அருளைப் பெற்றுத் தமிழ்கூறு நல்லுலக மக்களுக்கு என்றென்றும் நலம் பயக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

முனைவர் வேல். கார்த்திகேயன்: இந்நூலாசிரியர் புதுச்சேரி, தாகூர் கலைக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். மயிலம் பரிமளவேல் தமிழ் உயராய்வு மையத்தின் மதிப்புறு இயக்குநராகத் திகழ்கிறார். சிவப்பிரகாசரின் காப்புப் பாடல்களும், தனிப்பாடல்களும் ஓர் ஆய்வு, திருநாவுக்கரசர் தேவாரம் காட்டும் வாழ்வியல் நெறிகள் போன்ற நூல்களைப் படைத்தளித்தவர். சைவ இலக்கியம், பன்னிரு சைவத் திருமுறைகள் குறித்துத் தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்க மாநாடுகள் நடத்தி வெற்றி கண்டவர். செந்தமிழ் நம்பி, திருமுறைச் செம்மல், சைவசித்தாந்த ரத்தினம் முதலிய விருதுகள் பெற்றவர்.

ISBN 812602695-1

9 798126 026950

Arunagiri nathar
(Tamil) Rs. 40